உ

பசுபதி துணை.

# பிரசங்கரத்தின தீபம்.

(முதற்பாகம்.)

ஆசிரியர்:

யாழ்ப்பாணத்து உடுவில்,

தமிழ்ப்பண்டிதர்

வ. மு. இரத்தினேசுவரையர்.

பதிப்பு:

கொக்குவில்

சோதிடப்பிரகாச யந்திரசாலை.

கலி: ௫௦௨௪.

1923.

[*Registered Copyright.*]

கணை ட துணை.

திருச்சிற்றம்பலம்.

# பிரசங்கரத்தின தீபம்.

(முதற்பாகம்.)

இஃது

யாழ்ப்பாணத்துச் சுன்னாகம்

ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப்புலவரவர்கள்

மாணவகரும்,

தற்காலம் இந்தியாவில் வசிப்பவரும்,

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தவரும்,

சைவப்பிரசாரகரும்,

ஆகிய

உடுவில்,


தமிழ்ப்பண்டிதர்:

வ. மு. இரத்தினேசுவரஐயரவர்களால்


இயற்றப்பட்டு,

மகிபாலன்பட்டி:

செந்தமிழ் ஆரியமாகிய

இருபெருமொழிப் பண்டித சிரோமணி

ஸ்ரீமாந். மு. கதிரேசன்செட்டியாரவர்கள்

முகவுரையுடன்;


நெற்குப்பை:

ஸ்ரீஷண்முகவிலாச வாசகசாலையின்

அத்தியக்ஷகருள் ஒருவராகிய

முத்து. க. லெ. இராமநாதன்செட்டியாரால்

வெளிப்படுத்தப்பட்டது.

பதிப்பு:

கொக்குவில்

சோதிடப்பிரகாச யந்திரசாலை.

ருதிரோற்காரி௵ ஆடி௴.

பிரதி ஒன்றின் விலை:] 1923. [அணா எட்டு. (சதம் 50.)

உ

கணபதி துணை.

# முகவுரை.

வடமொழி, தென்மொழியாகிய

இருபெருமொழிகளில்

பெரும் பாண்டித்தியம்படைத்து விளங்கும்

மகிபாலன்பட்டி

வித்வசிகாமணி

## ஸ்ரீமத். மு. கதிரேசச்செட்டியாரவர்கள்

அளித்தது.

யாழ்ப்பாணத்து உடுவில் தமிழ்வித்துவான் ஸ்ரீ. வ. மு இரத்தினேசுவரையரவர்கள் எழுதிய "பிரசங்கரத்தினதீபம்" என்னும் இப்புத்தகத்தை ஆங்காங்கு படித்துப்பார்த்தேன். இதன்கட் "சமயம்" எனத்தொடங்கி "சிவபூஜை என்றுஞ் சீரிய இன்பமே" என்பதை இறுதியாக வைத்து வரையப்பட்ட அறுவகை உபந்யாசங்களும், மக்களுக்குச் சமயவுணர்ச்சி, சிவபக்தி முதலிய இன்றியமையாத பொருள்களை நயம்படப் போதிப்பனவாகும்.

இதன் ஆசிரியராகிய ஐயரவர்கள் இதன்கண் தக்கவிடங்களில் மேற்கோளாக எடுத்துக் காட்டிய, தேவார திருவாசக வேதோபநிடத சிவாகமப் பகுதிகள், படிப்பவர்க்கு அவ்வப்பொருள்களைத் தெளிவுற விளக்கும் நிலையில் உள்ளன. தமிழ்நடை செவ்விதாகவும், எளிதிற் பொருளுணர்த்தும் பான்மைத்தாகவும் மிளிர்கின்றது.

இதன் ஆசிரியரது கனிந்த உள்ளத்தின் நிலையையும், சமயப் பற்றையும், சற்சீலத்தையும் இந்நூல், நன்கு வெளிப்படுத்துகின்றது. இத்தகைய நலம்பல அமைந்த இப்புத்தகத்தை, இவர்கள் தமது அருமைத்தமிழாசிரியராகிய சுன்னாகம் வித்துவான் ஸ்ரீ. அ. குமாரசுவாமிப்புலவரவர்களுக்கு நன்றியறிவின் அடையாளமாகச் சமர்ப்பணஞ் செய்திருப்பது, இவ்வாசிரியரின் குருபக்தியின் விசேடத்தை நன்கு புலப்படுத்துவதாகும். இங்ஙனம் மாசிலாமனத்தராய் ஒழுகுதலன்றி மக்கட்பிறப்பாற் பெறக்கிடப்பது வேறென்?

# முகவுரை.

இன்னும், சிவாலயம் பழுத்தொழுகும் புதிய பலதிற உபகியாசங்களை, இவ்வாசிரியர், மக்கட்கு நேரில செய்து வருதல் போலவே இன்னோரன்ன புத்தக உருவமாகவும் வெளிப்படுத்தி உபகரிக்கவும்; அதனால்வரும் சிவபுண்ணியப்பேற்றைத் தாமும், உலகத்தவரும் எய்தி மேன்மேலுமின்புறவும்; இன்ப உருவினனாகிய சிவபிரான் தண்ணருள் புரிவாராக.

மகிபாலன்பட்டி:
ருத்திரோத்காரி௵
வைகாசி௴
௰௫௨.

இங்ஙனம்,
அன்பன்:
மு. கதிரேசன்.

உ

சிவமயம்.

# சிறப்புப்பாயிரம்.

யாழ்ப்பாணத்து நல்லூர்

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்கள்

மருகரும் மாணாக்கரும்

ஆகிய

வித்துவசிரோமணி

ஸ்ரீமத். ந. ச. பொன்னம்பலபிள்ளையவர்களுக்கும்

சுன்னாகம்

வித்துவசிரோமணி

ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப்புலவரவர்களுக்கும்

பிரியமாணவகரும்;

தமிழ் "இரகுவம்மிச" உரையாசிரியரும்;

சுன்னாகம்

சமஸ்கிருத பாடசாலைத் தமிழாசிரியரும்

ஆகிய

புன்னைமாநகர்

வித்துவான்

பிரமஸ்ரீ. சி. கணேசையரவர்கள்

இயற்றியது.

பொன்பூத்த சுன்னைநகர்க் குமார சாமிப்
புலவமணி தனைநினைக்குஞ் சின்ன மாக
இன்பூத்த "பிரசங்க மணித்தீ பப்"பே
ரெழினூலொன் றியற்றியது சமர்ப்பித் தானால்
நன்பூத்த வுடுவையெனும் பதியில் வாழும்
நான்மறையோன் வரதகவி ராச வம்சன்
தென்பூத்த தமிழினொடா ரியமுந் தேர்ந்தோன்
செப்புமிரத் தினேசுரபண் டிதனா மன்றே.

யாழ்ப்பாணத்துச் சுன்னாகம்
ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப்புலவரவர்கள்
மாணவகருள் ஒருவராகிய
தென்கோவை: தமிழ்ப்பண்டிதர்
**ஸ்ரீமத். ச. கந்தையாபிள்ளையவர்கள்**
இயற்றியவை.

சீரா ருடுவை வளநகர் வாழுஞ் செழுமறையோன்
வரா ரிரத்நேச் சுரனெனும் பேர்கொள் இயற்றமிழான்
பேரார் "பிரசங்க ரத்தின ; தீபப்" பெயர்புனைந்து
பாராரு மோரச் செயுநூற் பரிசு பகர்வரிதே. (க.

வேறு.

சுன்னைக் குமார சுவாமிப் புலவனுக்கே
மன்னு முரிமை மருவலால்—இந்நூலில்
சொல்லார் பெருநன்றி தோன்றுந் திறமுணர்ந்து
நல்லோ ருரைப்பார் நலம். (உ.

---

காரைக்குடிவாசரும்,
அஷ்டாவதானசீலரும்
பற்பல பத்தியரூபப் பிரபந்தநூல் ஆசிரியரும்
ஆகிய
**பிர்மஸ்ரீ. சி. த. பாலசுப்பிரமண்யஐயரவர்கள்**
இயற்றியது.

அரசங்கங் கமர்ந்துலகின் முத்தொழிலோரைத்
தன்னுள் அடக்கல் போல
வரசங்க முழங்குடுவில் வந்தரத்தி
நேச்சுர நாவல்லோன்; யாரும்
பரசங்க மாறடக்கு மறைபோல
வாறடக்கிப் பலநான் கியும்
பிரசங்க ரத்தினதீ பப்பிரபந்
தம்புரிந்து பிறங்கி னனால்.

சிவகெங்கை சமஸ்தானத்தைச் சார்ந்த
மழவராயனேந்தல்
பிர்மஸ்ரீ. சிதம்பரதீக்ஷிதரவர்கள் குமாரரும்,
ஜோதிஷ - மாந்திரிக
அஷ்டாவதான சாதுரியரும்,
சிலேடைப்புலி என்னுஞ் சிறப்புப்பெயருடையருமு,
ஆகிய
காரைக்குடி
பிர்மஸ்ரீ. சாமிநாதையரவர்கள்
இயற்றியது.

சீரார்ப்ர சங்கரத்ன தீபநூ லாசிரியன்
பேருலகி லென்றின் பிரபைபோல்—நேரிலக
ஆறை யகத்தடக்கி யன்பன்ரத் நேச்சுரையன்
ஆறெனவே தந்துமகிழ்ந் தான்.

---

காரைக்குடி
தமிழ்ப்பண்டிதர்
பிர்மஸ்ரீ. சு. சிதம்பரையரவர்கள்
சாற்றியது.

கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தேமேவு கொன்றையணி பெம்மானின் றிருவருளைத்
தினமும் போற்றும்
காமேவு முடிவினகர் வாழிரத்தி னேசுரனுங்
கல்வி யாளன்
பாமேவு மினியபிர சங்கரத்ன தீபமிதைப்
பண்பாச் செய்தான்
நாமேவு மினிமையெலா மிந்நூலிற் கண்டுவந்து
நயக்கத் தானே.

# சிறப்புப்பாயிரம்.

"பாண்டியன்" பத்திராதிபர்

**ஸ்ரீமத். ஆ. சத்திவேற்பிள்ளையவர்கள்**

இயற்றியது.

ஆசிரியவிருத்தம்.

இரசங்க மருந்துறுநோய்க் கெனப்பகவின் மலநோயுயிரித் தற்கேற்ற, பிரசங்க ரத்தினதீ பப்பெயரி னொருநூலைப் பிறங்கச் சொற்றான், கரசங்க னறிவரும்பொற் கழலெடுத் தைந்தொழி னடனங் காட்டுமுக்க, ணரசங்க மமருடுவி லிரத்தினேஸ் வரனைய னறிவன்மாதோ.

---

பண்டைச்சங்கத்துப் பரிபாலனஞ்செய்யப்பட்ட
பழந்தமிழிலுள்ள பற்பல அரிய நூல்களை
அச்சுவாகனத்திவர்ந்து வெளிவந்து
நிலவுமாறு
செய்துவரும்
பிர்மஸ்ரீ. மஹாமஹோபாத்தியாய
**வே. சாமிநாதையரவர்கள்**
அபிப்பிராயம்.

---

மகா. ா. ா. ஸ்ரீ. வ. மு. இரத்தினேசுவரஐயர் எழுதிய "பிரசங்கரத்தினதீபம்" என்னும் புத்தகத்திற் சில பகுதிகளைப் படித்துப்பார்த்தேன். குறிப்பிட்ட தலைப்பெயர்களுக்கு ஏற்றவண்ணம் அங்கங்கே எழுதப்பட்டிருக்கும் வாக்கியங்களும், அங்கங்கே காட்டப்பட்டிருக்கும் சிறந்த பாடல்களும் மிக்க இன்பத்தை விளைவிக்கின்றன. பிரசங்கஞ் செய்பவர்களுக்கு இது சிறந்த கருவியாக இருக்கும். இப்புத்தகத்தால், இவருடைய கல்வி கேள்விகள் புலனாகின்றன. அன்பர்கள் இப் புத்தகத்தை வாங்கிப் படித்து இதுபோன்ற அரிய வேலைகளைச் செய்யும்படி இவருக்கு ஊக்கமளிப்பார்களென்று நம்புகிறேன்.

சென்னை:
தியாகராஜவிலாசம்
ருதிரோற்காரிஹு
வைகாசிமீ
உ௩௨.

இங்ஙனம்,

**வே. சாமிநாதையர்.**

சென்னபட்டினம், மயிலாப்பூரில் ஸ்ரீராமகிருஷ்ணமடத்தில்

வசிக்கும்

பிரபோதசைதன்ய

## ஸ்ரீமான். பண்டித மயில்வாகனனாரவர்கள்

ஆபிப்பிராயம்.

"பிரசங்கரத்னதீபம்" அருங்கலை விநோதரும், வடமொழி தமிழ் மொழி ஆகிய இருமொழியினுஞ் சிறந்த பாண்டித்தியம் படைத்து விளங்கியவரு மாகிய யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் ஸ்ரீமத். குமாரசுவாமிப்புலவரவர்களுக்கு உரிமையாக்கப்பட்ட இந் நூல்: அவர்களது மாணாக்கராகிய பிரம்மஸ்ரீ. வ. மு. இரத்திநேசுவரையரவர்களால் ஆக்கப்பட்டது; வைதிகநெறி சைவநெறி என்னும் இரு பெரு நெறிகளினுள்ள ஆழ்ந்த கருத்துக்கள் பலவற்றைச் செவ்வனே எடுத்து விளக்குவது; ஆராய்ந்தெடுத்த மேற்கோள்களைத் தன்னகத்துக்கொண்டது; தெள்ளிய வசனநடை திகழ்வது. இந் நூலாசிரியர், பிரசங்கவாயிலாகத் தமிழுக்கும், சைவசமயத்துக்கும் செய்து வருங் கைங்கரியம் இத்தகை நூல்களை எழுதி வெளியிடுவதனால், பதின்மடங்கதிகமாகிறது. இந் நூல், உலகில் நின்று நிலவிப் பெரும் பயனளிக்குமாறு தமிழ்ப்பெருங்குரவனாகிய குமரவேள் அருள் புரிவாராக.

| | |
|---|---|
| ருதிரோத்காரிஞு வைகாசிமீ உ௫உ. | இங்ஙனம், பண்டிதமயில்வாகனனார், மயிலாப்பூர். |

---

யாழ்ப்பாணத்து நல்லூர்

மகா வித்துவசிரோமணி

ஸ்ரீமத். பொன்னம்பலபிள்ளையவர்கள்

மாணவகர்.

தஞ்சை-உரத்தூர்

## ஸ்ரீமத். கோ. வைத்தியலிங்கப்பிள்ளையவர்கள்

உள்ள அறிக்கை.

---

யாழ்ப்பாணத்து உடுவில் வ. மு. இரத்நேசுவரையரவர்கள் எழுத்தில் வைத்துப் பொழிந்த "பிரசங்கரத்தினதீபம்" எனப் பெயரிய சொற்பொழிவைக் கண்ணுற்றேன். இச் சிறுநூலுள் அவர்

கண்டபெரும்பொருள் ஆறு. அவற்றுள், அவர்முதற்கண் "சமயம்" எனக்கொண்டு சைவசித்தாந்தத்திறனும்; உ. "முதற்பொருள்" மேல்வைத்துப் பதியிலக்கணமும்; ௩. "நாம்யார்" எனத்தொடங்கிப் பசுவிலக்கணமும்; ச. "மும்மலமுகிழ்ப்பு" என மூன்றுபாசவிலக்கணமும்; ரு. "மனிதப்பிறப்பின்மகிமை" என வழங்கி உய்யுநெறியும்; சு. "சிவபூஜை என்றுஞ் சீரியவின்பமே" எனத்தெருண்டு ஆன்மலாபமும் விளக்கித் தெய்வமணங்கமழத் தனது விழுமிய வாற்றலுணர்த்தி, "யான்பெற்ற பேறு பெறுக விவ்வையகம்" என்பதே தெரித்தோதினர் என்க.

ருத்ரோற்காரிஸு
வைகாசிமீ
மஉ.

இங்ஙனம்,
கோ. வைத்தியலிங்கன்,
புலவர்நிலையம்,
காரைக்குடி.

---

## பிரசங்கவியப்பு.

தற்காலம் கொழும்பு மாநகரில்

உயர்தர நீதாசனர் மன்றத்து எழுத்தாளராக இருக்கும்

### ஸ்ரீமத். C. இராசநாயகமுதலியாரவர்கள்

கொடுத்த நல்லுரைப்பத்திரம்.

---

**ஸ்ரீலஸ்ரீ.** வ. மு. இரத்திநேசுவரையரவர்களை நான் எட்டு ஒன்பது வருடங்களாக அறிவேன். தற்காலம், வாலிபர்கள் அறியக்கூடியவாறு தமிழில் இவர்கள் சமய உண்மைகளை எடுத்துப் பிரசங்கிக்கிறார்கள். மாத்தளை விவேகானந்தசபையில் இவர்கள் பண்டிதராகவும் பிரசாரகராகவும் இருந்து தமது கடமைகளை நன்றாகச் செய்தார்கள். இவர்கள் பிரசங்கம் பயன்றரத்தக்கது என்பது எனது கருத்து.

கொழும்பு,
17—7—19.

இங்ஙனம்,
C. இராசநாயகம்.

குகமயம்.

# முன்னறிக்கை.

அறிஞர்காள்!

இந்நிலவுலகின்கண்ணே வழங்கிவரும் பல்வேறுவகைத்தான மொழிகளுள்ளே வடமொழி தென்மொழி ஆகிய இரண்டும் புராதனமும் தைவீகத்தன்மையும் வாய்ந்தன. இவற்றுள்ளே செந்தமிழ் சீரியமொழியாகும். வடமொழி நூலில் விரிந்து செல்லும் பற்பல விடயங்கள் தமிழில் சுருங்கச் சொல்லி விளங்க வைத்திருப்பதை ஊன்றியோசிப்பார் கண்டுணரலாம். பண்டைக்காலத்தில் தண்டமிழ் தெரிந்த பெரியோர் சாமானியரல்லர். முக்கால நிகழ்ச்சிகள் முழுதுமுணர்ந்துள்ள அப் பேரறிவுடையார் இக்கால நவ நாகரிகர்கள் நிலைமையுமறிந்தவர்களே! தமிழில், அறிவு நூல், நீதிநூல், தத்துவசாத்திரம், தருக்கநூல் முதலியன தக்க ஆதாரங்களோடு செய்யப்பட்டிருக்கின்றன.

தமிழ்மொழியிலே பதி - பசு - பாச இலக்கணங்கள் இனிமையுற விளக்கிக் கூறப்பட்டிருக்கின்றன. வேதம் ஆகமம் என்ற வடமொழி முதனூற் கருத்துக்கள் தமிழில் பரக்கக் காணலாம். வடமொழிநூற் கருத்தை வழுவாதவண்ணம் அமைத்துக் காட்டுந் தமிழ்ப் பாசுரங்கள் பலவுள. திருமந்திரம், சிவஞானபாடியம், பட்டினத்துப்பிள்ளையார்பாடல் முதலியன பார்க்க. நிற்க;

நான் எனது சிற்றறிவுக் கெட்டியவாறே பற்பல பிரசங்கஞ் செய்துள்ளேன். அவைகளைக் கேட்ட அன்பர்கள் பலர், சிற்சில பிரசங்கங்களையாவது தொகுத்து அச்சிட்டு வெளிப்படுத்துவான் கேட்டுள்ளார்கள். திருவருள் கூட்டுதலினாலும், காலநிகழ்ச்சி ஒத்தமையினாலும் இப்பொழுது இப் புஸ்தகம் வெளியாக நேர்ந்தது.

பிரசங்கங்களாகிய இரத்தினங்களைத் தீபம்போல் விளக்குமியல்பிற்றாதலின், இந்நூலுக்குப் "பிரசங்கரத்தினதீபம்" என்று நாமஞ் சூட்டப்பட்டது. இன்னும், மொழிகளைப் பிரித்துக் கூட்டுதலால் வேறு பொருளும் காணலாம்.

இந்தப் புத்தகத்தில் வடமொழிச் சொற்கள் பல விரவியும், தமிழில் வரும் அருஞ்சொற்கள் சில அளாவியுமிருக்கும். அவை, காலம், இடம் என்பன நோக்கிச் சேர்க்கப்பட்டன என்றறிக. அன்றி, மூதறிவுடையார் முதல்வன்றிறம் புகன்றமையை ஈண்டும் படியெடுத்தோதலினாலே விடயப் பொருளே அங்கீகரிக்கத் தக்கதாகும்.

இன்னும், இந் நூலினகத்தே தேவாரம், திருவாசகம், சிவ ஞானபோதம், சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம், நீலகண்டபா டியம், திருமந்திரம், தேவாரம்வேதசாரம், புராணம், பௌஷ்க ரஉகமும், பன்னூற்றிரட்டு, உபநிஷதம், தாயுமானசுவாமிகள்பாடல், திருப்புகழ் முதலிய நூல்களின் கருத்துக்களைத் தொகுத்தும் வகுத்தும் உள்ளவாறே எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன.

இப் "பிரசங்கரத்தினதீபம்" என்னும் வசன நூலை எனக்குச் செந்தமிழ் மொழியைச் செவியறிவுறுத்திய சுன்னாகம் வித்துவசி ரோமணி அ. குமாரசுவாமிப்புலவரவர்கள் உபகார ஞாபகச் சின் னமாகச் சமர்ப்பணஞ் செய்து நான் வெளியிடுதலினாலே, இஃது தமிழகத்தார் யாவருக்கும் உரிமையுடையதேயாம்.

இந்நூலை அச்சுவாகனமீதிவர்ந்து வெளிவந்துலவச் செய்த நெற்குப்பை: முத்து. கரு. லெ. இராமநாதன் செட்டியாரவர்க ளுக்கும; அன்பு மீக்கொண்டு காலக்கழிவைப் பொருட்படுத்தாது முகவுரையெழுதிய மகிபாலன்பட்டி வடமொழி தென்மொழிச் சதுரரும், செல்வச்சிகாமணியுமாகிய பண்டிதஸ்ரீ. மு. கதிரேசச் செட்டியாரவர்களுக்கும்; சிறப்புப்பாயிரமீந்து செம்மை தெரித்த அறத்துறைப் பெரியார்க்கும், நண்புகாரணமாக நற்றிருத்தங்கள் பலப்பல புரிந்த செந்நெறியாளர்க்கும்; இயந்திரவெழுத்தில் எழு துறத்தக்க வாக்கிய பஞ்சாங்க கணிதகர்த்தர் ச. இ. சிவராமலிங் கையரவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைச் செலுத்துகின் றேன். பெரியோர் செய்யுந் திருத்தங்கள் அடுத்தபதிப்பில் வெளி யிடப்படும்.

பன்னூற்கலைத் துறையாடிய பெரியார் செய்யும் பணியைச் சின்னூலுணர்ச்சியுடைய சிறியேன் செய்யும்வண்ணம் திருவருள் பாலித்த கலியுக கருணைவிலாசராகிய கதிர்காமப்பதிக் கந்தவே ளைச் சந்ததமும் வந்தித்துப் போற்றுகின்றேன். சுபமஸ்து.

ருதிரோற்காரி ஞு
ஆனிமீ
மஉ

வ. மு. இரத்தினேசுவரையன்,
ஸ்ரீமீனாக்ஷிசுந்தரேசுவரர்கலாசாலை,
கீழைச்சிவப்பட்டி.
(இந்தியா.)

# இப்புத்தகத்தின் உள்ளுறை

பக்கம்.


பாலசுப்பிரமண்யர் திருவுருவம்

முகவுரை

சிறப்புப்பாயிரம் ... ... ... ... ௧

முன்னறிக்கை ... ... ... ... ௭

தெய்வவணக்கம் ... ... ... ... ௧

உரிமையுரை ... ... ... ... ௨

சமயம் ... ... ... ... ... ௫

முதற்பொருள் ... ... ... ... ௰௪

நாம்யார் ... ... ... ... ... ௩௰

மும்மலமுகிழ்ப்பு ... ... ... ௪௧

மனிதப்பிறப்பின் மகிமை ... ... ... ௫௧

சிவபூஜை என்றுஞ் சீரிய இன்பமே ... ௮௰

பிழைதிருத்தம்


---

☞ **கவனிப்பு:**—இப்புஸ்தகத்தில் ஆறு விஷயங்களும் அவற்றுள் ஒவ்வொன்றிலும் பற்பல தலைப்பெயர்க் குறிப்புக், பிரமாணச் செய்யுட்களும் அடங்கியிருக்கின்றன.

குகமயம்.

# பிரசங்க ரத்தின தீபம்.

## தெய்வ வணக்கம்.

### ஆசிரியப்பா.

சீர்மலி கதிரைச் செவ்வேள் திருவடி,
பார்மலி மக்கட் பரப்பெலாம் பழிச்சு
இன்பமே யுதவி யிசையுடன் காத்தலின்;
அன்பிலா வேழைக் கவனருள் கூடுகை
முற்ற முடியா தெனினும், மொழிவழிச்
சற்றுக் காரண காரியச் சார்புகள்
பற்றுவான் செய்து பயின்மன மாயின்;
அற்றம் நோக்கி யவனருள் வான். மனுச்
சிற்றமில் சீரியோர், சாற்றினர். யானும்,
போற்றுவன். யாண்டும் புரைதபுத் தாள்கவே.

### * வேத சார சிவத்துதி.

நமஸ்தே சூலபாணே விபோ விச்வநாத
மகாதேவ சம்போ மகேச த்ரிநேத்ர |
சிவா காந்த சாந்த ஸ்மராரே புராரே
த்வதந்யோ வரேண்யோ ந மாந்யோ ந கண்யஃ ||

* தமிழ்ப்புலவர்சரித்திரம். உப—பக் - உங.

உ

## ஸ்ரீ சிவ சண்முக சரணம்.

இருமுது குரவர் காப்ப ணிளமையோ டிருந்து சேயென் (று)
ஒருவரும் பெயரும், வேறே யொருவருஞ் சாமி யாகாக்
குருபர, னிறைஞ்ச வுண்மை கொடுத்தொரு சாமி யென்னும்
பொருவரும் பெயரும், பூண்ட புனிதனைப் புகழ்ந்து, வாழ்வாம்.

---

துய்யதோர் மறைகளாலுந் துதித்திடற் கரிய செவ்வேள்,
செய்யபே ரடிகள் வாழ்க; சேவலு மயிலும் வாழ்க;
வெய்யசூர் மார்புகீண்ட வேற்படை வாழ்க; அன்னான்
பொய்யில்சீ ரடியார் வாழ்க; வாழ்க இப் புவன மெல்லாம்.

உ

## உரிமை உரை.

*வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமெமது தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.*

---

இச் சிறு நூலை, நான் எனது செந்தமிழ்ப்போதகாசிரியராக விளங்கிய சுன்னுகம் வித்துவசிரோமணி அ. குமாரசுவாமிப் புலவரவர்கள் உலோகோபகாரமாகச் செய்த செந்தமிழ்ப் பரிபாலனார்த்தமான அருஞ்செய்கைகளின் ஞாபகச்சின்னமாகச் சமர்ப்பணஞ் செய்து வெளியிடுகின்றேன். சைவசமயாபிமானிகளும், மற்றைய உண்மைப் பாஷாபிமானிகளும், இந்நூலையும் அங்கீகரிப்பார்கள் என்பது எனது பூரணமான நம்பிக்கை. சுபமஸ்து.

உடுவில்:
துந்துபி௵
ஆனி௴ ௰௬உ.

**வ. மு. இரத்தினேசுவரையன்,**
தண்டமிழ்ப் பண்டிதன்,
கண்டரமாணிக்கம்.

பரப்பிரம்மணே நமஃ ।

# பிரசங்க ரத்தின தீபம்.

## க. சமயம்.

இந்த நிலவுலகின்கண்ணே மனிதராய்ப் பிறந்தவர் யாவருக்கும் சமயநிலை வேண்டும். ஒவ்வொருவர் மனோநிலைக்குத் தக்கவாறே சமயங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. சமயங்கள் கடவுளாலும், கடவுளின் கிருபையை முற்றப்பெற்ற அறிவுடைய பெரியோர்களாலும் உண்டாக்கப்பட்டன என்பது வெளிப்படையாகும். கடவுள் உள்ள காலத்தில் எந்தச் சமயம் இருந்ததோ அதனையே அநாதியாகவுள்ளது என்றும், மகான்கள் உண்டாக்கிய சமயங்கள் எவைகளோ அவைகளே ஆதியாகவுள்ளவை என்றும் சொல்லுவது மரபாகும். மேனாடுகளில் வழங்குஞ் சமயங்கள், அவ்வத் தேய வாசிகளுடைய மனோசத்திக்கு ஏற்றவாறே தேவகிருபையைப் பெற்ற சிற்சில மகான்கள் ஆங்காங்கே அவதரித்து உண்டாக்கியுள்ளனவாம்.

இந்தியா, புண்ணியபூமி, பாரதவருஷம் ஆகிய நாமங்கள் நாம் வாசஞ் செய்யும் ஆரியாவர்த்தத்திற்குப் பண்டைக்காலந் தொடங்கியே வழங்கிவருகின்றன. இவ்விந்தியாவின் வடபாகத்திலுள்ள "ஹிமாசலம்" என்னும் மலை மகாத்மசிரேஷ்டர்கள் வசிக்குமிடமாகும். இமம் = பனி; அசலம் = மலை.

பண்டைக்காலத்தில் இந்தியாவில் குடியேறியவர்களுள்ளே ஆரியர், திராவிடர் ஆகிய இருபிரிவுள்ளவர்கள் ஆஸ்திக புத்தியுடையவர்களே! ஆஸ்திகர்களுக்குச் சமயநிலை புராதனமானதே! நாஸ்திகர்களும் இருக்கலாம். இவர்களுக்குச் சமயம் வேண்டியதில்லை, பேரளவில் ஒரு சமயத்தை யநுசரிக்கலாம். ஆதலால், நிரீச்சுரவாதிகளைப் பற்றி யாதாம் ஆராயவேண்டியதில்லை. அமெரிக்காவிலே நிரீச்சுரவாதக் கட்சியார் பலருளர். நமது தேசத்தி

லும் "இலைமறை காய் போல" தெய்வந் தொழாத நாஸ்திகர் சிலருளர். இங்கே "சமயம்" என்னும் விஷயமாக இச்சமயம் ஆராய்ச்சி செய்வாம்.

கடவுளும், புண்ணிய பாவங்களும் உண்டென்று எண்ணும் உத்தமர்களுக்கே இவ்விஷயம் பயன்றரும்.

சமயமாவது மனிதர்கள் கடவுளை யடைதற்கு வேண்டப் படுவதொரு நெறியாம். சமயம், வழி, மார்க்கம், மதம் என்பன ஒரு பொருளுடையன.

இவ்வுலகத்திலே பல ஆயிரக்கணக்கான சமயங்கள் இருக்கின்றன. தலைவராகிய கடவுள் ஒருவர் இருக்கின்றார் என்றும், அக்கடவுளை ஆன்மாக்கள் சேர்ந்து இன்புறுதலே வீடென்றும், வீடடைதலே ஆன்மசுகம் என்றும் சிற்சில சமயங்கள் கூறும் ஒவ்வொருவரால் ஒவ்வோர்காலத்தில் ஒவ்வொரு பயன் கருதி உண்டாக்கப்பட்ட சமயங்களும் இருக்கின்றன. இந்தச் சமயங்களில் நிற்போர்க்கு இகலோக இன்பமேயன்றிப், பிறவிப் பெரும் பயன் சித்தியாது.

சிலர் "எல்லாச் சமயங்களுஞ் சரிதான்" என்பர். எல்லாச் சமயங்களையும் உண்மைச் சமயங்கள் என்று சொல்லலாமாயினும், வழிபடுவார் கருத்து வேறுபாடுறுதலாலும், பயன் பெறுமாறு பல்வேறு பகுதியடைதலாலும், கடவுளென்று கருதப் பெறுந் தலைவருக்குப் பதித்துவ லக்ஷணங்கள் கிஞ்சித்தும் மின்றெனத் தெரியவருதலாலும் அங்ஙனம் புகல்வது சால்புடைத் தன்று. ஆகவே, ஒவ்வொரு சமயங்களின் தாரதம்மியங்களையும் உள்ளவாறே ஆராய்ந்து உண்மை வெளிவரச் செய்வது விவேகிகள் கடமையாகும். காலம், இடம் முதலியன நோக்கியும் மனிதர்கள் சமயநிலை மாறுகின்றார்கள். சமயத் தடுமாற்றத்தினாலே அவர்கள் மனோபாவம் இன்னதென்று தெரிகின்றதன்றோ! இலௌகிக காரியங்களிலும், பார இலௌகிக காரியங்களிலும் மனம் ஓரோவழிப் படாத ஒருவன் எய்துங்கதி அதோகதிதான்! பாரலௌகிகம் பரலோகத்திற்குரியது என்னும்பொருட்டு. நிற்க,

சமயம், அகச்சமயம் என்றும், புறச்சமயம் என்றும் இரு திறப்படும். அகப்புறச்சமயம், புறப்புறச்சமயம் என்று இரண்டு கூட்டவே சமயங்கள் நால்வகைத்தாகவும் நூலோர் நுவல்வர்

அகச்சமயம் ஆறுவகைப்படும். அவை:—பாடாணவாதசைவம், பேதவாதசைவம், சிவசமவாதசைவம், சிவசங்கிராந்தவாதசைவம், ஈசுவரவவிகாரவாதசைவம், சிவாத்துவிதசைவம் என்பன. புறச்சமயம் தருக்கம், மீமாஞ்சை, ஏகான்மவாதம் முதலியன. அகப்புறச்சமயம் பாசுபதம், மாவிரதம், வாமம் முதலியன. புறப்புறச்சமயம் உலோகாயதம் ஆருகதம் முதலியன. கிறிஸ்து சமயம் முதலியன இக்காலப் புறச்சமயங்கள். சுத்தாத்துவிதசைவ சித்தாந்தசமயமிலேயே எவருக்கும் பரமுத்தி பயக்கவல்லது. அதனையே இங்கே சிறிது விசாரிப்பாம். மற்றைச் சமயங்களைப் பற்றிச் சிவஞானபோதமாபாடியம்: அவை:—க-பக்க முதற் பார்த்தறிக.

இருவினையொப்பும் மலபரிபாகமும் ஆன்மாக்கள் கடவுளை யடைய முன்னே காணப்படவேண்டியன. (சத்திநிபாதம் என்ற சுத்த அறிவின் பிரகாசத்தை ஆன்மாவின்றன்மை யுணர்ந்தார்மாட்டுக் காண்டல் கூடும்.) இவையெல்லாஞ் சுத்தாத்துவித சைவசித்தாந்தநெறியொழுகும் மெய்யடியார்பாற் செறிந்திருக்கும். சைவம் என்பது சிவசம்பந்தமுடையது. சிவம் மங்களகரமுடையது. பரமசிவமே மற்றைச் சமயவழி முறைபிறழாது நின்றோர்க்கும் அருள் பாலிப்பார். (சைவசமயம் என்பதை விட்டு, இந்து மதம் என்று புனைபெயர் கூறுவது பொருத்தமின்று. ஆனால், இந்தியாவிலுள்ள சமயங்கள் எல்லாவற்றிற்கும் இந்துமதம் என்று பெயர் கூறலாம் போலும்!) வைஷ்ணவம் விட்டுணுசம்பந்தமானது. இச்சமயமும் இந்தியாவில் பிரபலம்பெற்ற சமயமே! ஆதித்தன், அக்கினி முதலிய தேவர்களையும் சிலர் பதியாகக்கொண்டு வழிபாடுசெய்கின்றார்கள். எந்தச் சமயியாக இருந்தாலும் இத் அகிதங்களை உணர்ந்தும், மதத்தால் மதநிந்தனைசெய்யாதுமிருத்தலே முறைமையாம். சமயிகள் செய்யும் பிழைகள் சமயத்தின்பாலதாகாது.

---

## சைவசமயப் பெருமை.

சைவசமயமானது அநாதியாகவுள்ளது: சைவசமயத்தை இன்ன காலத்தில் இன்ன இடத்தில் இன்ன பேருடையார் உண்டாக்கினர் என்று அளவைகளுக்கும், சுருதி, யுக்தி அநுபவங்களுக்கும் ஒப்பக்கூற எவராலும் முடியாது. ஆதாரமற்ற வார்த்தைகள் அபிர்வசனமாகவே முடியும். மனிதர்களால் உண்டாக்கப்பட்டுக் காலந்தோறும் திருத்தப்படுஞ் சில நூல்களை முந்

நூல்களாகக்கொள்ளுஞ் சில சமயிகள் சைவசமயத்தின்மேற் சிற்சில தோடாரோபணங் கூறி மகிழ்வார்கள். அவர்கள் "அசம்பாவிதமும்; தன்னொரு பொருள் கருதிக் கூறல்" என்ற குற்றத்துட்பட்டதுமான வாதத்தை மறந்துவிடுவார்களேயானால், அவர்களும் மேன்மையடைவார்கள். மேலே சொல்லியவண்ணம் அநாதிநித்தியமான சைவசமயத்தைச் சிவபெருமானே தமது அருட்சத்தியால் பரிபாலித்துவருகின்றார். திருத்தொண்டர்கள் பலர் காலந்தோறும் அவதாரஞ்செய்தும் சைவத்தை மெய்ச்சமயமென்று அற்புதங்களால் நிறுவியிருக்கின்றார்கள். இவ்வுண்மைகளைச் சரித்திரங்களினாலே நாம் அறிகின்றோம். பாண்டிமண்டலம் ஈழமண்டலம் முதலிய இடங்களில் சைவசமயவிருத்தியே பெரிதும் உளதென்பது சொல்லாதே புலப்படும்.

சில அடியார்கள் "சைவம்" என்று பேர் விளக்காது சைவசமயசின்னங்களாகிய விபூதி, உருத்திராட்சம், ஸ்ரீ பஞ்சாக்ஷரம் என்பவைகளைப் போற்றி ஏற்றங் கற்பித்திருக்கின்றார்கள். பஞ்சாக்ஷரமே அகத்திலுள்ள அகத்தை அகற்றும் அற்புத சத்திவாய்ந்தது. சிவசின்னப்பெருமை யுணராதார் சைவசமயியாவது யாண்டையது? வேடம் எப்படியானாலும் அன்போடு கூடிய மனமே ஆன்ம பரிசுத்தத்தை உண்டாக்கவல்லது. மனமாசுடையாருஞ் சிவவேடதாரிகளானால் மதிப்பைப் பெறுவார்கள்! இம்மதிப்பால் பிறவிப்பயன் பின்னடையும்! இஃது ஆன்மசுகத்தின்பாலதாகாது. ஆகவே, புறம் அகம் ஆகிய இரண்டும் சைவசமயிகளால் சுத்தமாகக் காக்கப்படுதல் ஆவசியகமாம். சைவசமயம் சீவதயையிலே தான் தலைசிறந்திருக்கின்றது. சைவசமயத்திலே சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற உபாயமான படிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. மோட்சம் என்னும் மேன்மாளிகையை யடைய இக்கூறிய நாற்படிகள் சிறந்த துணையாக இருக்கின்றன. "சோபானக்கிரமம்" என்ற மூதறிவுடையார் திருவாக்கையுங் காண்க. "விரும்புஞ் சரியை முதல் மெய்ஞ்ஞான நான்கும், அரும்புமலர் காய்கனிபோலன்றோ பராபரமே!" என்று நாற்பாதங்களின் சாதனவிசிட்ட முரைக்கப்பட்டது.

இச்சைவசமயிகள், பதி பசு பாசம் என மூன்று பொருள்கள் உள்ளன என்றும், இவை அநாதிநித்திய வஸ்துக்கள் என்றும், பதியைப் பசு சென்றடைதலே முத்தியென்றும், பாசந்தேயச் சிவஞானமுண்டாகும் என்றும், பாசம் நீங்கப் பசு புண்ணியம்

பதி புண்ணியங்களைத் திருவருட் சமர்ப்பணமாகவே செய்தல்வேண்டும் என்றும் விசேஷமாக எடுத்துக் கூறுவார்கள். சைவசமயிகள் சிலர், விபூதி பூசுவதுதான் சைவம் என்பர்; சிலர், மாமிசம் புசியாமையே சைவம் என்பர், சிலர் சிவபூஜை செய்வதே சைவம் என்பர். இவை தனித்தனியே சைவசமய இலக்ஷணமாகாவாம். சைவம் என்ற மங்களநாமத்தை வைத்துக்கொண்ட சிலர், காடன், மாடன், காட்டேறி, கறுப்பன், சங்கிலிக் கறுப்பன், பெரியதம்பிரான் முதலிய துஷ்டதேவதைகளுக்கு மிருகபலி செலுத்தி அமங்களமான வாழ்வை விரும்புகின்றார்கள். சைவசமயிகள் என்று விபூதியை நன்றாகத் தேகம் முழுவதும் இட்ட சில போலி மனிதர்கள், கள், சாராயம், மாம்சம் முதலியவைகளை வைத்துக் குருபூசை சத்திபூசை என்று பாசாங்குபண்ணி, அவைகளை விலாப்புடைக்க உண்டு மாயாவாதப் படுகுழியில் வீழ்ந்து அவலப்படுகின்றார்கள். சிலர், அறிவீனத்தினாலே மகமதியருடைய பள்ளிவாசலுக்கும், கத்தோலிக்க மரியாள் கோயிலுக்கும் காணிக்கை கொடுத்து வருகின்றார்கள். கோயில் என்ற பெயரே அந்தப் பரசமயிகள் கட்டடங்களுக்குக் கிடையாது. இந்த அவிவேகமான செய்கை நோக்கிச் சைவசமயிகளை அஞ்ஞானிகள் என்று பிறசமயிகள் பரிகாசஞ் செய்கின்றார்கள். தமிழ் பேசுவோனைத் தமிழன் என்று சொல்வது வழக்கமானாலும், சைவசமயத்தவனைத் தமிழ்ச் சமயி என்று சொல்வது பெரும் பிழையேயாகும். சைவசமயிகள் இன்னோரன்ன குறைபாடுகளை நீக்கி நடப்பது பெரிய புண்ணிய வழியாகும். பெறுதற்கரிய மனிதப் பிறவியில் வந்தது பூர்வ புண்ணிய விசேடமென்றுணர்ந்து சற்சமயமாகிய சைவசமயத்தை அநுஷ்டியாது இஷ்டப்படியே சமயநிலை மாறுவது நரகத் துன்பத்திற்கு ஏதுவாகும்.

இன்னும் சைவசமயிகளுக்குரிய சில இலக்கணங்களை ஸ்ரீலஸ்ரீ. நாவலரவர்கள் எழுதியுள்ளார்கள். சில காட்டுதும்.

க. கொலை, களவு, கள்ளுண்ணல், மற்ச மாமிசம் புசித்தல், வியபிசாரம் முதலியவற்றை விலக்கி நடத்தல் வேண்டும். (இந்தியாவிலுள்ள பிராம்மணத் தொகுதியாருட் (பலர்) மேற்கண்ட மஹாபாதகங்களை அஞ்சாது செய்துவருகின்றார்கள். மற்றையோரைப் பற்றி யெழுதுவது கூடாது.)

உ. உயிர்களுக்கு இரங்குதல், சத்தியமுரைத்தல், வறியாருக்கு ஒருபிடி அன்னமாவது கொடுத்தல், செய்ந்நன்றி மறவாமை முதலியவற்றை மரணபரியந்தம் பாதுகாத்து நடப்பது.

ங. பிதா, மாதா, பாட்டன், பாட்டி, தமையன், மாமன், உபாத்தியாயர், குரு, அரசன் முதலிய பெரியோர்களை எந்நாளும் அன்போடு உபசரிப்பது.

ச. தீக்ஷை பெற்றுக்கொள்வது. (தீக்ஷை அவசியம் என்பது பின்னர்க் கூறுதும்.)

ரு. விபூதி ருத்திராக்ஷம் தரிப்பது.

சு. தினந்தோறும் சந்தியாவந்தனம், ஜபம், பூசை என்பவைகளை ஏற்றபடி செய்தல்.

எ. சிவாலய தரிசனஞ் செய்வது.

அ. சைவவினாவிடை, சிதம்பரமான்மியம், பெரியபுராணம், தேவார திருவாசகம் முதலியன படித்தல், அல்லது படிக்கக் கேட்பது.

---

## பெரியார் கூறிய சைவசமயப் பெருமை.

### சிவஞானசித்தியார்.

வாழ்வெனும் மையல் விட்டு வறுமையாஞ் சிறுமைதப்பித்
தாழ்வெனுந் தன்மையோடுஞ் சைவமாஞ் சமயஞ் சாரும்
ஊழ்பெற லரிதுசால வுயர்சிவ ஞானத் தாலே
போழிள மதியினானைப் போற்றுவார் கதியுற் றாரே.

"யாதொரு தெய்வங்கொண்டீ ரத்தெய்வமாகி யாங்கே
மாதொரு பாகனார்தாம் வருவார்."

## தாயுமானவர்.

சைவசமயமே சமயஞ் சமயாதீதப் பழம்பொருளைக்
கைவந்திடவே மன்றுள்வெளி காட்டுமிந்தக் கருத்தைவிட்டுப்
பொய்வந்துழலுஞ் சமயநெறி புகுதவேண்டாம் முத்திதருந்
தெய்வசபையைக் காண்பதற்குச் சேரவாருஞ் செகத்தீரே.

---

## திருமூலர்.

கற்பன கற்றுக் கலைமன்னு மெய்யோக
முற்பத ஞான முறைமுறை நண்ணியே
தொற்பத மேவித் துரிசற்று மேலான
தற்பரங் கண்டுளோர் சைவசித் தாந்தரே.

உடலான வைந்தையு மோராறு மைந்து
மடலான மாமாயை மற்றுள்ள நீவப்
படலான. கேவல பாசந் துடைத்துத்
திடமாய்த் தனையுறல் சித்தாந்த மார்க்கமே.

பொன்னாற் சிவசாத னம்பூதி சாதன
நன்மார்க்க சாதன மாஞான சாதனந்
துன்மார்க்க சாதனந் தோன்றாத சாதனஞ்
சன்மார்க்க சாதன மாஞ்சுத்த சைவர்க்கே.

---

## சைவசமய நெறிநின்றார்க்குளுயரிய குரவர்துதி.

சைவத்தின் மேற்சமயம் வேறிலை யதிற் சார்சிவமாம் [வாய
தெய்வத்தின் மேற்றெய்வ மில்லெனு நான்மறைச் செம்பொருள்
மைவைத்த சீர்த்திருத் தேவாரமுந் திரு வாசகமும்
உய்வைத் தரச்செய்த நால்வர்பொற் றாளெம் முயிர்த்துணையே.

பேயன்ன புறச்சமயப் பிணக்குநூல்வழியனைத்தும் பிழையேயன்றி
வாயன்மை தெளிந்து சைவசித்தாந்த வழி தேறி[illegible]
போயண்மீ யைந்தெழுத்தும் பொருளாக் கொண்ட [ற்றேனால்
நாயன்மார் திருக்கூட்டம் பணிந்திறைஞ்சும் பெருவாழ்வு நான்பெ

சைவம் வேதமயம் ஜயது!

இவ்வித வுயர்ச்சிகளையுடைய சைவசமயமானது கடவுள் அருளிச்செய்த பொதுநூலாகிய வேதத்தையும், சிறப்புநூலாகிய ஆகமத்தையும் முதனூல்களாகக்கொண்டுள்ளது. வேதம் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என நான்காம். ஆகமம் காமிகம்முதல் வாதுளமீறாகிய இருபத்தெட்டாகும். வேதாகமங்களில் பசு பதி பாச லக்ஷணங்களும், யாகம், ஆலய அமைப்பு முதலியனவும் சரியை, கிரியை, யோக, ஞானங்களின் அநுஷ்டிக்கு முறைகளும், பிறவும் கூறப்பட்டுள்ளன.

வேதம் என்றால் புத்தகம் என்று சிலர் அர்த்தங் கூறுவர். இந்த அர்த்தம் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டதாம். அஃது ஒரு சிறிதும் பொருந்தாது. புத்தகம் என்றால் ஆதியேயன்றி அநாதியாகாது. வேதம் அறிவிப்பது என்னும் பொருட்டு. வேதம் அநாதிகடவுளாகிய சிவபெருமானால் அருளிச்செய்யப்பட்டது. கடவுளின் கிருபையைப் பூரணமாகப்பெற்ற மகர்ஷிகளால் பாதுகாக்கப்பெற்ற பெருமை வேதத்திற்குண்டு. வேதத்தில் சிற்சில இருடிகளின் நாமங்களும் வரும். இருஷிகளின் தோத்திரங்களும் காணப்படும். இக்காரணங்களைக் கொண்டு வேதம் ஆதியென்று துணிதல் சால்புடைத்தன்றாம். வேதத்தை உபதேசக்கிரமமாக அறிய வேண்டும் என்பது "சுருதி" என்ற பெயரால் விளங்கிக் கொள்ளலாம். (பொருள் நிர்ணயஞ்செய்வது அருமையாக இருப்பதால் வேதம் மறையெனப்பட்டது.)

இந்தப்பூமிக்குள்ள கவர்ச்சி நேற்று இன்று உண்டாயதன்று. பூமிக்குக் கவர்ச்சி யிருக்கின்றதென்பதைச் சில வருஷங்களுக்கு முன்புதான் சில தத்துவசாஸ்திரிகள் கண்டுபிடித்தார்கள். இதனால், பூமிக்குக் கவர்ச்சி இடையிலுண்டாயது என்று கூறுவது பொருத்தமாகுமா? ஆகாது. இன்ன தன்மைத்தாகவே வேதங்களை மகாதபசிரேட்டர்கள் கண்டு பிறருக்கு உபதேசித்தும், ஈசுவரனைத் துதித்துமிருக்கின்றார்கள். சில இருஷிகள் நாமதேயங்களும், சில கீர்த்தன சுலோகங்களும் வேதங்களில் வரலாம். "இன்ன வேதம் இன்ன பேருடையவருக்கு உபதேசிக்கப்பட்டது" என்பது வேதத்துடன் சம்பந்தமாக இருக்கும். இவைகளால் வேதம் ஆதியென்று சொல்லிவிடமுடியாது. வேதம் ஆகமம் இரண்டும், பழமையும் முதன்மையுமுடையன என்பது தெளிக.

சில காஷாய வேடச் சாமிகளும், ஆங்கிலபாடையே தேவபாடையென்று கொண்டாடும் உத்தம ஒழுக்கமற்ற சில போலி மனிதர்களும், தேவதாபக்தி, தேசாபிமானம், பாஷாபிமானம் முதலியவற்றை அந்நியருக்கு விக்கிரயஞ்செய்த நவநாகரிகர்கள் சிலரும் சமயநிந்தனைசெய்து பாழ்நரகத்திற்கு ஆளாகின்றார்கள். சிலர், "வேதம் எழுதி ஆயிரம் வருடம், ஐஞ்ஞூறு வருஷம்" என்று கணக்குங் கண்டுபிடித்திருக்கின்றார்கள்! இவர்கள் மதியிருந்தவாறென்னை? இவர்களால் பூமிக்கு ஒருபாரமன்றிப் பயனின்றாம்! "வேதம் அப்பிரமாணம்" என்று ஒருசாரார் கூறுவர். வேதாகமங்கள் சமத்துவமுடையன என்றும் இரண்டும் பிரமாண நூல்களே என்றும் முன்பு சிலபெரியார் நல்லறிவுச்சுடர்கொளுத்தியிருக்கின்றார்கள். அவை விரிவஞ்சி விடுக்கப்பட்டன. சைவசமயத்தின் பெருமைகள் பலவற்றுள் சிற்சில பாகம் எம்மால் சுருக்கிக் காட்டப்பட்டன. இனிக் கடவுளின் இலக்கணத்திற் சிறிது புகல்வாம்.

---

# தேவாரம்.

திருச்சிற்றம்பலம்.

அறிவினான் மிக்க வறுவகைச் சமயம்
அவ்வவர்க் கங்கே யாரருள் புரிந்து
வெறியுமா கடலிலங்கையர் கோனைத்
துலங்க மால்வரைக் கீழடர்த் திட்டுக்
குறிகொள் பாடலி னின்னிசை கேட்டுக்
கோலவா ளொடு நாளது கொடுத்த
செறிவு கண்டுநின் றிருவடி யடைந்தேன்
செழும் பொழிற்றிருப் புன்கூரு ளானே.

திருச்சிற்றம்பலம்.

(சுந். திருப்புன்கூர்.)

---

# சைவசமய சம்பந்தமுடைய தத்துவ விளக்கம்.

பிரமம்.

சிவதத்துவம்.

சத்திதத்துவம்.

ஈசுவரதத்துவம். (பிரணவம்)

சுத்த வித்தியாதத்துவம்.

மாயாதத்துவம்.

காலம் நியதி கலை (புருடன்)

வித்தை பிரகிருதி (சித்தம்)

ராகம்

குணதத்துவம்

புத்திதத்துவம்

அகங்காரதத்துவம்

(சாத்துவிகம்) தைசதம் (ராஜசம்) வைகாரிகம் (தாமசம்) பூதாதி

மனம் ஞானேந்திரியம் கன்மேந்திரியம் தன்மாத்திரை

பூதம்.

---

☞ குறிப்பு:—ஞானேந்திரியம் - சோத்திரம், துவக்கு, சட்சு சிங்குவை, ஆக்கிராணம்.

கன்மேந்திரியம் - வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம்.

தன்மாத்திரை - சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம்.

பூதம் - ஆகாயம், வாயு, தேயு, அப்பு, பிருதிவி.

(சிவாத்துவதீபிகை, சிவப்பிரகாசவுரை முதலியவற்றில் தத்துவ முறைகளை விரிவாகக் காண்க.)

# மார்க்கசங்கிரகம்.

௧. உலோகாயதம். இது கண்டதைக்கொண்டு வாதஞ் செய்யும்முறைபற்றிக் காட்சிவாதம் எனவும்படும்.

இம்மார்க்கப்பிரிவு: தேகான்மவாதம், சூக்குமதேகான்மவாதம், இந்திரியான்மவாதம், அந்தக்கரணான்மவாதம், பிராணான்மவாதம் என்பன.

௨. பௌத்தம். "கந்தமொடுயிர்படுங்கணபங்கம்" என்று கொள்ளப்படுதலின், இது கணபங்கவாதம் எனவும் பெயர்பெறும்.

இம்மதப்பிரிவு: மாத்தியமிகம் யோகாசாரம், சௌத்திராந்திகம், வைபாடிகம் என்பன.

௩. ஆருகதம். பரமாணுகாரணவாதம் அநேகாந்தவாதம் என்றுங் கூறுவர்.

௪. தருக்கம். பரமாணுகாரணவாதம் என்பர்.

இதன்பிரிவு:—வைசேடிகம்
நையாயிகம்.

௫. மீமாஞ்சம்.

௬. பட்டாசாரியமதம்.

௭. பிரபாகரமதம்.

௮. ஏகான்மவாதம்.

இதன் பிரிவு: மாயாவாதம், பாற்கரியவாதம், கிரீடப்பிரமவாதம், சத்தப்பிரமவாதம் என்பன.

௯. சாங்கியம்.

௰. யோகமதம்.

௰௧. பாஞ்சராத்திரம்.

௰௨. பாசுபதம்.

௰௩. மாவிரதம். உற்பத்திவாதம்.

௰௪. காபாலம். ஆவேசவாதம்.

௰௫. வாமம்.

௰௬. சுத்தசாத்தம்.

௰௭. வைரவம்.

௰௮. ஐக்கவாதசைவம்.

௰௯. பாடாணவாதசைவம்.

௨௰. பேதவாதசைவம்.

உ௩. சிவசமவாதசைவம்.
உ௪. ஈசுவரவவிகாரவாதசைவம்.
உ௫. சிவசங்கிராந்தவாதசைவம்.
உ௬. சிவாத்துவிதசைவம்.
உ௭. சுத்தசைவம்.
உ௮. பரிணாமவாதம்.
உ௯. பாதஞ்சலம்.
உ௰. அநேகேச்சுரவாதம்.
உ௰க. சித்தான்மவாதம்.
௩௰. அவிகாரவாதம்.
௩௰க. உருவசமவாதம்.
௩௰உ. வீரசைவம்.

## உ. முதற்பொருள்.

விரிஞ்சன்பால் தேவராலும் வெலற்கரும் விறலோ னாகிப்
பெருஞ்சுரர் பதமும் வேத வொழுக்கமும்பிறவு மாற்றி
அருஞ்சிறை யவர்க்குச் செய்த அவுணர்கோ னவிகொள்வான்
பரஞ்சுடர் உருவாய் வந்த குமரனைப் பணிதல்செய்வாம்.

காணப்படும் இந்தவுலகிற்கும், உலகின்கணுள்ள இயங்குந்திணை, இயங்காத்திணை ஆகிய இருவகைப்பொருள்களுக்கும் முதலான ஒருபொருள் என்றும் உண்டெனக் கூறுதல்பற்றி முதற்பொருள் என்று மகுடநாமஞ் சூட்டினேம். முதல் பொருள் = முதலிலுள்ள பொருள்; முதன்மையுடைய பொருள். அது கடவுளே. "ஏகோஹி ருத்ர:" என்று தைத்திரீய உபநிடதங் கூறுமாறு அறிக.

### முன்னுரை.

சராசரங்களை ஆக்கியும், அளித்தும், அழித்தும் நீக்கருஞ் சத்தியால் திருவிளையாட்டயரும் ஒருபொருளையே முதற்பொருள் என்று சாஸ்திரங்களுஞ் சாற்றும். ஒருபொருள் = ஒப்பும் உயர்வுமில்லாத கடவுள். இந்தப் பூமிக்கும் உபமானங் கூறலாம். பூமியில் காணப்படும் பல்வித விசித்திரப்பொருள்களுக்கும் சமானங்கண்டு

கற்பித்துவிடலாம். முதற்பொருளுக்கோ சமமானவொருபொருளை எடுத்துக்காட்ட எவராலும் முடியாது. "முதக்கார்க்கு முதக்கான் ஆதிக்காதி" என்றும்; "முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே" என்றும் பெரியார் திருவாய்மலர்ந்தருளி யிருக்கின்றார்.

ஒவ்வொரு| பொருள்களாகக் குறிக்கப்படுவன யாவும் அழியாத ஆற்றல் அமைந்தனவாவென்னில்; அற்றன்று; முதற்பொருளும், அப்பொருளைச் சார்ந்து தூய்மையுறுமொருபொருளும், தூய்மை யற்றதொருபொருளுமாகிய மூன்றும் அநாதிநித்தியமாக மற்றைய யாவும் அழிந்தேவிடும். அழியாதவஸ்து அநாதிநித்திய மாகவும், அழியும் வஸ்து அநித்தியமாகவும் இருத்தல் வேண்டும். இன்னும், ஒரு பணக்காரனை முதலாளி என்றும், வேலைக்காரனை அடிமையென்றும் சொல்வது உலகினர் வழக்கமே! இதனால், ஆண்டான், அடிமையென்று இருவகையேற்படும். ஆண்டான் = பதி. அடிமை = ஆன்மா. "மீளா அடிமை உமக்கே ஆளாய்" இத்திராவிடச்சுருதியில் அடிமை என்பது சீவனையும், உமக்கே என்பது இறைவனையுங் குறித்து விளக்கியவாறும் நோக்குக.

சாமானிய மனிதனே தன்னை எஜமான், தலைவன், முதலாளி, பெரியவர் என்று அழைக்கும்படி விரும்புகின்றான். அரிய சத்தியோடுகூடிச் சகல பொருள்களுக்கும் ஏக நாயகராகவிளங்கும் ஒருவரை ஆண்டான், பதி முதலிய நாமங்கள் இட்டு ஏன் வழங்கக்கூடாது? ஒரு நாமம் ஒரு உருவம் முதலியன அப்பதிக்கு இல்லை. ஆனால், ஆன்மகோடிகள் உய்யவேண்டுமென்ற திருவுளக் கருத்தினாலே, பல்லாயிரம் திருநாமங்களும், பல்லாயிரந்திருமேனி களும் உடையவரென்று அநுபூதியால் அடியார் கூறுவர்.

எந்தப்பொருளுந் தானே உண்டாகித் தானே அழியும் என்ற பொருத்தமற்ற வார்த்தை மறுக்கற்பாலது. பற்பல பேதமான பொருள்களை நாம் பார்க்கின்றோம். சிற்சில பொருள்கள் கணந்தோறும் மாறுமியல்பினவாகத் தோன்றுகின்றன. "கண்டதே காட்சி; கொண்டதே கோலம்" என்றவாறே புகல்வாருமுளர்.

இப்பழமொழியைக் கூறித் தாமே கெடுவார்க்கும் பிறரைக் கெடுப்பார்க்கும் நாம் யாதுஞ் சொல்லமுடியாது. இந்த மனித சரீரமும் போக்கியப் பொருள்களும் இந்திரஜாலம்போன்ற ஒரு

கண்மயக்கென்றே உயர்ந்தோர் நற்சிந்தை உதிக்கும்வண்ணம் உபதேசிக்கின்றார்கள். எல்லாம் வெளிமயக்காகப் பேரொளிமயமான ஒருபொருள் என்றும் நிலவுமன்றோ! நிற்க;

காணப்படாதபொருளையறிவது கண்டபொருள் ஒன்றைக்கொண்டேயாம். அப்பொருளில் அழிவதும் அழியாததும் பகுத்துணரவேண்டும். காரணப்பொருள் அழிவடைவதில்லை. காரியம் எப்படியும் வேறுபாடடைவது கண்கூடாகும். காரியம் தோன்றக் காரணம் வேண்டும் என்பது சால்புடைத்தாகும். எந்தக்காலத்திலும் நாம் சுகத்தையன்றித் துக்கம் வரவேண்டும் என்று எண்ணமாட்டோம். "நாம் ஒன்றெண்ணத் தெய்வம் ஒன்றெண்ணியது" என்றபடி மாறியே நமது அனுபவிப்பு நிகழும். தெய்வம் = ஊழ் நாம் = என்றது தேகியாகிய ஆன்மாவை. பரமாத்துமாவின் வேறாயது ஆன்மா. இரண்டும் ஒன்றன்று.

"உண்டு, உடுத்துச் சுகம்பெறுவதும், பெண்டு பிள்ளை பண்டு பதார்த்தம் என்பவைகள் சூழப் பிரபுப்பட்டம் வாங்குவதும் விசேஷபலம்" என்று அநேகர் கருதிவிடுகிறார்கள். ஆசையே இவர்களை மந்தமதியினராக்கிவிடுகின்றது! இந்த ஆசை நீங்க உபாயந் தேடவேண்டும். "அவனருளால் அவன்றாள் வணங்கி" என்பதற்கிணைய அரனருளைப் பிரார்த்தித்து அவனடிசேர்தலே மனிதப் பெரும்பிறவிப் பயனாகும் என்று பரியாலோசனை செய்தால் மனமயல்தீரும்.

மெய்யுணர்ச்சி உண்டாயவழியே மேன்மைப்பொருளை ஆன்மா நாடும். அப்பொழுது இன்பநெறி இஃதென்பதும் போதமாம். சிலர், "எல்லாந் தானே தோன்றித் தானே மறையும்" என்பர். அவர்மதி நன்று! நன்று!! அவர் உபமானமுந் தேடிக் கூறுவர். வெற்றிலை பாக்கு சுண்ணம் இவைகளைக் கூட்டினால் ஒரு செந்நிறம் தோன்றும். அதுபோலப் பஞ்சபூதபரிணாமத்தன்மையே உலகமும் தேகமுமாகும் என்பது அன்னோர் வாக்கு.

இஃது பொருத்தமின்று. என்னை? சடப்பொருள்களாகிய வெற்றிலை பாக்கு முதலியவற்றைச் சேர்க்கச் சித்துப்பொருளாகிய ஒன்று வேண்டப்படுதலினாலென்க. இன்னவாறே பார்க்கும்போது உத்தமப்பொருளுண்டென்பது தேற்றமாம். மூலகாரணம் அதுவே! காரணம் இன்றிக் காரியமுண்டாகமாட்டாது. சைவசமயிகள்

வழிபடும் சிவம் என்பது ஆண், பெண், அலி என்ற தன்மைக ளற்ற தூய்மையானவஸ்து; மங்களமானது; மங்களத்தை ஆன்மாக் களுக்கு விளைப்பது: பதி-சிவம்-கடவுள்-இறைவர் என்பதாதிய பெயர்களால் முதற்பொருளுண்மை சிறிது காட்டுவாம்.

## பதி இலக்கணம்.

மங்களாகாரராகிய சிவபெருமான், என்றும் உள்ளவர்; எங் கும் நிறைந்தவர்; எல்லாம் அறிபவர்; எல்லாம் வல்லவர்; இறப்பு பிறப்பு முதலிய சீலகுணங்களை முற்றத் துறந்தவர். இவரையே வழிபடுதல் வேண்டும். வேதம் சிவபெருமானையே பசுபதி யென்று கூறும்.

"ஏஷாமீசே பசுபதி: பசூநாஞ்சதுஷ்பதா
முதசத்விபதாம்।"

"நாற்பாதம்-இருபாதம் உள்ள பசுக்களைப் பசுபதி ஆளுகின் றார்", என்றும்;

"பசூநாம்பதயே - விருக்ஷாணாம்பதயே"

"இயங்கியற் பொருள் நிலையியற் பொருள்களான ஆன்மகோடி- களுக்குத்தலைவர்" என்றும்;

இந்தப் பரம்பொருளையே இன்னும் "சிவாயச - சர்வாயச" என்றும் சொல்லப்படுகின்றது. "சிவ" என்னும் இரண்டெழுத் தும் பிஞ்செழுத்தும் பெருவெழுத்துமாம். "சிகாரம் சிவரூபந்து வகாரம் சக்திருச்யதே" என்று ஆகமமும் அறையும். அதர்வசிகை யில்,

சிவ ஏகோத்யேய: சிவங்கரச் சர்வமந்யத்
பரித்யஜ। ஸமாப்தாதர்வசிகா" என்று,

சிவபெருமானொருவரையே வழிபாடுசெய்யும்படி கற்பிக்கப்பட்டி ருக்கிறது.

(தே.வே. உஅ-பக்.)

(சிவபிரான் தமக்கென்று யாதுஞ் செய்பவரல்லர்.)

சிவபெருமான் ஆன்மகோடிகளின் ஈடேற்றங்கருதியே வியா பகராக எங்கும் விளங்கினாராயினும், அருவம், உருவம், அருவுரு வம் என்ற மூன்றுவகைத் திருமேனிகளைக் கொண்டு பிரகாசிப்பார் என்று வேதம் புகலும்; புராணங்களுமிவ்வாறே சாற்றும். "தன்னை

னைங்க நரரைப்படைத்தனன்" என்னும் கூற்றும் சிவபெருமானைப் பற்றுவதின்று. ஆன்மலாபந்தைக்குறித்த திருவருட்செயல்களை சிவபிரான் செய்யும் செயல்கள் என்பது உண்மைநூற்றுணிபாகும்.

உருவருள் குணங்களோடு முணர்வரு ளுருவிற் றோன்றும்
கருமமு மருளரன்றன் கரசர ணாதி சாங்கந்
தருமரு ளுபாங்க மெல்லாந் தானருள் தனக் கொன்றின்றி
அருளுரு வுயிருக் கென்றே யாக்குவனசிந்த னன்றே.

(சிவபெருமான் சிருட்டிகாரணர்)

நிர்விகாரியாகியுள்ள பிரமத்தை ஆன்மாக்கள் அடையவேண்டும். பரப்பிரமஸ்வரூபராகிய சிவபெருமானே சிருட்டி, திதி, சம்மாரம், திரோபவம் அநுக்கிரகம் என்ற ஐந்து தொழில்களையும் செய்கின்றார். "ஏற்றவிவை யரனருளின் றிருவிளையாட்டாக, இயம்புவர்கள் * * * * மற்றுப் புகன்றவையு மருளொழியப் புகலொணாதே"

(சிவப்-௰அ)

யதோவா இமானி பூதானி ஜாயந்தே யேநஜாதானி ஜீவந்தி யத்ப்ரயந்தியபி ஸம்விசந்தி தத்விஜிஜ்ஞாஸஸ்வ தத்ப்ரஹ்ம!

"எதினின்று இந்தச்செந்துக்களெல்லாம் பிறக்கின்றனவோ பிறந்தவை எதனால், (திரோதான-அநுக்கிரக) முறையில் நிலையுறுகின்றனவோ மறையுங்காலத்து அவை எதனுட் பிரவேசிக்கின்றனவோ அதனை அறிதி; அதுவே "பிரஹ்மம்" என்று தைத்திரீய உபநிஷதம் உணர்த்துகின்றது.

இன்னும், ஸ்காந்தபுராணத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

யதோ ஜாதா இமே யேந ஜாதா ஜீவந்தி ஜந்தவ:
யஸ்மிந் வ்ஜந்தி விலயம் யஸ்து நஸ்தநுதே ஸ்ம்ருதி:
அநுக்ருஹணாதி தாந்ஸர்வாந் தஸ்மை துப்யமிதம்நம:

"எவரினின்று இந்தச் சீவர்கள் உண்டாகின்றனவோ, எந்த முதல்வரால் உண்டாகிய சீவர்கள் நிலையுறுகின்றனவோ, எவரிலே அவை இலயமடைகின்றனவோ, எவர் எங்களுக்கு ஞானத்தை யுண்டுபண்ணுகின்றாரோ, எவர் எல்லாவற்றையும் அநுக்கிரகிக்கின்

றுவோ, அவ்வியல்பினராகிய உமக்கு நமஸ்காரம்." என்பது அர்த்தமாம்.

அரியாகிக் காப்பான்; அயனாய்ப் படைப்பான்
அரனாய் அழிப்பவனுந் தானே.

(பதி. திருமுறை.)

(சிவபெருமானின் வியாபகத்தன்மை.)

சிவபெருமான் அக்கினியோடு சூடுபோலத் தம்மோடு பிரிவிலாத ஞானசக்தியோடு எங்கும் வியாபகராய் விளங்குவர். வியாபகராகையின் அவர் அக்கிரமம் செய்வாரை ஏவுவாரல்லர். பாபிகளின் இருதய மண்டலத்தில் தீச்செயல்களுக்குச் சாட்சி பூதராக அவர் இருப்பார். தீவினையாளர் வியாபகராய கடவுளை ஏமாற்றிவிட முடியாது. "எல்லாவுலகமுமானாய்நீயே" என்பது தேவாரவாக்கம்.

என்றுநறுமென்மணமென்னவெறிமணியரவமென்னக்
கன்றுறுபோதுசார்ந்தகடியெனச்சலாகைதன்னில்
வின்றுதற்கரியசோதிதானெனவிளங்கியெங்கும்
உன்ளொடுபுறம்புமாகியுலவிலீற்றிருக்குமன்றே.

(கந். புரா.)

வடமொழியில் மேற்கூறிய தமிழ்மொழிச் செய்யுட் கருத்து முழுதும் அடங்கியிருக்கின்றது.

புஷ்பேஷு கந்தவஜ் ஜ்ஞேயஸ் திலேஷ்வாபி சதைலவத்।
கண்டாயாம் த்வநிவத் த்வக்நௌ பிரபாவத்பரமேஸ்வர:॥
ஸர்வத்ர ஸர்வதா தேவஸ் ஸர்வேஷ்வபிச ஸம்ஸ்திதஃ॥

"மலரின்மணம் போன்றும், எள்ளில் எண்ணெய் போன்றும், மணியில் நாதம் போன்றும், அக்கினியிலே ஒளி போன்றும் எல்லா இடங்களிலும், எக்காலங்களிலும், எந்தப் பொருள்களிலும் சிவபெருமான் வியாபகராகவுள்ளார்."

இந்தக்கருத்தையே சுவேதாஸ்வதர உபநிஷத்தும் கூறும். அஃது, திலேஷு தைலம் ததிநீவ ஸர்ப்பிராபஸ் ஸ்ரோதஸ் ஸ்வரணீஷு சாக்நி। ஏவமாத்மாநி க்ருஹ்யதேஸௌ ஸத்யே நைநம் தபஸாயோநு பச்யதி॥

"எள்ளில் எண்ணெய் போன்றும், தயிரின்கண் நெய் போன்றும், (வற்றிய) நதியில் ஜலம் போன்றும், அரணியில் அக்கினி போன்றும் இந்தப் பரமாத்மா ஆத்மாவில் அறியப்படுகின்றார். சத்தியமும் தபசும் கொண்டு ஆன்மா பரமாத்துமாவைக் காண்கின்றான்" இன்னும், இவ்வுண்மையைத் தமிழ்மறையாகிய திருவாசகத்திலும், "அள்ளூறும் கீழூறும் மேலூறும் யாவுளும்- எள்ளூறு மெண்ணெயும் போனின்ற வெந்தையே." என்று அருளிச்செய்யப் பட்டது.

## (இறைவனுக்கு அநேக சத்திகளுண்டு)

உலகிற்குப் பேரிருள் நீக்கி உயர்ந்த இன்பைப் புகட்டும் சூரியனைப் போலப் பசுபதியாகிய சிவபிரானும் பற்பல பேதமான சத்திகளோடு கூடிநின்று இன்பத்தை ஈந்தருளுகின்றார். இறைவன் சர்வவியாபகர் என்று முன்னே கூறினும். சத்திகளோடு சேர்ந்து விகசிக்கும் முறைமையை இங்கே காட்டுவோம். சூரியன் தன்னை விளக்குமிடத்துக் கதிரோன் எனவும், விடயங்களை விளக்குமிக் கதிர்எனவும் தாதான்மியத்தால் இருதிறப்படுதல் போலச், சைதன்னியப் பொருளாகிய சிவமே புறப்பொருளை நோக்கி நிற்கும் நிலையில் சத்தி எனவும், புறப்பொருளை நோக்காது அறிவுமாத்திரையாக நிற்கும் நிலையிற் சிவம் எனவும் தாதான்மியமாக இருதிறப்பட்டு இயைந்து நிற்கும்.

இச் சிவசத்தியொன்றே காரியவேறுபாடுபெற்றி இச்சை, ஞானம், கிரியை முதலிய கூறுபாடடையும். விசேடமாக ஈசானி முதலிய சத்தி பேதங்களைக் குறிப்பிடுவோம்.

ஈசானி, பூரணி, ஆர்த்தி, வாமை, மூர்த்தி என்று ஐவகைச் சத்திகளுண்டு. இவற்றுள், ஈசானி:— சசினி, அங்கதை, இட்டை, மரீசி, சுவாலினி, என்று ஐந்தாகவும்; பூரணி:— சாந்தி, வித்தை, பிரதிட்டை, நிவிர்த்தி என்று நான்காகவும்; ஆர்த்தி:— தமை, மோகை, சயை, நிட்டை, மிருத்தியு, மாயை, பயை, சரை என்று எட்டாகவும்; வாமை:— இரசை, இரட்சை, இரதி, பாலி, காமை, சம்யமினி, கிரியை, புத்தி, காரி, தாத்திரி, பிராம்மணி, யோகினி, பவை என்று பதின்மூன்றாகவும்; மூர்த்தி:— சித்தி, இருத்தி, தியுதி, இலக்குமி, மேதை, காந்தி, சுவதை, திருதி என்று எட்டாகவுங் கூறுபாடுளதாம்.

இன்னும், ஆரணி, ஜெனனி, இரோதயித்திரி, நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை என்ற பேதங்களும், வாமை, சேட்டை, இரௌத்திரி, காளி, கலவிகரணி, பலவிகரணி, பலப்பிரமதனி, சர்வபூததமனி என்ற அட்டபேதங்களும் சத்தி பேதங்களாம். அவ்வச் சத்திகளோடு கூடிய சிவமும் அவ்வாறு பலவகைப் பெயர்களையும் பெற்று நிற்கும். அக்கினியின் சத்தியொன்றுதானே, சுடுதல், அடுதல் முதலிய தொழில் வேறுபாட்டால், சுடுஞ்சத்தி, அடுஞ்சத்தி என்று பல்வகையாமாறு போலச் சிவசத்தியொன்றே பலகிரியைகளின் பொருட்டுப் பலநாமந் தாங்கி நிற்கும் என்று ஆகமங்கள் கூறும். இவையாவும் இறைவனாற்றல் என்பது தேற்றமாம்.

(இறைவன் எண்குணமுடையவர்.)

"ஸர்வஜ்ஞதா த்ருப்திரநாதிபோதஃ
ஸ்வதந்த்ரதா நித்யமலுப்தசக்திஃ।
அநந்த ஸக்திஸ்ச நிராமயாத்மா
விசுத்ததேஹஸ் ஸஶிவத்வமேதி॥"

"முற்றறிவு, வரம்பிலின்பமுடைமை, பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, இயற்கையுணர்வுடைமை, தூயவுடம்புடையனாதல் என்னும் எட்டுக்குணங்கள் இறைவனுக்குண்டு என்றும், இறைவனைச் சேர்ந்த ஆன்மாவும் இவ்வெண்குணங்களையும் அடையும் என்றும் ஆகமாதிகள் கூறும்.

திருச்சிற்றம்பலம்.

இரும்புயர்ந்த மூவிலைய சூலத்தி னானை
இறையவனை மறையவனை யெண்குணத்தி னானைச்
சுரும்புயர்ந்த கொன்றையொடு தூமதியஞ் சூடும்
சடையானை விடையானைச் சோதியெனுஞ் சுடரை
அரும்புயர்ந்த வரவிந்தத் தணிமலர்க ளேறி
அன்னங்கள் விளையாடு மகன்றுறையி னருகே
கரும்புயர்ந்து பெருஞ்செந்நெல் நெருங்கிவிளை கழனிக்
கானாட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே.

(சுந்-தே. திக்கானாட்.)

கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
தாளை வணங்காத் தலை. (திருக்குறள்)

(சிவபெருமான் சர்வவித்தைக்கும் அதிபரே.)

இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம், சிக்ஷை, கற்பம், வியாகரணம், நிருக்தம், ஜோதிஷம், சந்தோவிசிதி, புராணம், நியாயம், மீமாஞ்சை, ஸ்மிருதி, ஆயுர்வேதம், தநுர்வேதம், காந்தருவவேதம், அர்த்தவேதம் எனனும் பதினெட்டுவித வித்தைகளுக்கும், ஆகமம் உபாகமம் புராணம் என்பவற்றிற்கும் சிவபெருமானே கர்த்தராகவுள்ளார்.

"ஈசாந ஸர்வவித்தியாநாம்"

"சகலவித்தைகளுக்கும் கர்த்தா ஈசானர்"

(தைத். ஆ. ௰ உக)

"தொகுத்தவனருமறை யங்கமாகமம்—வகுத்தவன்" என்றும்,

"ஆறங்க நால்வேத மானாய் நீயே" என்றும்,

தேவாரத்தில் அருளிச்செய்யப்பெற்றிருக்கின்றன. வேதப்பொருளும் சிவபெருமானேயென்று தமிழ்மறைசாற்றும்.

"மருவினியமறைப்பொருளை மறைக்காட்டானை"

(திருநா. திருமாற்பே.)

(சிவபிரான் யாக அதிபதி.)

பிராம்மணோத்தமர்கள் செய்யும் யாகாதிக்கிரியைகள் எல்லாவற்றிற்கும் சிவபெருமான் அதிபதியென்பர். "மகபதிம்" என்பது வேதம். யஞ்ஞம் பலவகைப்படும். வாசபேயம், ராசசூயம், அஸ்வமேதம், முதலியனவும் யஞ்ஞமாகும். ஆனால் பிரதானமாக மேற்குறிப்பிடப்பட்டவைகள் நீங்கலாக, யஞ்ஞம் மூவகையாகும். அவை:—பாகயஞ்ஞம், சோமயஞ்ஞம், ஹவியஞ்ஞம் என்பன.

பாகயஜ்ஞம்:—பஞ்சமகாயஞ்ஞம், அட்டகாசிராத்தம், பார்வணசிராத்தம், சிரவணாகர்மம், பிரத்தியவரோகணம், சூலகவம், ஆசுவயுஜீகர்மம் என எழாம்.

சோமயஞ்ஞம்:—அக்கினிஷ்டோமம், அத்தியக்கினிஷ்டோமம், உத்தி, ஷோடசி, வாஜபேயம், அதிராத்திரம், அப்தோர்யாமம் எனஎழாம்.

ஹவியஞ்ஞம்:—ஆக்னேயம், ஆதேயம், தர்சபூர்ணமாசாக்கி ஹோத்திரம், ஆக்கிரயணம், சாதுர்மாசியம், நிரூடபசுபந்தம், சௌத்திராமணி என ஏழாம். இந்த இருபத்தொருவித யாகங்களுக்குஞ் சிவபிரான் தலைவர் என்பது கேட்கப்படுகின்றது. "தரிம்ஸ பைத்தயத்குஹ்யாநி ** நிகிதா" என்பது வேதபாகம்.

எரிபெருக்குவரவ்வெரியீசன
துருவருக்கமதாவதுணர்கிலார்
அரியயற்கரியானையயர்த்துப்போய்
நரிவிருத்தமதாகுவர்நாடரே.

(தே.நா. ஆபுரா.)

ஓமத்துளங்கியினுள்ளுளனெம்மிறை
யீமத்துளங்கியிரதங்கொள்வானுளன்
வேமத்துளங்கிவிளைவுவினைக்கடற்
கோமத்துளங்கிகுரைகடறானே.

(திருமந்திரம்.)

புங்கவரெவர்க்குநல்கும்புவிபுகழவிகொள்வானும்
அங்கியின்முதலும்வேள்விக்கதிபனுமளிக்கின்றானும்
சங்கரன்றானேவேதஞ்சாற்றுமான்மகத்துக்காதி
இங்கொருதேவுண்டென்னினெழுகெனவுரைத்திமாதோ.

(கந்தபுராணம்.)

அருப்புமென்முலையினார்தமணிமலர்க்கைப்பிடித்தங்
கொருப்படுமுடையபிள்ளையார்திருவுள்ளந்தன்னில்
விருப்புறுமங்கியாவார்விடையுயர்த்தவரேயென்று
திருப்பெருமணத்தைமேவுஞ்சிந்தையிற்றெளிந்துசெல்வார்

(பெரியபுராணம்.ஞா.)

(சிவபெருமான் சூரியன் மத்தியிலுமுளர்)

வியாபகத்துவம் சிவபெருமானுக்குளதென்று கூறவே சூரியனிடத்தும் அவர் பிரகாசிப்பார் என்பது ஒருதலையாகும். ஆயினும், சூரியனைக் கண்ணாகவும் அவர் கொண்டிருக்கின்றார். இவ்வாறு ஒவ்வோர் அவசரத்துக் கொண்டு தமது சக்தியைச் சிவபெருமான் காட்டியருளினார். சிவசூரியன் என்று கூறுமாற்றால் சூரியனு

கவும் சிவன் பிரமை செய்து சகல ஜீவர்களையும் ஆற்றலாதப்படுத்துகின்றார். அப்பர் சுவாமிகள்.

திருச்சிற்றம்பலம்.

அருக்கன்பாதம்வணங்குவாரந்தியின்
அருக்கனுவான் அரனுருவல்லனோ?
இருக்குநான்மறையீசனைத்தொழுங்
கருத்தினைநினையார்கள்மனவரே.

திருச்சிற்றம்பலம்.

என்று அருளிச் செய்தார்கள்.

(சிவபிரானுக்கு ஒப்பானவர், மேலானவர் இல்லை.)

தத்ஸமோ நாஸ்தி லோகேஷு நவோ நாப்யதிகோ விபு:

உலகங்களில் (சிவபெருமானுக்கு) அவருக்கு ஒப்பாரும் மிக்காருமில்லை. நீலகண்டபாஷியம் (பராதிகரணம். ௱௪௪-௱௪௮-பார்க்க.)

திருச்சிற்றம்பலம்.

கற்றானைக்கங்கைவார்சடையான்றன்னைக்
காவிரிசூழ்வலஞ்சுழியுங்கருதினானை
அற்றார்க்கும்அலர்ந்தார்க்குமருள்செய்வானை
யாரும்புகுவானையறிந்தோமன்றே
மற்றாருந்தன்னொப்பாரில்லாதானை
வானவர்களெப்பொழுதும்வணங்கியேத்தப்
பெற்றானைப்பெரும்பற்றப்புலியூரானைப்
பேசாதநாளெல்லாம்பிறவாநாளே.

திருச்சிற்றம்பலம்.

இன்னும் சிவபெருமானுக்கு மேலானதெய்வம் உண்டென்று கூறுவதே நரகத்திற்கேறும் வழியாகும்.

கூர்மபுராணத்தும்,

எண்டோள்முக்கட்பெருமானுக்கிணையாந்தெய்வமுண்டென்போர்
புண்டோய்நரகத்தடைவரென்றுற்புவிநீவளிநீர்வெளியாகி
விண்டோய்நிலவுமிருசுடராயெச்சனுகிவேதாந்தந்
தண்டாதுறையுந்தனிச்சுடரின்பாதந்தொழுதறகைமைந்தே.

என்று குறிப்பிடப்பட்டது.

(சிவபெருமான் வழிபடுவோர் கருத்துப்படி திருவருள்பாலிப்பவர்.)

சிவபெருமானை ஜோதிஸ்வரூபமுடையவரென்றுவழிபடலாம். எங்கும் நிறைவானபரஞானம் என்றும் அகத்தே தியானிக்கலாம். வேறு உருவங்களினையும் மனதில் அமைத்துப் போற்றலாம். எற்றவாறு எது செய்தாலும் அதனைத் திருவுளத்திற் கொண்டு அவ்வவ் வடிவாய் அவரே கிருபைபுரிவார்.

அருவாய்ச்சித்தாமென்னிலமையுளத்திலிருத்தவரிதென்னில்
உருவாயின்னதியென்னுருவமுணர்தற்கரிதேலுன்னுளத்தின்
மருவாநின்றவெத்தேகமினுருவாயேனுமனத்திருத்தில்
தருவன்முத்தியத்தேகமினுருவாய்விடுவாந்தன்மையால்.

(கூர்மபுராணம்.)

(சிவபெருமான் அந்தரியாமியாக நின்று எல்லாவற்றையும் அசையச்செய்பவர்.)

இறைவராகிய சிவம் சமஸ்தமான சராசரங்களையும் மறைவாக உள்ளேநின்று அசைவிக்கும் சக்தியுடையர்.

“யோ விஜ்ஞாநே திஷ்டந் விஜ்ஞாநாதந்தரோ யமயத்யேஷ த ஆத்மாந்தர்யாம்யம்ருத:॥”

“அவர் உன் அந்தரியாமியாகியபரமாத்மாஎனப்படும்சிவமாம். (அம்ருதம் = சிவம்) ஜரை-மரணம். இவர்களை நீக்குபவர் அவரே”

பட்டினத்தடிகள்.

ஊட்டுவிப்பானுமுறங்குவிப்பானுமிங்கொன்றொன்றை
மூட்டுவிப்பானுமயங்குவிப்பானுமுயன்றவினை
காட்டுவிப்பானுமிருவினைப்பாசக்கயிற்றின்வழி
யாட்டுவிப்பானுமொருவனுண்டேதில்லையம்பலத்தே.

திருச்சிற்றம்பலம்.

ஆட்டுவித்தா லாரொருவ ராடாதாரே
　　அடக்குவித்தா லாரொருவ ரடங்காதாரே
யோட்டுவித்தா லாரொருவ ரோடாதாரே
　　யுருகுவித்தா லாரொருவ ருருகாதாரே
பாட்டுவித்தா லாரொருவர் பாடாதாரே
　　பணிவித்தா லாரொருவர் பணியாதாரே
காட்டுவித்தா லாரொருவர் காணாதாரே
　　காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக்காலே.

திருச்சிற்றம்பலம்.

காண்பவன் முதலிய திறமுங் காட்டுவான்
மாண்புடை யோனாய்வலி கொள்வான் றொடர்
பூண்பதின் றுய்யப்பணிக் குற்றுங் கவன்
சேண்பொலி திருவடிச் சேவையேத்துவாம்.

சேண் = சிதாகாயம். அஃதே திருச்சிற்றம்பலம்.

இதில், ஞாதுரு - ஞான - ஞேயம் என்பது குறித்தபடி காண்க.

[illegible] ।
[illegible] ॥

"கண்களுக்கு உருவத்தைக் காட்டுவனும், காண்பவனும் ஆன்மாவேயாம். (அதுபோல) அவ்வான்மாவுக்கு விடயத்தைக் காட்டுபவனும், காண்பவனுஞ் சிவனேயாம். ஆகவே, தனக்கு உபகாரியாக விளங்கும் அச்சிவபிரானிடத்து மேலான பக்தி செய்யக் கடவன்."

(சிவஞானபோ. கக.)

திருச்சிற்றம்பலம்.

திருவேயென் செல்வமே தேனே வானோர்
　　செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதிமிக்க
வுருவேயென் னுறவேயென் னூனே யூனி

இயல்பாய் [illegible] யியம்பினின்று
கருவெலாந் தருவதாய் [illegible]
அருவெனி [illegible]
அருவாய [illegible]
ஆருயிர்க் [illegible]

(க. [illegible].)

திருச்சிற்றம்பலம்.

(ஞானாக்கினியும் பராசக்தியே.)

பரமசிவன் அக்கினிவண்ணராக இருப்பார். அவர் திருவருட் [illegible] அக்கினிச் [illegible] முத [illegible] செய்கின்றார்கள்.

அருட் [illegible]
[illegible]

"பிரமாதிகளும், [illegible], இருக்குமிடம், [illegible] இராத்திரியும் [illegible] அக்கினியை [illegible] என்று இருக்குவேதங்கூறும். [illegible] இந்நிலையுணர்ந்து இறைவனைப் [illegible] [illegible] ஞானசம்பந்தப்பெருமான் [illegible] ந்தருளினார்.

திருச்சிற்றம்பலம்.

கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம்பலமேய
முற்றா வெண்டிங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே.

திருச்சிற்றம்பலம்.

(அரனுக்கே அட்டமூர்த்தமுள)

பவர், சர்வர், ஈசானர், பசுபதி, உருத்திரர், உக்கிரர், பீமர், மகாதேவர் என்ற அட்டநாமமுடையவர் சிவனே. எட்டுமூர்த்தம் இவையாம்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

"பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், ஆன்மா, சூரியன் சந்திரன் என்பவற்றை சிவபிரான் தமது சர்வர், பவர், உருத்திரர், உக்கிரர், பீமர், பசுபதி, ஈசானர், மகாதேவர் என்னும் அட்டமூர்த்திகளாலும் அதிட்டானத்தானங்களாகக்கொள்வர்."

தமிழ்மறை.

திருச்சிற்றம்பலம்.

இருநிலனாய்த்தீயாகிநீருமாகி
இயமானனாயெறியுங்காற்றுமாகி
யருநிலையதிங்களாய்ஞாயிறாகி
யாகாசமாயட்டமூர்த்தியாகிப்
பெருநலமுங்குற்றமும்பெண்ணுமாணும்
பிறருருவுந்தம்முருவுந்தாமேயாகி
நெருநலையாயின்றாகிநாளையாகி
நிமிர்புன்சடையடிகணின்றவாறே.

(நா-தின்-தாண்டகம்)

நிலநீர்நெருப்புயிர்நீள்விசும்புநிலாப்பகலோன்
புலனாயமைந்தனோடெண்வகையாய்ப்புணர்ந்துநின்றான்
உலகேழெனத்திசைபத்தெனத்தானொருவனுமே
பலவாகிநின்றவாதோணோக்கமாடாமோ.

(திருவாசகம்.)

திருச்சிற்றம்பலம்.

(சிவனுக்குரிய சில வடிவங்கள்)

சிவபெருமான், இலிங்கோற்பவர், விருஷபாரூடர், கல்யாணசுந்தரர், பிக்ஷாடனர், காமதகி, காலாரி, மாதங்காரி, அர்த்தநாரீசுவரர் முதலிய வடிவங்களையுங்கொண்டுள்ளார். அறுபத்துநான்கு

திருவிளையாடல்களையும் தமது சத்தியால் நிகழ்த்தியருளினரும் சிவபிரானே. விஷ்ணுமுதலிய தேவர்களுக்குப் பல படைக்கலங்களீந்து காத்தவரும் சிவனே. விட்டுணு சக்கரம் பெற்றமையை—நம்மாழ்வார்;

"செக்கர்வானச்சடையோன்சேவடிக்கீழ்நாளில்
மெய்க்கணிட்டுச்சக்கரம்பெற்றவினைபாட்டேபோல்"

என்றுதிருத்தார்.

திருச்சிற்றம்பலம்.

நீற்றினைநிறையப்பூசிநித்தலுமாயிரம்பூக்கொண்டு
ஏற்றுழிப்பொருநாளொன்றுகுறையக்கண்ணிறையவிட்ட
வாற்றலுக்காழிநல்கியவன்கொணர்ந்திழிச்சுங்கோயில்
வீற்றிருந்தளிப்பர்வீழிமிழலையுள்விகிர்தனாரே.

(திருநா. திருவிரு.)

திருச்சிற்றம்பலம்.

## (சிவனே முத்திகாரணர்.)

சிவபெருமானை மனம் வாக்குக் காயம் என்னும் மூன்றினாலும் அந்தக்கரணசுத்தியுண்டாக வழிபாடுசெய்தால் ஞானம் உண்டாகும். ஞானமின்றி முத்தி சேர்தல்கூடாது சிவன் பாலில் நெய் போன்றும், விறகில் அக்கினி போன்றும், மாமணியிலுள்ள பிரகாசம் போன்றும் வியாபியாகலின் ஞானப் பெருங்கயிற்றைக் கட்டி வலித்து இழுப்பவர்க்கின்பம் பெருக்கியருள்வார்

குலமிலான்குணங்குறியிலான்குறைவிலான்கொடிதாம்
புலமிலான்றனக்கென்னோர்பற்றிலான்பொருந்தும்
இலமிலானிடந்தானின்மையிலானெனவன்வன்சஞ்
சலமிலான்முத்திதரும்பரசிவனென்னத்தகுமே.

திருச்சிற்றம்பலம்.

விறகிற்றீயினன்பாலிற்படுநெய்போல்
மறையநின்றுளன்மாமணிச்சோதியான்

உறவுகோலட்டுணர்வுகயிற்றினால்
முறுகவாங்கிக்கடையமுன்னிற்குமே. (திருநா. ரு)
(உறுதுணைபடுத்தி உணர்வு=குருபாயம்.)

திருச்சிற்றம்பலம்.

(மூவகைப்பிரபஞ்ச முதற்பொருள்-சிவனே.)

மலினப்பிரபஞ்சம், மிசிரப்பிரபஞ்சம், சுத்தப்பிரபஞ்சம் என்னும் மூவகைப் பிரபஞ்சங்களுக்கும் சிவன் அதிட்டாதாவும் அதிபதியுமுள்ளார். இவை, ஆன்மதத்துவம், வித்தியாதத்துவம், சிவதத்துவம் என்று கூறப்படுவது.

"அப்பாலைக்கப்பாலைக் கப்பாலைலானை" என்றும்,

முப்பதுமாறும்படி முத்தியேணியா
வொப்பிலாவானந்தத்துள்ளொளிபுக்குச்
செப்பவரியசிவங்கண்டுதான்றெளிந்து
அப்பரிசாகவமர்ந்திருந்தாரே.

(திருமந்திரம்.)

(சிவோகம்பாவனைசெய்து சீவத்துவம் நீக்கவேண்டும்)

சிவபெருமானைத் தந்தம் சக்திக்கேற்பத் தினந்தோறும் இந்திராதி தேவர்களும் பூசித்துப் பரமசாதனம் பெற்றனர். வாக்கினாலே போற்றுதலும், காயத்தினாலே சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்குதலும், மனசினாலே சிந்தித்தலும் ஆன்மாக்களின் கடமையென்பது உணரவே இம்மனிததேகம் வந்து சேர்ந்தது. அதனையுணர்ந்து அவனடி போற்றுவதே சீவன் செய்வதுவாம். பிரார்த்தனைமுறையும் திருத்தொண்டர் அருந்திறன் தளவாயின் பெறுநிலை சாரும் என்ப.

*திருச்சிற்றம்பலம்.

வழித்தலைப்படுவான்முயல்கின்றேன்
உன்னைப்போலென்னைப்பாவிக்கமாட்டேன்
சுழித்தலைப்பட்டநீரதுபோலச்
சுழல்கின்றேன்சுழல்கின்றதென்னுள்ளம்
கழித்தலைப்பட்டநாயதுபோல
வொருவன்கோல்பற்றிக்கறகறவிழுக்கை

யொழித்தருள்பருளையினைசெய்யாய்
ஓரொழிவுமெய்ஞ்ஞானருணையானை

இரவுபகலில்லாவின்பவெளியூட்டி
விரவிவிரவிநின்றாடந்திடுற
விரையவிரையநின்றாடந்திடுற.

காலமுண்டாகவேகாதல்செய்துய்ம்மின்கருதரிய
ஞாலமுண்டானொடுநான்முகன்வானவர்நண்ணரிய
வாலமுண்டானெங்கள்பாண்டிப்பிரான்றன்னடியவர்க்கு
மூலபண்டாரம்வழங்குகின்றான்வந்துமுந்துமினே.

திருச்சிற்றம்பலம்.

---

## அரதத்தசிவாசாரியர் செய்த சுலோகபஞ்சக. மொழிபெயர்ப்பு.

உயர்காயத் திரிக் குரியபொருளாகலின்
தசரதன் மதலை தாபித் தேத்தலிற்
கண்ணன் கயிலையில் நண்ணி நின்றிரப்பப்
புகழ்ச்சிவி னமைந்த மகப்பே றுதவலிற்
றனுது விழியுட னொராயிரங் கமலப்
புதுமலர் கொண்டரி பூசனை யாற்றலின்
ஆங்கவற் கிரங்கி யாழியீந் தருடலின்
ஐங்கணைக் கிழவனை யழல்விழித் தாக்கலி
னைம்பெருங் கவிட மமுதுசெய் திடுதலிற்
றென்றிசைத் தலைவனைச் செகுத்துயிர் பருகலி
னவுணர் முப்புர மழியவில் வாங்கலிற்
றக்கன் வேள்வி தகர்த்தருள் செய்தலிற்
றனஞ்சயன் றனக்குத் தன்படை வழங்கலின்,
மாதுட னடங்கலை வலித்தக் கேறலின்
மாயோன் மகவுட னிரியு காலைத்
தடமுலை யிளைத்துச் சாந்தனைத் தருதலின்
ஆழ்கடல் வரைப்பி னுண்மே ரவேக
சன்புமீ தூர வருச்சனை யாற்றலி
னனிதிரு செல்வமு மாக்கவர்க் கருடலின்

ஐயிரு பிறப்பினு மரியருச் சித்தலின்
இருவரு மன்னுறு மேனமு மாகி
அடிமுடி தேட வழற்பிழம் பாகலிற்
பிறப்பிறப் பாதி யுயிர்க்குண மின்மையிற்
கங்கை சூழ்கிடந்த காசிமால் வரையில்
பொய்புகல் வியாதன் கைதம் பித்தலின்
முப்புர மிறுப்புழி முகுந்தப் புத்தேள்
மால்விடை யாகி ஞாலமொடு தாங்கலின்
அயன்சிர மாலை யணிவில வணிதலின்
ஞானமும் வீடும் மேவினர்க் குதவலின்
பசுபதிப் பெரிய தனிமுதற் கடவுள்,
உம்பர்க ளெவர்க்கு முயர்ந் தோன்
எனப்பல தெளிக வியல்புணர்ந் தோரே. சுபடஸ்து.

---

## திருப்புகழ்.

### கதிர்காமம்.

சரியையா ளர்க்குமக் கிரியையா ளர்க்குநற்
சகலயோ கர்க்குமெட் டரிதாய
சமயபே தத்தவர்க் கறிவொணா மெய்ப்பொருட்
டருபரா சத்தியிற் பரமான
துரியமே லற்புதப் பரமஞா னத்தனிச்
சுடர்வியா பித்தநற் பதி-நீடு
துகளில்சா யுச்சியக் கதியையீ றற்றசொற்
சுகசொரூ பத்தையுற் றடைவேனோ?
புரிசைசூழ் சொர்ப்பதிச் சுரர்தொ டிக்கெடப்
பொருதவீ ரத்துவிக் [illegible] ரமகுரான்
புரளவேல் தொட்டகைக் குமரவேள் மெய்த்திருப்
புகழையோ தத்தெனக் [illegible] கருள்வாயே
கரியபூ கத்திரட் பலவின்மீ திற்கலைக்
[illegible] குமரா டிக்
கதலி [illegible]
கதிர்கா மத்தில் [illegible] பெருமாளே.
[illegible]

## ரு. நாம்யார். *

அசிந்தியா வியக்த ரூபாய நிர்க்குணாய குணாத்மனே।
சமஸ்த ஜகதாதார மூர்த்தயே பிர்மணேநம॥

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல்—வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்புங் குன்றும்
துளைத்தவே லுண்டே துணை.

கௌரவம்பொருந்திய அக்கிராசனாதிபதியவர்களே!
சகோதரர்களே!! கனவான்களே!!!

இப்பொழுது இம்மகா சபையிலே பேசும்படி நான் எடுத்துக் கொண்ட விஷயம் "நாம்யார்" என்பதாம். இவ்விஷயத்தைப் பேசும் ஆற்றல் என்னிடத்திலே இல்லாதிருந்தாலும், திருவருளின் துணையையும், சபையிலுள்ளார் அன்பையும் துணையாகக் கொண்டு சில நாழிகை நேரத்துட் பேசி முடிக்க எண்ணுகின்றேன். பல விஷயக்குறிப்புகள் இப்பெரிய ஆராய்ச்சியில் வாராது போகவுங்கூடும். அவற்றின்பொருட்டு என்மீது குறைகூறாதிருக்கவும் நான் யாவரையும் முதலிற் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

### க. ஆன்மா உண்டென்பது.

நான் என்பது ஒருமைச்சொல். நாம் என்பது தன்மைப் பன்மைச்சொல். இச்சொற்களை நாம் ஒவ்வொருவரும் பேசிவருகின்றோம். நான், நாம் என்ற மொழிகளைத் தேகமுள்ளபொழுது கூறலாமன்றித் தேகமில்லாதபோது சொல்லமுடியாதென்பதை யாவரும் ஒப்புக்கொள்வர். இதனாலே தேகத்தினுள்ளே ஒன்று இருந்து இயக்குவதாகவும், பேசுவதாகவுந் தெரிகின்றதன்றோ!

---

* ஆன்மலக்கண சம்பந்தமாகவே இவ்விஷயம் தேவகோட்டை வைசிய வொன்ந்தசபையில் 3-ம் ௵ விழாக் கொண்டாட்டத்தில், திருநெல்வேலி ஹைக்கோர்டு வக்கீல் N. V. சோமசுந்தரம்பிள்ளை (B. A. B. L.) அவர்கள் அக்கிராசனத்தில் பிரசங்கஞ் செய்யப்பட்டது. தற்போது சில திருத்தங்களோடு ஆன்மலக்கணப்பிரிவில் இக்கட்டுரை சேர்க்கப்பட்டது,

அதுதான் உயிர். உயிர், ஆன்மா, இயமானன் முதலிய பெயர்கள் ஒருபொருளுக்கே வழங்குவன.

இந்த உயிரையுந் தேகத்தையுங் கன்மத்துக்கியையச் சேர்த்துத் தமது சத்தியினாலே அசைவித்து நடாத்துபவரே கடவுள். கடவுளைப், பதி, சிவன், ஈசன், பகவான் முதலிய திருநாமங்களானே பெரியோர் வாழ்த்தி வணங்குவர். இவ்வுடற்பற்று விட்டால் ஆன்மாக்கள் ஈசனையடையலாம். உயிர் பரம்பொருளைச் சேரவொட்டாது தடைசெய்து பிறவியை மேலும் மேலும் உளவாக்குவது மலம். மலம் = அழுக்கு. அது, ஆணவம், கன்மம், மாயை என்று மூவகையாகும். ஆணவமலசம்பந்தம் எப்பொழுதுந் தொடருமியல்புடையது. அதுபற்றியே அறிந்தோர் ஆன்மாக்களை அணு என்பர். ஆன்மா என்பதற்கு வியாபகமுடையதென்பது பொருள். ஆணவமலகுணங்கள் ஏழனுள் முதலில் அகங்காரம் மமகாரம் என்னும் இரண்டையும் விடவேண்டும்.

அகங்காரமாவது:—நானே எவரினும் பெரியோன் என்று வீண்தருக்குறுதல். (முதல்வன் ஒருவனுளனாக எண்ணித் தன்னை அடிமையாகக்கோடலே மரபு.)

மமகாரமாவது:—எல்லாம் என்னுடையது என்று எண்ணுதல். (அனுபவிக்கும் பொருள்கள் ஒவ்வொன்றும் ஆன்மசுகந்தராவென்று பற்றுவிடாது தன்னுடைமை என்று எண்ணுவார்க்குத் திருவருட்பேறு கைகூடுவது அருமையாகும்.)

உ. ஆன்மா இது என்பது.

மனிததேகமுடைய நாம் எப்பொழுது நினைக்கின்றோம்? ஆன்மா உள்ளபொழுது நினைக்கின்றோம். எது நினைக்க ஏவுகின்றது? மனம் நினைவையுண்டாக்குகின்றது. இந்நினைவு உண்டாகக் காரணம் ஆன்மா. ஆன்மா இல்லாவிட்டால் ஒருவித சிந்தனையுமுண்டாகாது. தேகம் ஆன்மாவன்று, கை, கால் முதலிய உறுப்புக்களும் ஆன்மாவன்று.

கண்முதலிய இந்திரியங்களும் ஆன்மாவன்று. இவைகள் எல்லாவற்றிற்கும் வேறாய்ச் சத்ததாதுக்களினாலே இயன்ற பஞ்சபூதபரிணாம தூலதேகத்தில் இருப்பதே ஆன்மா என்று அறிக. முன்பு தேக இயக்கத்திற்குக் காரணம் ஆன்மா என்று குறிக்கப்

பட்டது. ஆன்மா நீங்கிவிட்டால் தேகம் பிணம் என்று சொல்லப் படும். அந்தச்சரீரம் ஒன்றையும் அறியமாட்டாது. இதனைப் பிரத் தியக்ஷமாக அறிந்திருக்கின்றோம். ஆன்மா வேறு தேக இந்திரியா திகள் வேறு என்பதற்கு மேற்கோள் காட்டவும் வேண்டுமா? வேண்டாம். நித்திரையிலும் ஆன்மா இருப்பது சுவாசத்தினாலே நன்குணரலாம்.

மனமாதி யாலுணர்தன் மன்னு புலன்கண்
மனமாதி மன்புலனி னல்லன்—மனமேல்
உதித்தொன்றை யுள்ள முணர்த லதனில்
உதிக்குங் கடற்றிரையை யொத்து.

(சிவஞா-போ—அதி---௯.)

## ௩. ஆன்மாவும் வேறு பரமான்மாவும் வேறு.

இங்ஙனம் ஆராயுங்கால் தேகத்திலிருப்பதும், பின்னீங்குங் காலத்தில் தேகமசையாதிருப்பதும் நோக்கி ஆன்மா உண்டென்று கூறினேன். இந்த ஆன்மாவைச் சீவான்மா என்றும், சீவான்மா வைக் காத்து நல்லவழிப்படுத்தவேண்டிப் பாரபட்சமில்லாது, கன் மானுசாரமான தேகங்களைக் கொடுத்து, வினைகளைப் புசிப்பித்து இன்பநெறிகாட்டுபவரையே பரமான்மா என்றும் ஆன்றமை புலனு டைச் சான்றோர் புகலுவர். பரமான்மாவாகிய பதி ஒருவர். சீவான் மாக்கள் பல. ஆன்மா சாத்துவீகத்துவமான ஆவி. ஆங்கிலத்தில் (Soul = அழிவற்ற ஆவி) என்பர்.

## ௪. ஆன்மாவின் பிரமாணம்.

பண்டைக்காலத்திலே ஆன்மாவுக்கு அளவுகண்டு கூறியதாக அறியவில்லை. தற்காலம் அமெரிக்காவிலுள்ள தேகதத்துவாராய்ச் சியிற் கீர்த்திபெற்ற பண்டிதர் ஒருவர் ஆன்மாவின் நிறை "ஐந்து அவுன்ஸ்" என்றும், வேறொருவர், ஆன்மாவின் கனம் "மூன்று அவுன்ஸ்" என்றும் அங்கிலபாடையிலெழுதினார்கள். இக்கருத்து அநுபவமுறையானது. சித்தாந்தநூலுடையார் ஆன்மாவின் பிர மாணங் கூறிற்றிலர்.

ஆன்ம இலக்கணத்தைச் சித்தாந்த வேதாந்த நூல்கள் விரிவாகக்கூறியிருக்கின்றன. அந்நூல்கள் நல்லாசிரியரிடம் பல்லாண்டுகள் படிப்பினுந் தெவிட்டாத இன்பு காட்டும். யாழ்ப்பாணத்திலே அவதரித்து இலங்கை இந்தியா ஆகிய இரண்டிடங்களிலும் அருந்தருமங்கள் பல நிறுவியும், சைவசமயஸ்தாபனஞ் செய்தும், செந்தமிழில் அரிய நூல்கள் பல வெளிவரச்செய்தும், பிரசங்கம் என்பது இதுவென்றுணரச்செய்தும், விளங்கிய சித்தாந்தவரோதய பானுவாகிய ஸ்ரீலஸ்ரீ. **நாவலர்** பெருமானவர்கள் ஆன்மலக்கணத்தைப் பல புஸ்தகங்களிலும் எழுதியுள்ளார்கள். சிலகாட்டுவன்.

## ரு. ஆன்மலக்கணம்.

ஆன்மாக்கள்; நித்தியமாய், வியாபகமாய், சேதனமாய் பாசத்தடையுடையவைகளாய், சரீரந்தோறும் வெவ்வேருய், வினைகளைச்செய்து வினைப்பயன்களை அநுபவிப்பவைகளாய், சிற்றறிவும் சிறுதொழிலும் உடையவைகளாய்ப், பிறப்பு இறப்பு என்றவற்ருல் சஞ்சலப்படுபவைகளாய் தமக்கு ஒருதலைவனையுடையவைகளாய் இருக்கும்.

"பசுஃ பசுத்வ ஸம்யோகாந் நமுக்தஃ பசுருச்யதே।"

(பௌஷ் - பசு - க.)

(பசுவென்று ஆன்மா மலசம்பந்தத்தால் சொல்லப்படும். மலம் நீங்கிஞல் அங்ஙனஞ் சொல்லப்படமாட்டாது.)

எண்ணரிதாய் நித்தமாய் இருள்மலத்தில் அழுந்தி
இருவினையின் தன்மைகளுக்(கு) ஈடான யாக்கை
அண்ணல் அருளாணண்ணி யவையவராய் அதனல்
அல்கிணிகழ் போகங்க ளருந்து மாற்ருல்
புண்ணியபா வம்புரிந்து போக்குவர வுடைத்தாய்ப்
புணருமிருள் மலபாகம் பொருந்தியக்கால் அருளால்
உண்ணிலவு மொளியதனல் இருளக்றிப் பாதம்
உற்றிடுநற் பசுவர்க்கம் எனவுரைப்பர் உணர்ந்தே.

(சிவப்பிர - பசுவிலக் - க.)

இனி, ஆன்மாக்கள் எத்தொழிலையும் தத்தம் கருத்துப்படியே செய்யமாட்டா. என்னை? சிறுதொழிலும் சிற்றறிவும் உடைமையாலென்க. ஆன்மாக்களின் அடங்காச் சிந்தனை ஆபத்தாகவும் வரும். மெய் உணர்ச்சி உண்டானால் ஆன்மசுகம் இலகுவில் கிடைக்கும். (பச் = பந்தித்தல். உ. ஒருவிருதி.)

## கூ. அநாதி நித்தியப் பொருள்களில் ஆன்மாவும் ஒன்றே.

ஆன்மாக்களும், பாசமும், பதியும், அநாதிநித்தியப் பொருள் என்றும், பாசத்தினாலே உயிர்கள் பதியை உணரவில்லை என்றும், மூன்று பொருள்களும் தாதான்மிய முறையால் ஒரேகாலத்திலே ஒரே இடத்திலே தங்கியிருக்கும் என்றும் அறிஞர் தெரிக்கின்றார். ஆன்மா அநாதிநித்தியமானதே!

புறத்திலும் நாம் இவ்வுண்மைக் கருத்தை விளங்கும்படிதான், இறைவன், உருவத்திருமேனிகொண்டு எழுந்தருளியிருக்கும் ஆலயவழிபாட்டை முதலிலே வைத்துப் புலப்படுத்தியருளினார். ஒரு உருவத்திலே அமைக்கப்பட்ட மனம், வேறுவழிகளில் செல்லமாட்டாது. ஒரு உருவத்தையேனும் பற்றாத 'மனம் ஒரே வழிப்படாது. உருவம் அருவுருவம் என்ற முறையில் மனம் பழகிவிட்டால் அருவவழிபாடு சித்திக்கும். ஆலயம் ஒரு தேகம் போன்றது. ஆலயஅமைப்பை அறியாத மூடர்கள் ஆலயமும் வீடுதானே யென்றும், உள்ளிருப்பது கல்லுத்தானேயென்றும் அகங்கதையுறுவர். "வௌவாலார் தின்றகனி வாயாலே வாயாலே" என்ற பழமொழிப்படி தெய்வதண்டம் வருங்கால் அநுபவித்தே தீரும். இங்ஙனம் விரித்து எழுதின் விஷயம் பல்கிச் செல்லும். ஆகமவறிவுடையார்க்கு அதிகம் கூறவேண்டாம். திருமூலயோகிகள் முப்பொருள்களும் நித்தியப்பொருள்கள் என்பதைக் காட்டுவாராய், ஆலயஅமைப்பிற் சாற்றியருளினார். சமயகுரவர், ஆழ்வாராதியர், மார்க்கண்டேயர், சுகப்பிர்ம்மரிஷி முதலினோர் கண்டகோயில்களைக் கும்பிட்டுப் பலமூற்றார்கள்.

ஆய பதிதா னருட்சிவ லிங்கமாம்
ஆய பசுவு மடலே றெனநிற்கும்

ஆய பசுபிட மாகுநற் பாசமாம்
ஆய வரனிலை யர்ய்ந்துகொள் வார்க்கே.

(திருமந்திரம்.)

சதாசிவரூபத்தில்;

"பதியினைப் போற்பசு பாசமநாதி" என்றதுங்காண்க. ஆன்மாக்கள் மல ஏற்றத்தாழ்வுபற்றி விஞ்ஞானகலர், பிரளயாகலர் சகலர் என மூவகையாகப் பிரிக்கப்படும். எறும்புமுதல் பிர்மாபரியந்தம் சகலரென்னும் மும்மலத் தடையுடைய பிரிவேயாகும்.

மலமறைப்பினாலே அறிவுருவான கடவுளையும் சுத்த சாத்துவீகனாகிய தன்னையும் அறியமுடியவில்லை. தன்னை என்றது ஈண்டு ஆன்மாவின்மேற்று. ஆன்மாவோடு கூடிநின்று மறைக்கும் திரோதான சத்தியானது பின்னர் அருட்சத்தியாகமாறுமியல்பினது. ஆன்மாக்களைச் சிவத்துடன் சேர்ப்பது திருவருட்சத்தியாகும். சிற்சத்தி பிரேகசத்தி என்று சத்திபேதங்கள் பலவுள. சத்தி என்றது இறைவனது திருவருளையேயாம். அருட்சத்தியை அதிட்டித்துநின்று சிவபெருமான் எல்லாவற்றையும் சங்கற்பமாத்திரையானே சிருட்டித்தருளுவர். ஆணவாதிமலங்கள் அருவமுடையன.

அந்த மலமா மறியாமை கண்டாயே
அந்த அறிவுநீ ஐயனே!—தொந்தவிருள்
போனதே யுன்னைவிட்டுப் போக்கித் திரோதையருள்
ஆனதே கண்டாய் அறிந்து.

(சிவஞா - போ.)

"ஆனவருள் தன்னை யழைத்தொரு சத்தியதாய்த்
தானுவிருத்தியதற்பான்" * *

(காந்தபுரா.)

சிவஸ்ஸங்கல்ப மாத்ரேண ஸிருஷ்டிகர்த்தா ஸதா!

(சிவன் சங்கற்பசிறியால் சிருஷ்டித்தருளுவர்.) (பௌஷ்.)

## எ. கடவுள் வன்கண்மை இல்லாதவர்.

சிவபெருமான், இப்படிச் சிருட்டிசெய்து விகாரமற்ற ஆன்மாவை வன்கண்மையினாலே பிறப்பிக்கின்றார் என்று தோஷங்கூறுதல் கூடாது. என்னை? திருவருட்செயலாக எல்லாவற்றையும்

சிவபிரான் புரிவதனுலென்க. முன்கூறியபடி கர்மாநுசாரமாகவே சீவகோடிகள் தேகத்தைப் பொருந்தும். ஒருவர் வறிஞரும், ஒருவர் செல்வரும், ஒருவர் ரோகியும், ஒருவர் அரோகியும், ஒருவர் அங்கஹீனரும், ஒருசீவன் மிருகமும், ஒருசீவன் ஊர்வனவும் ஆகப் பிறக்கும் இந்தப் பன்னூறு கோடிபேதங்களும் கடவுளாஞ்ஞையினுலே வந்தனவே. பாரபட்சமாகத் தேகங்களையும், போக்கியப் பொருள்களையும் கடவுள் கொடுத்தால், அவர் வைஷம்மியமுடையரென்றும், கடவுளிலக்கணமில்லாதவரென்றும் பதித்துவபங்க மேற்படும். அப்படி வன்கண்மையாகச் சிவபெருமானை யாண்டுங் கற்பித்துக்கூறவுங் காணேம். இதனுலே அவ்வவ்வுயிர்களிடத்துள்ள புண்ணியபாவங்களைக் காரணமாகக் கொண்டே உயிர்களுக்குத் தேகாதிகள் கொடுக்கப்பட்டனவாகலின், அப் பெருமானிடத்துள்ள கிருபைத்தன்மை இத்துணைத் தென்று இலகுவில் உணரலாகும். புண்ணியம் நற்செய்கையால் வளரும்; பாபம் தீச்செய்கையால் வளரும். புண்ணியம் கடவுளைவழிபடுதல், பெரியோரைப் பேணல், நன்றிமறவாமை, சீவதயை முதலியனவாகப் பலவாம். பாபம், கொலை, களவு, விஸ்வாசகாதம், பொறுமை, உலோபம் ஆதியனவாம். இரக்கமின்றித் தீச்செயல்களை ஆட்சி பண்ணும் மனிதர்கள் எது செய்தாலும் தீமையே வளரும். இஃது சத்தியம்! சத்தியம்!! முக்காலுஞ்சத்தியம்!!! கர்மமும், பூதாதிகளும் தேகமுண்டாக ஏதுக்களாம். வைஷம்மியம்=பாரபட்சம்.

நல்லறமுடையோரையும் தீத்தொழிலாளரையுந் திறம்படவுணரத் தெய்வப் புலமைத் திருவள்ளுவநாயனுர் ஒரு அரியபாவை அருளிச்செய்துள்ளார். அது,

> "அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
> பொறுத்தானே டூர்ந்தா னிடை." என்பதாம்.

இஃது இலௌகிகவொழுக்க நிரையிற் காட்டப்பெற்ற உதாரணமேயன்றி, வைதிகபக்திமார்க்க சூசகமன்று. (அஃதாவது:— திருஞானசம்பந்தமூர்த்திநாயனுரை அப்பர் சுவாமிகள் வேறுபாடு நோக்காது கண்டவுடன் வணங்கியதும், திருஞானசம்பந்தப்பெருமான் இவர்ந்துவந்த பல்லாக்கை, தாம் தாங்கிச் சென்றதும் சிவஞானவழித்தான செயல்கள் என்றுணர்க.)

ஆன்மஞானமே கிஞ்சித்துமில்லாது, அகங்காரப்படுகுழியிலும், மங்கைநல்லாரிளநலப் பாழ்ங்குழியிலும் வீழ்ந்து கரையேறமுடியாது தத்தளிக்கும் உலகப்பற்றுடைய நமது மாயா

விலாசச் செய்கைகளுக்கு, அவ்வுதாரணம் ஓராறுவளவும் ஒப்புவ தன்றென மறுக்க.

### ௮. கடவுள் வியாபகர்; அவரே மோக்ஷதாதா.

கடவுள் எங்கும் வியாபகர். முன்னும் இவ்வாறு உரைக்கப் பட்டது. அவர் கிருபையையே வடிவமானவர், ஆனந்தமயமான வர். "ஆநந்தம்பிரஹ்ம" என்பது உபநிஷதம். ஆன்மலாபம் மோட்சமேயாம். மோக்ஷமருளுபவர் சிவபெருமானே. பக்குவ மடைந்த ஆன்மாக்கள் மோட்சமடையும். முன்னே மோட்சமடைந் தோர்பலர்! தற்காலம் மோக்ஷமடைகின்றோரும்பலர்! இனிமேல் மோக்ஷம்பெற நிற்பாரும் பலரே!

திருச்சிற்றம்பலம்.

தேனுமாயமுதாகி நின்றான் றெளிசிந்தையுள்
வானுமாய்மதி சூடவல்லான் மங்கலக்குடிக்
கோனைநாடொறு மேத்திக் குணங்கொடுகூறுவார்
ஊனமானவை போயறும் உய்யும்வகையதே.

(ஞானசம் - தே - மங்கலக் )

மனிதர்கா ளிங்கே வம்மொன்று சொல்லுகேன்
கனிதங் தாற்கனியுண்ணவும் வல்லிரே
புனிதன் பொற்கழ லீச னெனுங்கனி
இனிது சாலவு மேசற்ற வர்கட்கே.

(நா - தே - தனிக்குறுந்தொகை.)

தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா! வார்கொலோசதுரர்
அந்தமொன்றில்லா வானந்தம்பெற்றேன்
(இ) யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையேகோயில் கொண்டவெம்பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே!
எந்தையே! ஈசா! உடலிடங்கொண்டாய்
யானிதற்கிலனோர்கைம் மாறே.

(மாணி - திருவாசகம்.)

திருச்சிற்றம்பலம்.

உபமானவிளக்கம்.

ஒரு தடாகத்திலே நிறைந்துள்ள தாமரைகளிலே சூரிய ரஸ்மி (ஒளி) சரிவரப்பட்டாலும், அவற்றுள், அலரும் பருவமுடைய அரும்புகளே முதன்முதல் விரிகின்றன. இதனாலே சூரியன் பாரபட்சமாகத் தனது கிரகணத்தை வெளிவரச்செய்தானென்று கூறமுடியாமை வெளிப்படையாகும். அதுபோலச் சிவபெருமான் திருவருளை எல்லா ஆன்மாக்கண்மீதும் ஒரே பெற்றிதாகவே பாலிப்பார். சிற்சத்தி பதிந்த அதிதீவிர தரநிலையுடைய ஆன்மாக்களே மோட்சமாகிய அத்துவிதாநந்தத்தையடையும் என்பதும், இறைவன் பெருங்கருணைத் தடங்கடலாகவுள்ளார் என்பதும் தேற்றமாம்.

அருக்கனேர் நிற்பினு மல்லிருளே காணாக
கிருட்கண்ணே பாசத்தார்க் கீச—னருட்கண்ணாற்
பாசத்தை நீக்கும் பகலலர்த்துந் தாமரைபோ
னேசத்திற் றன்னுணர்ந்தார் நேர்.

(சிவ-போ. கக-சூ. உ-அதி.)

## கூ. சிவனே நிமித்தகாரணர்.

இந்நிலத்தில் வாழும் சகல சீவவர்க்கத்திற்கும் சூரியகிரணம் இன்றியமையாதது. காற்று ஜலம் முதலியனவும் வேண்டப்படும். ஆனால் சூரியனுடைய ஒளி முதன்மையாக வுள்ளதாம். அதுபோல எல்லாச் சராசரங்களுக்கும் மூலகாரணராகிய சிவபெருமானுடைய திருவருள் முக்கியமானதாம். மூவகைக்காரணங்களுள்ளே சிவபெருமான் நிமித்தகாரணர் என்பது உதாரணமுகத்தானே தெளிக.

குடமாகிய காரியத்திற்கு மண் முதற்காரணம். திரிகை சக்கரம் முதலியன துணைக்காரணம். குலாலன் நிமித்தகாரணம்.

சிவபெருமானுடைய அருட்பிரகாசமில்லாவிட்டால் உலகத்தில் ஒன்றும் விருத்தியாகமாட்டாது என்பது உண்மைநூலுணர்ந்தார் துணிபு. சிவபர்க்கராகச் சிவபிரான் விகசிக்கின்றார். காயத்திரி மகாமந்திரப்பொருள் பார்க்க.

தௌய்ர்மஸா மரஸ்யேந சமஸ்த ஜகதாத்மநௌ!

(அபியுக்தர்.)

## ம. மனோநிலைமை.

மக்களாகிய நமது மனோநிலைமையோ மிகவும் கேவலமாகும். எவ்வளவு படித்தாலும் அறிவுண்டாகாத மனிதனை மனிதனென்றே சொல்லக்கூடாது. அறிவுண்டானால் அடக்கமுண்டாகும். ஆன்ம விசாரமுண்டாகும். ஆன்மவிசாரமில்லாவிட்டால், ஆநந்தமுதல் வனை யடையமுடியாது. அறிவை மேலெழவிடாது தடுப்பது மனம். அம்மனம் சஞ்சலப்படக்காரணம் மாயை. மனம், நன்மைதீமை களை நன்கு விசாரியாது ஒன்றைவிட்டு ஒன்றைப்பற்றிக்கொள்ளு தலும், எது சொன்னாலும், கேட்ட அப்போழ்தே உடன்பட்டுப் பின்னர் மறுத்தலும், இன்னது செய்வதெனச் சிலநேரம் சிந்தித் துத் தெளியாது மயங்குதலும் சுபாவமாகவுள்ளது. "சிந்தையை யடக்கியே சும்மா இருக்கின்ற திறமரிது" என்பது பெரியார் திரு வாக்கு.

## மக. சிற்றின்பம்.

சிறியபொழுது அடையும் இன்பம். இதனால் பேரின்பம் ஒன் றுண்டு என்பது தெரிகிறது. சிற்றின்பத்தைப் பற்றிநிற்பதேயன்றி, மனம் அதனை உவர்த்துப் பேரின்பவழியை நாடமுடியவில்லை. ஆராய்ச்சிசெய்து அறிவால் ஆன்மசுகங்கிடைக்கும் மார்க்கமெது வென்று எண்ணவே போதிய அவகாசம் எமக்குக்கிடைப்பதில்லை. நாம் நடைப்பிணம்போலக் கருதப்படவேண்டிய நிலையிலிருப்ப தைச் சிந்திப்பதுமில்லை. சிற்றின்பத்தை விரும்புவதேயன்றிப் பேரின்பமொன்றுண்டென்பதைக் கனவிலும் நினையாமை அறி வின்மையே! பேரின்பமன்றோ ஆன்மாக்களடையவேண்டிய சுகம்! சிற்றின்பம் மிகவுமிழிவுள்ளது! எல்லாருஞ் சந்நியாசவேஷம் போடு வதன்று. அபிலாஷைவைத்துச் சிற்றின்பத்தை வெறுக்கவேண் டும் என்பது கருத்து. தீயில் சூடு இருக்கும் என்பதை அறியாத விட்டில் பூச்சியின் கதிபோலச் சிற்றின்பால் பரநாரியை விரும்பு வாருந் துயரடைவர். பரனருமருள் பாலிப்பாரல்லர்.

"மங்கையர்தம் யோனிமிசை வைத்திருக்கு மாசைதனைப்
பங்குசெய்து நூற்றிலொரு பங்கெடுத்துக்—கங்கையணி
வேணியன்றன் பாதார விந்தத்தில் வைத்தக்கால்
காணலாங் காணாக் கதி."

## ௰௨. மலம் நீங்கவுபாயம்.

மனிதர் குலம், குணம், பணம், இளமை, அவிவேகம் முத லியவற்ருல் சிறந்திருக்கும்போது மலமறைப்பினுலே சிற்றின் பத்தை மதித்து, அதிக அகங்கார ஆவேசமுள்ளவர்களாக இருப் பது சகஜமே! மனிதர்தேகத்தில் ஆன்மாகூடியவழி மலவுபாதி ஏற்ப டல்ராம். பாசத்தை நசிக்கச்செய்வது சிவத்தியானமேயாகும். ஒருவித பலமும் உத்தேசியாது (நிஷ்காமியம்) ஆகத் தியானஞ் செய்துவந்தால் அதுவே சிவஞானப்பேற்றிற்கு ஏதுவாகும். தேகம் வந்த ஞான்றே ஆன்மாக்களுக்குப் பாசமுகிழ்ப்புண்டாய் விடும். உடல் பொருள் ஆவி மூன்றையும் ஈசுவரனுடைமையாகச் சமர்ப்பித்து எல்லாக் காரியங்களையுஞ் செய்தல்வேண்டும். சிவஞா னமுடிவில் சிவம் விளங்கும். சிவத்தோடு அபின்னமறச் சேர் வதே மோக்ஷமாகும். சிவம் விகாரமடையாது. ஆன்மாக்கள் விகா ரமடையும். முன்னும் இதனைக் குறித்துக்காட்டப்பெற்றது. ஸ்ரீமத். மணிவாசகப்பெருமானுக்குத் திருவடிதீக்ஷை புரிந்தருளிய பரமசிவன் திருவாய்மலர்ந்தருளியதையும் இங்கே தருவாம்.

களிம்பு தோய்ந்தசெம் பெனவுனை மருவுங்
கருமை கூர்மலங் கண்டது கலக்கும்
பளிங்கு போன்றதுன் றன்மையம் மலத்தின்
பற்றி னுடல் பலவெடுத் துழன்ருய்
வளங்கு லாம்புவ னந்தொறுஞ் செயுமுன்
வல்வினைப்பயன் வருமுறை நெறியே
யளந்து நாந்தர நுகர்ந்துமே னுகர்வு
மாக்கி யேதிரிந் தனைமன வழுக்கால்.

மலமகல்பவரும் புவிமீதே மானுடவடிவந் தனையெய்திச்
சிலபகலெனினும் பயில்காலைச் சேர்தருமலவாதனை யென்றே
பலமலர் கமழுந்தடமீதிற் பாவருஞானவனல் சேர்வித்
திலதென நீடுஞ் சடம்வேவித் திவ்வடலீந்தோமிந்நாளில்.

மாயாதேகம் மாயச் சிவஞானக்கினி சேர்த்தே பரிசுத்த மாக் கும் என்றும், ஊனக்கண் பாசசம்பந்தமுடைத்தாகலின் ஞானக் கண்ணே சிவத்தைத் தெரிசிக்கச்செய்யும் என்றும் குறித்தனர் மேலோர்.

சார்ந்தாரைக் காத்த றலைவர் கடனாதல்
சார்ந்தாரைக் காத்துஞ் சலமிலனாய்ச்—சார்ந்தடியார்
தாந்தானாய்ச் செய்துபிறர் தங்கள்வினை தான்கொடுத்தல்
ஆய்ந்தார்முன் செய்வினையு மாங்கு.

(சிவ-போ. ௰-சூ.)

## ௰௩. கடவுளை ஆன்மா அடையும் வழி.

ஞானக்கண்ணால் நாடும்போது சிவமும் சீவனும் வேறுவேறான இருபொருள்களென்று நன்கு தெரியவரும். இருபொருள்களும் ஒன்றென்பாருமுளர். சிவசீவ பேதமுணர்ந்து வழிபட்டால் ஆன்மாக்கள் இறைவராகிய பதியை யடைந்து இன்புறும். முதலிலே நான் பிர்மம் என்றால் வளர்வது அகங்காரமேயாகும். சற்குருவாயிலாகவே சிவஞானபோத முண்டாகவேண்டும். குருவே "தத்துவமஸி" என்று உபதேசம் புரியவேண்டும். (தத் + துவம் + அஸி = அது நீ ஆகின்றாய்) "மின்னினும் நிலைமையில்லா விழுப்பொருள் யாவும் வேண்டேன், உன்னடியடைந்து நாயேனுறுபவமொழித்தல் வேண்டும்" என்றவாறே நாம் இறைவனைப் பிரார்த்தனை செய்து துதித்துவருதல் அன்புவளர ஏதுவாகும். அன்புக்கெளிவந்தவர் சிவபெருமானே. "பேசாதநாளெல்லாம் பிறவாநாளே" என்பது தமிழ்மறை. யந்திரம் மாதிரி வாயில் ஏதும் இட்டு அரைத்தாலென்? அதிக வாசால கோசரமாக வைது வார்த்திகம் வரையும் வார்த்தையாடினாலென்? சத்துப்பொருளான கடவுளைப் பேசாத நாள் பேசாதநாளேயாம். முத்திநிலை இன்னதன்மைத்தென்பதை ஸ்ரீமத். மணிவாசகப்பெருந்தகையார் இவ்வாறே அருளிச் செய்தார்.

திருச்சிற்றம்பலம்.

வான்கெட்டு மாருதமாய்த் தழனீர்மண் கெடினுந்
தான்கெட்ட லின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்(கு)
ஊன்கெட் டுணர்வுகெட் டென்னுள்ளமும் போய்
நான்கெட் டவாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ.

திருச்சிற்றம்பலம்.

இந்தத்திருவாசக அனுபூதிவாக்கு எவ்வளவு பெருமைவாய்க் திருக்கின்றது! இன்னும், சிவஞானானுபூதியை ஒருபாசுரத்தில் விளக்கி வாதவூரர் கூறினர். அதுவும் வருமாறு.

### முத்திக்கலப்புரைத்தல்.

திருச்சிற்றம்பலம்.

பானினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
வூனினை யுருக்கி யுள்ளொளி பெருக்கி
உலப்பிலா வானந்த மாய
தேனினைச் சொரிந்து புறம் புறந்திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே.

திருச்சிற்றம்பலம்.

இன்னோரன்ன திருவாக்குக்களை மாநுடர்களாகிய நாம் நன்கு சிந்தித்தல்வேண்டும். நாம் கடவுளை மனம் வாக்கு காயம் என்ற மூன்றினாலும் வழிபாடுசெய்து ஆசையைப் படிமுறையானே அகற்றவேண்டும். ஆசையகன்றால் ஆத்மஞானமுண்டாகும். ஆத்மஞானத்தினாலே உலகிலுள்ள நித்த அநித்தப் பொருள்களின் கூறுபாடு தோன்றும். பசு, பாச ஞானவழிகள் தானே நீங்கும். இவை நீங்கவே சிவஞானங்கைகூடும். சிவஞானத்தினாலே பேரின்பங் கிடைக்கும். தேகமும் ஆன்மாக்களும் வேறாயுள்ளன. பதி, பசு பாச ஞானங்களாற் றெளிய முடியாத முதல்வர். நாம் என்றது ஆன்மாக்களை. இவ்வுண்மைகளைத் திருத்தொண்டர்கள் அறிந்து இன்பமடைந்தார்கள். ஆன்மா சதசத்தன் என்பதே கருத்தாக இதுவரையும் பற்பல மேற்கோள்கள் காட்டியும் பெரியார் கருத்தைக் கூட்டியும் நமது கருத்தை நாட்டியும் இப் பிரசங்கத்தைச் செய்தாம். இன்னும், ஆன்மர் சதசத்தன் என்பதைக் கரதலாமலகம் போல மணிவாசகப்பெருமான் அருளிச்செய்துள்ளார். அஃது,

திருச்சிற்றம்பலம்.

சிந்தனைநின் றனக்காக்கி நாயினேன்றன்
கண்ணிணைநின் றிருப்பாதப் போதுக்காக்கி
வந்தனையு மம்மலர்க்கே யாக்கிவாக்குன்
மணிவார்த்தைக் காக்கியைம் புலன்களார
வந்தெனையாட் கொண்டுள்ளே புகுந்தவிச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையேயுன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனையமேனித்
தனிச்சுடரே யிரண்டுமிலித் தமியனேற்கே.

திருச்சிற்றம்பலம்.

என்பதாம்.

உமாபதி சிவாசாரிய சுவாமிகளும்,

சத்திது வென்ற சத்துத் தானறியாத சத்தைச்
சத்தறிந் தகலவேண்டா வசத்திது சத்தி தென்றோர்
சத்திரு ளொளிய லாக்கண் டன்மைய தாமசத்தைச்
சத்துட னின்று நீக்குந் தன்மையாற் சதசத்தாமே.

(சிவம் - ஆன் - ளை.)

இவைகளாலும் ஆன்மாவின் நிலைமையும், இலக்கணமும் அறிவுடையார்க்குக் கிரித்தீபமென்னத் திகழும் பான்மைத்தே! இந்தச் சீவர்களை எப்படிச் சிவபெருமான் அடிமைக்கொண்டு ரக்ஷிப்பார் என்றால் மற்கடசம்பந்த மாகவும், மார்ச்சாரசம்பந்த மாகவும் அடிமைக்கொண்டருளுவார்.

மற்கடசம்பந்தமாவது:—குரங்கு பாயுங்காலத்தில் குட்டி தாயைவிடாது பிடித்துக்கொள்வது. (சிவன் திருவருளை ஆன்மாவே தேடிக்கூடுதல்.)

மார்ச்சாரசம்பந்தமாவது:—பூனை தன்குட்டிகளைத் தானே வலிந்து தூக்கிச்சென்று பாதுகாப்பது. (சிவன் பக்குவான்மாக்களைத் தாமே வலியவந்து ஆட்கொள்வது.)

ஆன்மாக்கள் பிறவிப்பெருங்கடலை நீந்திக் கரையேற வேண்டு மாயின், இறைவன்றிருவடியை நின்றுமிருந்துங் கிடந்தும் நடந்தும் எக்கிலேசகாலத்தும் எந்த மகிழ்ச்சிக்காலத்தும் மறவாது போற்றவேண்டும். இவ்வளவில் எடுத்தவிஷயத்தை முடிப்புரை கூறிப் பூர்த்திசெய்கின்றேன்.

பிறவிப் பெருங்கட லீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார். (திருக்குறள்.)

## உபசம்ஹாரம்.

இதுகாறும் உரையாடியவாற்றானே ஆன்மா என ஒன்று உண்டென்பதூஉம்; அந்த ஆன்மா தேகத்தோடு கூடியே வினைகளைச் செய்யும் என்பதூஉம், ஆன்மாக்கள் பல என்பதூஉம், பலவாகிய ஆன்மாக்களுள் இருவினையொப்பும் மலமரிபாகமுமுற்ற ஆன்மாக்கள் இறைவராகிய கடவுளையடைந்து இன்புறூஉம் என்பதூஉம், இறைவாநுக்கிரகமென்று மாநுஷயர்களாகியயாம் எத்தொழிலையும் புரியவேண்டும் என்பதூஉம், அகங்காரமமகாரங்களை ஒழித்து ஆன்மஞானத்தையும், சிவஞானத்தையும் முறையே வளரச்செய்தால் ஆன்மஈடேற்றம் இலகுவில் கைகூடும் என்பதூஉம், ஆன்மா சதசத்தன் என்று அழைக்கத்த நிலையிலுள்ளது என்பதூஉம், இவ்விதவுணர்ச்சி தலைசிறந்து வீடடையச்சாதனமானது இம் மக்கட்பிறப்பே யென்பதூஉம், இப்பிறவியினின்று இறைவனைச் சதாதியானம்புரிந்து இன்பமடைந்துவாழ நாம் சிந்திக்கவேண்டும் என்பதூஉம், சிவசின்னதாரணம், ஸ்ரீபஞ்சாட்சரஜபம், ஆலயசேவை, தபம் முதலியனயாவும் ஆன்மபரிசுத்த வழிகளாகுமாகலின், அவைகளை ஏற்றவாறே ஒவ்வொருவரும் அணியாகக்கொண்டு சுகம்பெற முன்னிற்கவேண்டும் என்பதூஉம், பிறவுமாம். சுபமஸ்து. ஓம்தத்சத்.

## திருப்புகழ்.

---

### கதிர்காமம்.

திருமக ளுலாவு மிருபுயமு ராரி
திருமருக நாமப் பெருமாள்காண்
செகதலமும் வானு மிகுதிபெறு பாடல்
தெரிதரு குமாரப் பெருமாள்காண்
மருவுமடி யார்கள் மனதில்விளை யாடு
மரகதம யூரப் பெருமாள்காண்
மணிதரளம் வீசி யணியருவி சூழ
மருவுகதிர் காமப் பெருமாள்காண்
அருவரைகள் நீறு படஅசுரர் மாள
அமர்பொருத வீரப் பெருமாள்காண்
அரவுபிறை வாரி விரவுசடை வேணி
அமலர்குரு நாதப் பெருமாள்காண்
இருவினையி லாத தருவினைவி டாத
இமையவர்கு லேசப் பெருமாள்காண்
இலகுசிலை வேடர் கொடியினதி பார
இருதனவி நோதப் பெருமாளே.

# (௪) மும்மலமுகிழ்ப்பு.

—————*௦*—————

ஶக்திஹஸ்தம் விரூபாக்ஷம் ஶிகிவாஹம் ஷடாநநம்।
தாருணம் ரிபுரோகக்நம் பாவயே குக்குடத்வஜம்॥

அஞ்சு முகந் தோன்றில் ஆறு முகந் தோன்றும்
வெஞ்சமரந் தோன்றில் வேல்தோன்றும்—நெஞ்சில்
ஒருகால் நினைக்கில் இருகாலுந் தோன்றும்
முருகாவென் றோதுவார் முன்.

## மும்மலம்.

அஃதாவது - உயிர்களைப் போக்கியப்பொருள்களில் ஆசை வைக்கச் செய்தும், இறைவனைச் சேரவொட்டாது தடுத்தும் வரும் மூன்று மலங்களின் அதிகரிப்பால் நிகழ்வன கூறல். எடுத்து ஆராயத் தொடங்கியுள்ள விடயங்களின் முறைமையால் ஈண்டு இவ்விடயம் வைக்கப்பட்டது. பாசம், மலம், மறைப்பு, கட்டு முதலியன ஒரு பொருளில் வரும்.

மலம்: ஆணவம், கன்மம், மாயை என்பனவாம். மாயேயம், திரோதாயி என இரண்டுங் கூட்டிப் பாசம் ஐந்தென்று கொள்வது முண்டு.

## பாசமுண்டென்பது.

இந்த உலகின்கண்ணே மலமறைப்புடைய ஆன்மகோடிகளே அதிகம். ஆன்மாக்கள் தேகத்தைப்பற்றி நிற்கு ஞான்றே இறைவனைக் காணவேண்டும். அங்ஙனங் காணாமையால் அதற்கு ஒரு காரணம்வேண்டும். இறைவனுளன் என்பது மேலே எடுத்து விளக்கியிருக்கின்றாம் காரியமாகிய பிரபஞ்சத்தையும், தேகாதிகளையும் இறைவன் மாயையை அதிட்டித்து நின்று காணச் செய்கின்றார் என்று சொல்லப்படுதலின், அவை இன்ன தன்மைத்தென்றுணர ஞான முகிழ்ப்பு வேண்டும்.

அறிவு ஞானம் என்ற இரண்டும் வெவ்வேறாகும். ஞானத்திற்கு எதிரானது மலம். ஞானத்தைப் பரஞானம், அபரஞானம் என்றும்; பாசஞானம, பசுஞானம், பதிஞானம் என்றும்; இலௌகிகஞானம், பாரலௌகிகஞானம் என்றும் பலபடப் பெரியோர் கூறுவர். பாசநீக்கத்திற்கு ஞானம் அங்குரித்து விகஸிக்கவேண்டும் என்பதே கருத்தாகும். செந்நாப்போதார் தமது உத்தரவேதத்திலே, சாமானிய உணர்ச்சியை "அறிவுடைமை" என்றளவில் விளக்கி, உண்மையான உணர்ச்சியாகிய ஞானத்தை "மெய்யுணர்வு" என்ற அதிகாரத்தில் பிரித்தோதினர். இவைகளை நோக்கி ஆராயுங்கால், மாநுடர்களுக்கு அறிவு நிரம்பியிருந்தாலும், பாசசம்பந்தமுண்டு என்பது தேற்றமாம். பசு என்று முன்பு கூறியவிடத்திலே பாசசம்பந்தமுடைமையால், ஆன்மாக்கள் பசு என்று அழைக்கப்படும் என்றும்; ஆணவமலமறைப்பால் உயிர்களை அணு என்று கூறுவர் என்றுங் காட்டப்பட்டன. ஞானம் என்பது பிறிதொருவிடயமாகலின் விரித்திலம்.

### மலம் சடத்துவமானது.

மேலே சொல்லிவந்த மும்மலங்களும் சடத்துவமாயுள்ளன. அவை இறைவனுக்குப் பரிக்கிரக சத்திகள் என்று கூறுப. சித்துப்பொருளான ஆன்மாக்களை பாடாணம் முதலிய சடவஸ்துக்கள் எப்படி உபாதிசெய்கின்றனவோ, அதுபோல், சடப்பொருள் என்றோதிய மலமும் அறிவுடைய ஆன்மாக்களை மறைத்து நின்று வருத்தும் என்றறிக.

### உலக தோற்றம்.

மலங்களுள் ஒன்றாயுள்ள மாயையே உலகதோற்றத்திற்கும், உயிர்கள் தேகாதிகளைப் பொருந்துதற்கும் காரணமாகும். இவற்றின் ஒடுக்கத்திற்கும் மாயை காரணமாம். மாயா = மாயை. மா = ஒடுங்குதல்; யா = உண்டாதல். மாயாசம்பந்தத்தால் மனிதர்கள் மதிமயங்கிப் பிறவியை வளர்ப்பதுதான் சகஜமாகிவிட்டது. "யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக் கென்கடவேன்" என்பதைச் சிந்திக்கவேண்டும்.

## ஆணவமலம்.

இஃது, ஆன்மாக்களை அணுத்தன்மை யாக்கலின் ஆணவம் என்னும் பெயர்த்து. ஆணவமலமானது: ஒன்றாய், பேரிருள் போனின்று அஞ்ஞானத்தை உண்டாக்குவதாய், தத்தம் பரிபாக காலத்திலே நீங்கும் அநேக சத்திகளையுடையதாய், ஆன்மாக்களோடு அநாதியே கலந்து நிற்பதாய், எல்லாவித துன்பங்களுக்கும் காரணமான மூலமலமாய், ஆன்மகோடிகளின் அறிவு தொழில் முதலியவற்றை முற்றாக விளங்க வொட்டாது தடுத்து அழிவில்லதாய் நிற்குந் தன்மையதாம்.

ஆணவம், கன்மம், மாயை என்று மும்மலமுள என்றும், மலமறைப்பே அகங்கார வளர்ச்சிக்கு ஏதுவாய்த், தற்பரவஸ்துவை அறிய வொண்ணாது தடைசெய்து நிற்பது என்றும் திருமூலயோகிகள் அருளிச் செய்தார்.

"சிவத்தடையாமைச், செறிந்து வையகத்துய்ப்ப தாணவந் தேரள்."

"ஏகமாய்த் தங்கால வெல்லைகளின் மீளும்
எண்ணரிய சத்தியதா யிருளொளிர விருண்ட
மோகமாய்ச் செம்பிலுறு களிம்பேய்ந்து நித்த
மூலமல மாயறிவு முழுதினையும் மறைக்கும்"

* * * *

மலக்கலப் பாலே மறைந்தது சத்தி
மலக்கலப் பாலே மறைந்தது ஞானம்
மலக்கலப் பாலே மறைந்தனன் றாணு
மலக்கலப் பாலே மதியொளி யாமே.

(தாணு = சிவன்.)

ஆணவ மாயையுங் கன்மமு மாமலங்
காணு முளைக்குத் தவிடுமி யான்மாவுந்
தாணுவை யொவ்வாமற் றண்டுல மாய்நிற்கும்
பேணுவாய் மற்றுன் பாசம் பிரித்தே.

(தண்டுலம் = அரிசி).

இவ்வாணவமலத்தின் காரியம்: மோகம், மதம், இராகம், கவலை, தாபம், வாட்டம், விசித்திரம் என்று ஏழுவகையாகும். மோகம் - மயக்கத்திற்கு ஏதுவாயது. மதம் - மதித்தற்குக் காரணமாயது. இராகம் - ஆசைவளர்ச்சிக்கு முதலாயது. கவலை - கவலுதற்குக் காரணமாயது. தாபம் - தபித்தற்கு மூலமாயது. வாட்டம் - சோர்வடைதற்கு ஆதியாயது. விசித்திரம் - நானாவிதபேதுவாயது என்பர். (திராவிடமா - பா.)

ஆணவமலமுகிழ்ப்புக் காரணத்தானே சித்துப்பொருளாகிய ஆன்மாக்கள் பாதிக்கப்பட ஏது இன்று என்று மறுத்துரைக்கின், அஃது பொருத்தமின்றென்று மறுக்க. எங்ஙனம் என்னில், ஆணவமலம் சத்காரியங்களில் ஆன்மாவைப் பிரவர்த்திக்க இடங்கொடாது தடுத்தற்கு மியல்பிற்றால் என்பது. அறிவுடைப் பொருளாகிய உயிரை ஆணவமலமாகிய சடப்பொருள் மயக்கும் என்பதே ஈசுரவாக்கு.

ஃதிரோஹித ஶாவொஷி ஶமெெ நவ ஸுமக்ஷிஹிஃ।
திரோஹிதொஷி காயெஷ ுநவாண ஸம்ப்ரவதெ॥

"ஆன்மா ஆணவமலத்தால் தனது சத்திகள் மறைபடாமலிருந்தாலும், காரியங்களில் மறைபட்டதுபோலிருந்து பிரவர்த்திக்காதிருக்கும்." என்பது பௌஷ்கராகமம்.

## திரோதானமலம்.

இதனைப் பதியின் சத்தியாகவுங் கூறுவர். ஆணவம் என்னும் மலம் கெடும்படி திரோபவித்து நின்று வருத்துவதே இதன் குணமாகும். மலமாகக் கூறப்பட்ட இதுவே பின்பு திரோபவ சத்தியாக மாறும். அங்ஙனம் மாறுதலடைதலால் பதியோடு ஆன்மாவை இரண்டறக் கலப்பிக்கும். திரோதானம் = இடையிலே மறைப்பது.

* * * *

"பாகமாம் வகைநின்று திரோதான சத்தி
பண்ணுதலால் மலமெனவும் பகர்வரது பரிந்து,
நாகமா நதிமதியம் பொதிசடையா னடிகள்
நணுகும்வகை கருணைமிக நயக்குந் தானே"
(சிவப்பிரகாசம்.)

## மாயா மலம்.

ஆணவமல கன்மமலங்களோடு சேராது சுத்த காரியப் பிரபஞ்சத்திற்கு முதற்காரணமாயுள்ளது சுத்தமாயை; இம்மாயையிலே அடங்கியதாய், மலகன்மங்களோடு கூடியதாய், சுத்த அசுத்த காரியப் பிரபஞ்சத்திற்கு முதற்காரணமாய் உள்ளதே அசுத்தமாயை. சுத்தமாயை அசுத்தமாயை என்று மாயை இரண்டாகவகுக்கப்பட்டமை காண்க. மேலே காட்டியதே பேதமுமாம். அசுத்தமாயையிலிருந்து தூல பரிணாமமாய அசுத்த காரியப் பிரபஞ்சந்தோன்ற ஏதுவாயிருப்பதே பிரகிருதிமாயை. இம்மூன்றையும் விந்து, மோகினி, மான் என்று சொல்லப்படும். பிரபஞ்சம்: சொற்பிரபஞ்சம், பொருட்பிரபஞ்சம் என்று இருதிறப்படும் வன்னம், பதம், மந்திரம் ஆகிய மூன்றும் சொற்பிரபஞ்சமாம். கலை, தத்துவம், புவனம் ஆகிய மூன்றும் பொருட்பிரபஞ்சமாம். மாயையின்மேல் ஆன்மா பரமான்மாவாக விளங்கும். மாந்தர் மயக்கம் பெரிதுமுடையராகவே பிறவி மாறி மாறி நிகழும்.

## சுத்தமாயை.

சிவபெருமானுடைய திருவருளாகிய சத்தியால் சுத்தமாயையும், அதினின்று நாதமும், அதினின்று விந்துவும், அதினின்று சாதாக்கியமும், அதினின்று மாகேசுவரமும், அதினின்று சுத்தவித்தையும் பிறக்கும். விந்துவிலிருந்தே சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்ற வாக்குக்களுந் தோன்றின. மேலே காட்டிய ஐந்து தத்துவங்களையும் அதிட்டானமாகவுடைய ஈசுவரன்:—சிவம், சத்தி, சதாசிவன், மகேசுவரன், சுத்தவித்தை என்ற பெயர்களால் அழைக்கப்படுவர்.

உன்னலருங் பரசிவன்ற னருளாலே நாதம்
உதிக்குமிருங் குடிலைதனில் விந்துவரு நாதர்
தன்னிலதி னொளிவளருஞ் சதாசிவரா மவரில்
தயங்கவரு மீசர்வித்தை தனையளிப்ப ரதனால்
மன்னுவரிவ் வகையையவர் வாய்மையினுல் முன்னே
வந்திடுமென் றுரைசெய்த விந்துவழா வகையே
முன்னுதவு சூக்குமாதி யொருநான்கு மென்று
மொழிந்திடுவ ருங்கலைகள் முதிர்ந்துளோரே.

(சிவப்.)

## அசுத்தமாயை இதுவென்பது.

அசுத்தமாயையானது காரியநிகழ்ச்சியில் தநு - கரண - புவன - போகம் என்னும் நான்கு பிரிவுடைப் பொருள்களாய், ஒன்றற்கொன்று சமானமில்லாத தூல சூக்குமத்தன்மையுடைய தத்துவங்களாய், காரணரூபத்தில் நித்தமாய், ஒன்றாய், என்றும் அருவமாய், கன்மமலவுபாதி நீங்கும்வரையும் ஆன்மாக்களுக்கு மயக்கஞ் செய்வதாய், சடமாய், சஞ்சலமில்லதாய், தன்னிடத்திருந்து உண்டாய காரியங்கள் முழுதினும் செறிந்து நிற்பதாய், தோன்றிய காரியங்கள் யாவும் மீளவும் வந்து ஒடுங்குதற்குரிய இடமாய், அந்திய ஒடுக்கமாகிய சங்கார காலத்திலே ஆன்மகோடிகள் வந்து பொருந்துந் தானமாய், மும்மலத் தொகுதியில் ஒருபகுதியாய், திரோதான சத்தியாற் காரியப்படுத்தப்படுவதாய் இருக்கும். இஃதே அசுத்தமாயா இலக்கணமாம்.

உருவாதி சதுர்விதமா யொன்றொன் றொவ்வா
வுண்மையதாய் நித்தமா யொன்றா யென்றும்
அருவாகிக் கன்மாந்தம் அணுக்க ளியார்க்கும்
ஆவார மாயசித்தா யசல மாகி
விரிவாய தன்செயலின் வியாபியா யெல்லாம்
விரிந்தவகை புரிந்தணைவின் மேவியவை யொடுங்க
வருங்கால முயிர்களெல்லா மருவிடமாய் மலமாய்
மன்னியிடு மரனருளால் மாயை தானே.

(சிவப்பிரகாசம்.)

## தத்துவங்களின் அடைவு.

அசுத்தமாயையிலிருந்து காலம், நியதி, கலை, என்பன தோன்றும்; கலையில் வித்தை தோன்றும்; வித்தையில் ராகந்தோன்றும்; இவ்வைந்தையும் பஞ்சகஞ்சுகம் என்ப. இவை சம்பந்தமடைந்த ஆன்மா பஞ்சகஞ்சுகன் என்று அழைக்கப்படும்.

## கன்மமலம்.

ஆன்மாக்களால் எடுக்கப்பட்ட உடம்புகளுக்குக் காரணமாய், பலவிதமான அநுபவிப்பை உண்டாக்குவதாய், ஜனன மரணத் துன்பங்களை உண்டாக்குவதாய், பற்பல பேதங்கள் உள்ள

தாய், ஆன்மாக்கள்தோறும் சென்று பொருந்துவதாய், மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் இயற்றப்படுவதாய், புத்தியிலே கலந்து நிற்பதாய், இருவினைத்திறங்களாகிய புண்ணிய பாவங்களாய், சங்காரகாலத்து மாயாகாரணத்திலே போய் ஒடுங்கும். இந்த மூன்றுபிரிவாகும். (க) நல்லசாதி, தீயசாதி; (உ) தீர்க்காயுள், அற்பஆயுள்; (௩) நல்லபோகம், கெட்டபோகம் என்பன. இவை மூன்றும் ஒவ்வோர் ஆன்மாக்களுக்கும் அநாதியே கூடியுள்ளன. இப்புசிப்பு ஊழ்வினைப்படியே உண்டாகும். ஊழானே புசிப்பு வருவது செய்தமுறைபற்றியன்று. வன்மை, மென்மையான செயல்பற்றியேயாம். இந்தக்கன்மம் சூக்குமகன்மம், அதிசூக்குமகன்மம், தூலகன்மம் என்று மூன்றாகும். இவற்றை முறையே சஞ்சிதம், பிராரத்துவம், ஆகாமியம் என்ப.

நண்ணியிடு முருவதனுக் கேதுவாகி
நாநாபோ கங்களாய் நாசோற் பத்தி
பண்ணிவரு மாதலா னாதி யாகிப்
பலவாகி யணுக்கடொறும் படர்வ தாகி
எண்ணிவரு மனவாச கன்மத்தா லியற்றும்
இயல்பினதாய் மதிகதமா யிருபயனும் பாவ
புண்ணியமாய்ப் புலர்காலை மாயை மேவிப்
பொருந்துமிது கன்மமலம் புகலு மாறே.

(சிவப்பிர - உ௮)

## (க) சஞ்சிதம்.

அநாதியாகவே பிறவிகடோறும் செய்தவினை புசித்து மிஞ்சியிருப்பது. காலாத்துவா, புவனாத்துவா, வர்ணாத்துவா, பதாத்துவா, தத்துவாத்துவா என்பவற்றில் இது கட்டுப்பட்டிருக்கும். பயிரிடுவானொருவன் தன்னுடைய முயற்சியால் விளைந்த தானியத்தை இட்டு வைத்திருக்கும் களஞ்சியம் போலும்.

## (உ) பிராரத்துவம்.

சஞ்சிதத்திலே அற்பம் அநுபவித்து வருவானைப்பின்னொரு சரீரத்தை யெடுப்பித்து, சாதி, ஆயுள், போகம் இவற்றைக் கொடுக்கும். களஞ்சியத்திலிருந்து தானியத்தை எடுத்து அநுபவிப்பதைப் போலும்.

## (௯) ஆகாமியம்.

பிராரத்துவம் புசிக்குங்காலத்தில் வந்து சேரும் புண்ணிய பாவங்கள். அவை, மனோவாக்குக்காயங்களாகிய முக்கரணங்களினாற் செய்யப்படும் நற்செயலுந் தீயசெயலுமாம். களஞ்சியத்திலே இருக்கும் தானியத்தை எடுத்துப் புசிக்கும்போது, அக்களஞ்சியம் குறையாவண்ணம் பின்னும் விளைவித்து நிறைத்து வைத்தல்போலும்.

பிராரத்துவமென்று முற்கூறியவொன்றே ஆதிதெய்விகம், ஆதிபௌதிகம், ஆதியான்மீகம் என்று மூன்றாகும்.

மாதாவின் கர்ப்பத்திலிருக்கும்போது உண்டான துக்கம், பின்பு பிறத்தல், இறத்தல், நரை, திரை, யமவேதனை, நரகவேதனை முதலியன ஆதிதைவிகமாகும்.

குளிர், உஷ்ணம், மழை, காற்று, இடி, சுவர்வீழ்தல், முதலிய ஆதிபௌதிகமாகும்

தந்தமக்குச் சரீரத்திலுண்டான வியாதிகளினாலும், மிருகங்களினாலும், அரசராலும், பசாசுகளாலும், சள்வராலும், மனிதராலும், உண்டாகின்ற துக்கங்களும்; பிறருடைய கல்வி, செல்வம், அழகு முதலியன நோக்கிப் பொறாமையடைதல், நினைத்ததே சரியென்று புத்திகொண்டுசெய்தல், கோபித்தல், விசுவாசகாதஞ்செய்து ஏமாற்றல் முதலியனவும் ஆதியான்மீகமாகும். ஆன்மீகம் சரீரத்தினாலும், மனதினாலும் உண்டாகும் முறைபற்றி இருவிதமாகும்.

கன்மநெறி திரிவிதநற் சாதியாயு போகக்
கடனதென வருமூன்று மூயிரொன்றிற் கலத்தல்
தொன்மையதா மூல்லதுணை வாகா தானுந்
தொடங்கடைவி னடையாதே தோன்று மாயித்
தன்மைதரு தெய்விகமுற் பவுதிகமான் மிகமாந்
தகையினுறு மசேதனசே தனத்தாலுஞ் சாரும்
நன்மையொடு தீமைதரு சேதனனுக் கிவனூண்
நாடிதெ னூழ்வினையா னூறுருந் தானே.

மேலைக்கு வருவினையே தென்னி லங்கண்
விருப்புவெறுப் பெனவறியவ் வினைவு மெல்லாம்
மூலத்த வினைப்பயில்வா மென்னி னுமென்
முற்றியதன் பயனுக்கு முளைக்கு மென்பர்
ஞாலத்து வினைகளிரு திறமாகும் புந்தி
நண்ணாத வினைநணுகும் வினையெனவொன் றிரண்டாய்
ஏலத்தா னித்மகித மாமிதனால் வழுவா(து)
எய்தியிடும் புண்ணியபா வங்க ளென்றே.

மாயேயமலம்.

ஆன்மாக்களுக்கு மலத்தால் மறைக்கப்பட்ட ஞானக்கிரியைகளை வெளிப்படுத்தும்பொருட்டும், ஆன்மாக்கள் தாந்தாஞ் செய்த வினைகளை அனுபவித்தொழிக்கும் பொருட்டும், அவசியம் வேண்டப்படும் தனு கரண புவன போகங்கள் காரியப்படும்போது முற்கூறிய அசுத்தமாயா காரணத்தினின்றும், சிவசத்திகள், அவற்றைத் தோற்றுவிக்க, அவைகளோடு பொருந்தி நடத்தப்படுவதாகச் சொல்லுஞ் சுத்தமாயையின் கூட்டமாகிய சுத்த தத்துவங்களாம். சிவனுடைய அருட்சத்தியே திரோதமாய் நின்று மலத்தைக் காரியப்படுத்தலால் மலம் என்று சுத்ததத்துவங்களை உபசரித்துக் கூறப்பட்டது.

இதுகாறுங் கூறிப்போந்த வாற்றானே, ஆணவம், திரோதாயி, மாயை, கன்மம், மாயேயம் என்னும் ஐந்து மலங்களையும் ஆன்மாக்கள் அடைந்து, பிறப்பிலும், வாழ்விலும், இறப்பிலும் தங்கிப் பூமி, பாதாளம், மேலுலகமாகிய சுவர்க்கம் என்ற மூன்றுலகத்தும் கொள்ளிவட்டமும் காற்றாடியும்போலக் கணந்தோறுஞ் சுழன்று சிவாஞ்ஞைப்படி நடக்கும் என்பதுணர்க. உயிர்கள், இருவினையொப்பும் மலபரிபாகமும் உண்டாயவழி பேரின்படையும். பேரின்பமடைதற்குரிய மாநுடப்பிறப்பினருமையும், பெருமையும் இனிமேல் எடுத்துச் சிறிது காட்டுவாம். தத்துவங்களின் தோற்ற ஒடுக்க முறைகளும், அவத்தை இலக்கணமும் பின்னர்க் கூறுவாம். சுபமஸ்து.

## திருப்புகழ்.

நாவேறு பாமணத்த பாதார மேநினைத்து
நாலாறு நாலுபற்று வகையான
நாலாரு மாகமத்தி னூலாய ஞானமுத்தி
நாடோறு நானுரைத்த நெறியாக
நீவேறெ னாதிருக்க நான்வேறெ னாதிருக்க
நேராக வாழ்வதற்கு னருள்கூர
நீடார்ச டாதரத்தின் மீதேப ராபரத்தை
நீகாணெ னாவனைச்செ லருள்வாயே;
சேவேறு மீசர்சுற்ற மாஞான போதபுத்தி
சீராக வேயுரைத்த குருநாதா!
தேரார்கள் நாடுசுட்ட சூரார்கள் மாளவெட்டு
தீரா! குகா! குறத்தி மணவாளா!
காவேரி நேர்வடக்கி லேவாவி பூமணத்த
காவார் சுவாமி வெற்பின் முருகோனே!
கார்போலு மேனிபெற்ற மாகாளி வாலைசத்தி
காமாரி வாமிபெற்ற பெருமாளே!

### கதிர்காமம்.

இறவாமற் பிறவாமல்
எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான
பெருவாழ்வைத் தருவாயே.
குறமாதைப் புணர்வோனே!
குகனே! சொற் குமரேசா!
கறையானைக் கிளையோனே!
கதிர்காமப் பெருமாளே!

# ரு. மனிதப்பிறப்பின் மகிமை.

—————:*:—————

விடலரிய பெருந்தெய்வச் சிறைமீள மறைமுனிவர் விண்ணோர் வாழ
மடலவிழ்கற் பகமிழலு மரசிருப்பு மமருலகும் மகவா னெய்தக்
கடலுததி யோலமிடக் கிரிவீழச் சூரனுரங் கலங்கச் செங்கை
அடலயில்வேல் பணிகொண்ட வொருகுமர னிருசரண மகத்துள்
[ளவைப்பாம்.

அஃதாவது சராசரங்களில் மனிததேகத்தைப் பொருந்திய உயிரே மிக்க புண்ணியமுந் தக்க கண்ணியமும் வாய்ந்தது என்றும், அவ்வுயிர் மானுடப்பிறப்பினைப் பெற்றது பெருமகிமையாகும் என்றும் விளக்குதல். என்னை? மனிதர் என்று சொல்லப் படுவார், நல்லுணர்ச்சி தலைப்படச் செந்நெறி கடைப்பிடித்தொழுக வேண்டியது ஆவசியகமாகும் என்று பெரியோர் கட்டளையிட, அதனைப் பொருட்படுத்தாதார் பலராகி மல்குதல்பற்றி யென்க.

## மனிதன்.

உலகத்திலே நாம், பல்விதமான தேகங்களையும், உயிர்கள் பெற்று வாழக் காண்கின்றோம். எல்லாத்தேகங்களையும் ஆன்மாக்கள் பெறுவது கர்மாவினாலேயாம். கர்மத்தின் ஏற்றத்தாழ்ச்சியானே தேகங்கள் பற்பல பேதங்களாகித் தோன்றும். தாவரம், நீர்வாழ்வன, ஊர்வன, பறவை, விலங்கு, மனிதர், தேவர் என்று உயிர்களுடையும் பிறவிகள் ஏழாம். இவ்வேழனுள்ளும் மனித தேகியாக வருவது ஓருயிரின் புண்ணியமென்றும், அன்னது மிக்க அருமையென்றும் ஆன்றோர் அறைவர். மனிதசரீரம் மகிமையடையக் காரணங்கள் பலவுள; சிலகாட்டுவாம்.

க. மனசினாலே இதாகிதங்களை ஆராய்ந்து அறியுஞ் சக்தி மனிதனுக்குண்டு. (சிலர் மனித அம்சம் பெற்றிருந்தாலும் முன் விட்டகுறைபற்றி மிருகத்துவமாகவும் நடப்பர்).

உ. கீழான பல பிறவிகளிலே பிறந்தவுயிர் நல்வினை நணுகவே மானுடதேகத்தைப் பொருந்தும்.

ந. பெரிய தேகமுடைய பிராணிகளைக்கூட அடக்கியாளும் வல்லமை மனிதனுக்குண்டு.

௪. மனிதன் என்றழைக்கப்படும் அரிய சரீரத்தைப் பெற்றவன் அணிமாதிசித்திகள் பரகாயப்பிரவேசம் முதலியவற்றைத் தபவலிமையால் பெறுவான்.

௫. தேவர்களும் மனிததேகிகளாய்ப் பூமியில் வந்து சிவபெருமானை வழிபாடுசெய்து சிறப்புற்றிருக்கின்றார்கள்.

௬. மனிததேக அமைப்பு கடவுளுக்குரிய கைங்கரியங்களைச் செய்து ஆத்மலாபம் பெறச் சாதனமாக இருக்கிறது.

௭. தத்துவங்களின் விளக்கமாகவே ஒரு மனிததேகம் தொண்ணூற்றாறு அங்குலமுடைய பிரணவ வடிவாகக் காணப்படுகின்றது.

(மனிததேகிகளில் ஒருசாரார் கூற்று)

மனிதன் குரங்கு ஜன்மத்திலிருந்தே மாறிப்பிறந்திருக்கின்றான் என்றும், வால் நரன் என்பது வானரம் என்று வழங்கப்பெற்றது என்றும், சரீர அமைப்பு குரங்கு என்ற சாகாமிருகத்திற்கும் மனிதனுக்கும் சிறிது வேறுபாடுடன் அமைந்திருக்கின்றது என்றும் சிலர் சொல்லுவர். மனிததேகியாகப் பிறந்து நன்மை தீமைகளை விசாரியாது ஒருவரை யொருவர் புசிக்கும் மிலேச்சதேசங்களுமுண்டு. அத்தேசத்தவர்களைக் கருணையுடையவர்கள் என்று சொல்லமுடியாது! இதனால், தேசங்கடோறும் மனிதர்கள் வெவ்வேறு மனோபாவங்களுஞ் செயல்களுமுடையவர்களாகவே சிருட்டிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்று நன்கு விளங்குகின்றது. "அந்திய நாட்டவர்கள் ஜாதிவித்தியாசம் பார்ப்பதில்லை" என்று சிலர் வாய்ப்பறையறைவர். நிறவித்தியாசம் பார்க்கும் மேலைநாட்டவர்கள் நிலையை நம்மனோர் மெய்ச்சிப்புகழ்வது அதிசயமேயாம்!

வருண ஆச்சிரம தர்மங்களை ஸ்மிருதி, புராணம், இதிகாசங்கள் நன்றாக உபதேசிக்கின்றன. சிலர் "பிராம்மணர் எல்லாவற்றையும் எழுதி வைத்துவிட்டனர்" என்பர். இது ஒப்பத்தக்கதன்று! ஆறாயிரம் வருஷங்களுக்கு முன்னே வருண ஆச்சிரமதர்மங்கள் நிலையுற்றிருந்தன. வருணவேறுபாட்டை அக்காலம் தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றப்பட்ட இலக்கணநூலும் வகுத்துக் கூறுகின்றது.

### அந்தணர்க்குரிய மரபு.

நூலே கரகம் முக்கோல் மணையே
ஆயுங் காலை அந்தணர்க் குரிய

### வணிகர் மரபு

வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை.

### வேளாண்மாந்தர்க்குரிய தொழில்.

வேளாண் மாந்தர்க் குழுதூண் அல்லது
இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி.

உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்பது தொழில்களின் முறை நாடியேயாம். சங்கநூல்களிலும், சமணசமய காவியங்களிலும் வருணாச்சிரம வேறுபாடுகள் காட்டப்பட்டிருக்கின்றன. எல்லா நூல்களும் வருணாச்சிரமதர்மங்கள் பொதுளிவிளங்குமேயானால் நாம் மிக்க இலகுவாக "எல்லாம் ஒன்றுதான்; மனிதர்யாவரும் ஒரேமாதிரிதான்" என்று சொல்லிவிடலாமா? சற்று ஆலோசிக்க வேண்டும்.

### காலவலிமை.

காலம் பல்வேறுவகையாக மாறுமியல்பிற்று. பண்டைக்காலத்து ஆசாரம் ஒருவிதம் மத்தியகாலத்து நடை ஒருவிதம். இக்காலம் கலியின் முதிர்வுபற்றிய ஒழுக்கம் ஒருவிதம். கலிகாலவலிமை வருணாச்சிரமங்களையும் ஏனைய சிலவற்றையும் இவ்வாறு செயும் என்று மகான்கள் அருளிசெய்திருக்கின்றனர். ஒரு புராணச் செய்யுளையும்பார்க்க. இச்செய்யுளின்படி நடக்கவேண்டுமென்பது கருத்தன்று.

"இல்லைவை திகநெறி யில்லை நல்லறம்
இல்லைநால் வருணமாச் சிரம மில்லையாம்
இல்லைமா ணாக்கர்க ளில்லை யாரியர்
இல்லைநல் லொழுக்கமுங் கலியி லென்பவே"

ஆனால், மகாத்மாகாந்தியடிகள் சொல்வது சமபந்தி போஜனத்தையும், மணஞ்செய்துகொள்வதையுமன்று. மன அந்நியோந்யமான நிலையை மட்டுமேயாம். ஒற்றுமையாக இந்தியமாதாவுடைய பிள்ளைகள் இருப்பதவசியமே! உண்டு கைகுலுக்கிக் களிப்பதை ஒருவரும் குறிக்கவில்லை.

சாஸ்திரங்கள் தற்காலந் தோன்றும் புதிது புதிதான கற்பனை "நாவல்கள்" என்ற வியாபாரப் புஸ்தகங்கள்போன்றனவன்று. நாவல் படித்தாலேபோதும் என்ற எண்ணமும் பல வாலிபர்களுக்குண்டு. முறையாக நல்லறிவுதரும் நூல்களைக்கற்றால் மனிதப் பிறவியின் பயன் நிச்சயம் கைகூடும்! பேச்சு, உணவு, உடை ஆதியாவும் ஒன்றாக எப்பொழுது வரும்? ஒருகாலத்தும் இவை ஒன்றாகமாட்டா! ஆகவே, வருணமும் ஆச்சிரமங்களும் அவசியம் வேண்டியனவே! ஜீவபோதம் நீங்கிச் சிவஞானப்பேரமிழ்தருந்திய மெய்யடியார்க்கு ஒருபேதமுமில்லை. இலௌகிகநெறி கடைபோக வேண்டுமாயின், பல்வேறு வகைத்தான அநுஷ்டானங்கள் வேண்டும். தேகநிலைமை யுணர்ந்தார்க்கன்றி ஏனையோர்க்கு நன்னெறி பற்றியொழுகுதல், இயைபுடைத்தாகாவாகலின், இங்கே ஒழுக்கம் பற்றிய சில வாக்கியங்கள் வரைய முன் வந்தேம். நிற்க;

## அருமையினுமருமை.

இவ்வுலகிலுள்ள சடவஸ்துக்களை ஆராய்ந்தால் அவைகளும் பல்லாயிரம் பேதங்கள் உடையன என்று நன்கு உணரலாம். உலோகவஸ்துக்கள் சலனமடைவதுமறியலாம். இவைகளை இரசாயன சாஸ்திரிகள் இனிது விளக்கியிருக்கின்றார்கள். சேர்க்கையான வஸ்துக்கள் நூதனமாகக் காணப்படும். பஞ்சபூத பரிணாமமான நமது மனித தேகமும் பேராச்சரியமான அமைப்பேயாகும். தலை, கண், மூக்கு, செவி, கை, கால் என்ற உறுப்புக்கள் ஈசுவரனுடைய திருத்தொண்டுகளைத் தத்தமக்கேற்றவாறே செய்யவேண்டும். இல்லாவிட்டால் அவை சடத்துவமுடையனவே! இந்த அமைப்பு வேறு எந்தப்பிராணிக்குமில்லை. மனிதனே உத்கிருஷ்ட கதியுடையன். விலங்கு முதலியன கீழ்நோக்கிய செய்கையுடையன. மனிதனாக வருவது கீழான பிறவிகள் நீத்தேயாம். சிலர், மணிவாசகப்பெருமான் முதலிய உண்மைச் சிவதொண்டர்கள் செய்த திருப்பாசுரங்களைக் கூட ஒப்பவில்லையானால், நாம் அவர்கள் மந்தமதிக்கு இரங்காது யாதுசெய்யலாம்! சில பிரமாணங்கள் வருமாறு:—

"அரிது அரிது மானிடராதலரிது" (ஒளவையார்).

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்

வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்"

(திருவா).

ஆனையாய்க் கீடமாய் மானுடராய்த் தேவராய்
ஏனைப் பிறவாய்ப் பிறந்திறந் தெய்த்தேனை
ஊனையுநின் றுருக்கியென் வினையை யோட்டுகந்து
தேனையும் பாலையுங் கன்னலையு மொத்தினிய [ளும்
கோனவன்போல் வந்தென்னைத் தன்றொழும்பிற்கொண் டரு
வானவன் பூங்கழலே பாடுதுங்கா ணம்மானாய்.

(திருவா).

புன்மரம் தெளிபுழுப் புள் விலங் கெனும்
பன்மைய துயர்செயும் பவங்க டப்பியே
வன்மை கொள் நில மிசை மக்க ளாகுதல்
நன்மைகொ ளுயிர்க்கலால் அரிது நந்தியே.

அறத்துறைப் பெய்தினு மன்பி னலறம்
சிறப்புறச் செய்தலிங் கரிது செய்யினும்
புறச்சம யங்களைப் போக்கி யாகம
நெறிச்சம யங்களை யரிது நேர்தலே. (பிரபுலிங்க).

உற்றயோனிக டம்மிலுற்பவி யாமன் மானுட வுற்பவம்
பெற்றுவாழுத லரிது மற்றது பெறினுமாயைசெய் பெருமயக்(கு)
அற்றஞானிக ளாய்விளங்குத லரிதுவீடுறு மறிவுபின்
பற்றுமா றிஃ(து) இங்குனக்கிவை பண்பினோடு பலித்தவே.

(வியாசபாரதம்).

பரவை வெண்டிரை வடகடற் படுநுகத் துளையுள்
திரைசெய் தென்கட லிட்டதோர் கோன்கழி சிவணி
அரச வத்துளை யகவயிற் செறிந்தென வரிதால்
பெரிய யோனிகள் பிழைத்திவண் மானிடம் பெறலே.

(சிந்தாமணி).

### (பெரியோர் கட்டளை).

தலையே! நீவணங்காய் தலைமாலை தலைக்கணிந்து
தலையாலே பலிதேருந் தலைவனைத்
தலையே! நீ வணங்காய்.

கண்காள்! காண்மின்களோ கடல் நஞ்சுண்டகண்டன்றனை
எண்டோள் வீசிநின்றாடும் பிரான்றனைக்
கண்காள்! காண்மின்களோ.

மூக்கே! நீமுரலாய் முதுகாடுறை முக்கண்ணனை
வாக்கே நோக்கிய மங்கைமணாளனை
மூக்கே! நீமுரலாய்.

* * * *

நெஞ்சே! நீநினையாய் நிமிர் புன்சடைநின்மலனை
மஞ்சாடும் மலைமங்கை மணாளனை
நெஞ்சே! நீநினையாய். (தேவா-திருநா).

* * * *

## மனிததேகத்திற்கு எதனால் மகிமை?

சத்ததாதுக்களால் இயைந்துள்ள நடைவீடாகிய இந்த மனிததேகத்திற்கு மகிமை எப்படி உண்டாயிற்று என்றாராயின்; முதற்கூறியவற்றோடு அறிவின் விசேடமே என்க. அவ்வறிவு பகுத்துணருந் தன்மைத்து. நல்லதனன்மையும்; தீயதன்றீமையும் செவ்விதுதேர்ந்து புரியுமாற்றல் மனிதர்க்கன்றி ஏனைச் சரீரமுடைய பிராணிகளுக்கு அமையவில்லை. ஆனால், முற்கூறியாங்கு சில மனிதர்கள் பகுத்துணரும் வன்மை குன்றி மிருக சுபாவமாகவும் நடக்கலாம். உணர்வு தலைப்பட்டால் அன்னோருங் கடவுளை புண்மைநெறிபற்றிப் போற்றி வீடு பெறலாம்.

மக்கள் தாமே யாறறி வுயிரே
பிறவு முளவே அக்கிளைப் பிறப்பே. (தொல்:—)

## மனிதப்பிறப்பு வாய்த்தது எற்றுக்கு?


இந்தச் சரீரம் நமக்கு வாய்த்தது கடவுளை நின்றும், இருந்தும், கிடந்தும், நடந்தும் என்றும் எப்பொழுதும் மனம், வாக்கு, காயங்களினாலே வழிபாடு செய்து முத்தியின்பம் பெறும்பொருட்டேயாம்.

மனசினாலே நற்சிந்தையால் மகேசனைத் தியானிக்கலாம். வாக்கினாலே, மங்களநாதராகிய முதல்வரைத் துதிசெய்யலாம். காயத்தினாலே இறைவரைப் பூசித்தும், அவரது சாந்நித்திய ஸ்தானமாகிய கோயிலை வலம் வந்தும் வழிபடலாம்.

## மனிதர் மகாதேவரை எப்படி வழிபடலாம்.

ஆனந்தமான நின்னை யன்றியொன்றை யுன்னாத
மோனந் தமியேற்கு முத்தி பராபரமே. (தாயுமானவர்.)

சிவலிங்கம்.



ஆசை யறுமின்கள் ஆசை யறுமின்கள்
ஈசனோ டாயினும் ஆசை யறுமின்கள்
ஆசை படப்பட ஆய்வருந் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்த மாமே. (திருமூலர்.)

ஆகையாற் பயனென் அரன் கோயில் வலம்வந்து
பூக்கையாலட்டிப் போற்றி செய்யாத இவ்
வாக்கையாற் பயனென்?

மனித தேக மகிமையைச் சிந்தியாத சிதடர்கள் மங்கையரைச் சதாதியானஞ்செய்ய மனமும்; அன்னவரைப் புகழ வாயும்; அவரைப் பரிசித்து இன்புறக் காயமும் வந்தன என்று எண்ணி வாணாளை வீணாக்குகின்றார்கள். ஐயையோ! இவர்கள் "விளக் கைக்கையிற்கொண்டு கிணற்றுள் வீழ்ந்தவன்" போன்ற பேதைமையுடையா ரன்றோ!

மானுடப் பிறவிதானும் வகுத்தது மனம்வாக்காயத்(து)
ஆனிடத் தைந்து மாடும் அரன்பணிக் காக வன்றோ!
வானிடத்தவரும் மண்மேல் வந்தரன் றனை யர்ச்சிப்பர்
ஊனெடுத் துழலு மூமர் ஒன்றையு முணராரந்தோ!.
(ஊன் = தசைபொருந்திய தேகம்.)

மகாதேவர் அநேக திருவுருவங்களையுடையராதலின், மனித தேக மகிமையுள்ளவாறே யுணர்ந்தவர்கள் தத்தமக்கு இஷ்டமுடைய ஒரு திருவுருவை மனசிலே நிதானித்து அன்புடன் வழிபடல்வேண்டும். சற்குரு தீக்ஷையால் ஞானநெறி கைகூடுமானால் வேறுபெறவேண்டிய பொருள் யாதுமின்று. அன்புக்குஞ் சிவத்திற்கும் வேறுபாடன்மையின், அன்புக்கு அரன் வசப்படுவார் வன்புக்கு அவர் ஒருகாலும் அருள் புரிவாரல்லர். கர்மகாண்டத்துக் கூறியன செய்தும், உபாசனாகாண்டத்து உரைத்தவை ஆற்றியும், ஞானம் பெறவேண்டும். ஞானம் இன்றி முத்தியடைதல் கூடாது, ஞானமுங் கர்மநெறியை முறைபிறழாது அநுட்டித்தார்க்கல்லது பிறர்க்குக் கிட்டாது. ஞானம் உண்டாயவிடத்து இன்புந்துன்பும் இடர்தரமாட்டா.

"அன்பினில் விளைந்த ஆரமுதே" என்பது திருவாசகம்.

அன்புஞ் சிவமு மிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருந் தாரே.

என்பே விறகா யிறைச்சி யறுத்திட்டுப்
பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினும்
அன்போ டுருகி யகங்குழை வார்க்கன்றி
என்போன் மணியினை யெய்தவொண் ணாதே (திருமந்.)

இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. (திருக்குறள்.)

இன்பி லினிதென்ற லின்புண்டே லின்றுண்டாம்
அன்பு நிலையே யது.

பேயொன்றுந் தன்மை பிறக்கு மளவுமே
நீயொன்றுஞ் செய்யாமை னில். (திருவருட்.)

மனிதர் சிவபெருமானை வழிபட
ஒரு ஏணி.

மனிதர்கள் சிவபெருமானை வழிபட்டால் பிறவிவேர் அற்று வீடுறலாம். வழிபாடு அன்பின்னிலையதாகவே அமையும். அன்பு ஒரு ஏணி. அதில் அமைந்திருக்கும் படிகள், சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்குமாம். தாசமார்க்கம், புத்திர மார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்று வடநூலார் பெயர் கூறுவர். படிமீது தவறாது ஏறிச் சென்றால் மேல்வீடடையலாம். சைவசமயநெறி யொழுகும் மனிதர் நாற்பாதவழிபாடுடைய ராகவேண்டும்.

சரியையாவது:—சிவாலயத்திற்கும் சிவனடியார்க்குந் தொண்டுசெய்தன் முதலாயின. இன்னும், ஸ்ரீகண்டபரமேசுவரரது, கல்யாண குணங்களை ஸ்துதித்தல், திருநந்தனவனம் வைத்துப் பாதுகாத்தல், திருவிளக்கிடல், தீபதூபப்பணிசெய்தல் முதலியனவும் சரியைத்திருத்தொண்டாகும். தாசமார்க்கம் என்பதும் இதன்பெயர்.

சார்ந்தமெஞ் ஞானத்தோர் தானவ ராயினோர்
சேர்ந்தவெண் யோகத்தார் சித்தர் சமாதியோர்
ஆய்ந்த கிரியையோ ரர்ச்சனை தப்பாதோர்
நேர்ந்த சரியையோர் நீணிலத் தோரே.

புத்தர் சரியை புரிவோர் கிரியையோர்
அத்தகு தொண்ட ரருள்வேடத் தாருமோர்
சுத்த வியமாதி சாதகர் தூயோகர்
சித்தர் சிவஞானஞ் சென்றெய்து வோர்களே.

நாடு நகரமு நற்றிருக் கோயிலுந்
தேடித் திரிந்து சிவபெரு மானென்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே.

எளியன தீபம் இடமலர் கொய்தல்
அளிதின் மெழுக லதுதூர்த்தல் வாழ்த்தல்
பளிமணி பற்றல்பன் மஞ்சன மாதி
தளிதொழில் செய்வது தான்றாச மார்க்கமே.

கிரியையாவது:—சுகந்தபுஷ்பம், தூபதீபம், அபிஷேகம், நைவேத்தியம் முதலியவற்றைக்கொண்டு, பூதசுத்தி அந்தரியாகஞ் செய்தபின், வித்தியாதேகமாகிய மூர்த்தியைக் கற்பித்து சிவத்தைப் பிரார்த்தனமுறையில் அங்கே ஆவாகனஞ்செய்து அன்பினின்றும் மாறாத மனமோடும் பூசித்தல். அக்கினிகாரியமும் அவசியம் செய்யவேண்டும். இதுவே புத்திரமார்க்கமென்றும் பேர் பெறும்.

பத்துத்திசையும் பரமொரு தெய்வமுண்
டெத்திக் கிளரில்லை யென்ப தினமலர்க்
கொத்துக் திருவடி நீழல் சரணெனத்
தத்தும் வினைக்கடல் சாராது காணுமே. (திருமு-கசருக).

இதுபணிந் தெண்டிசை மண்டல மெல்லாம்
அதுபணி செய்கின் றவளொரு கூறன்
இதுபணி மானுடர் செய்பணி யீசன்
புதுபணி செய்வது பத்திமை காணே. (திருமந்-கசருச).

பூசித்தல் வாசித்தல் போற்றல் ஜபித்திடல்
ஆசற்ற நற்றவம் வாய்மை யழுக் கின்மை
நேசித்திட் டன்னமு நீசுத்தி செய்தன்மற்(று)
ஆசற்ற சற்புத்தி ரம்மார்க்க மாகுமே. (திருமந்-௧௪௯௮).

யோகமாவது:—மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய பஞ்சேந்திரியங் களையும் அடக்கி, இரேசக பூரக வாயுக்களைத் தடுத்துக் கும்பித்து, அசைவற்றிருந்து, சுழுமுனைநாடியில் பிராணவாயுவை நிறுத்தி அகத்தே தியானஞ் செய்திருக்கை. இங்ஙனம் தியானிக்கும் போது, மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்னும் ஆறு ஆதாரங்களையும், அவ்வத்தான அதிதேவதைகளையும், பத்மதளம் முதலியவைகளையும், அக்ஷரங்களையும், வழுவாது தெரிந்த முறையால் தியானஞ்செய்து, மூலாதாரத்தில் அக்கினியை வளரும்படி செய்தும், நாபித்தானத்திலே குண்டலிசத்திவடிவமான அமிர்தத்தை உருகச் செய்தும், மற்றை ஆதாரங்களில் அதோமுகமாகவுள்ள பதுமங்களை மேலெழச்செய்தும், அப்பாற் சென்று, விந்துஸ்தானத்தின் வழியே இறங்கி, பெருகுகின்ற அமிர்தத்துளிகளை உடம்பு முழுதும் நிறையச்செய்தும், ஜோதிஸ்வரூபமான சிவத்தியானத்திலே அழுந்தியிருத்தல் முதலியன அமையவேண்டும். இது சகமார்க்கமெனவும்படும்.

பூவினிற் கந்தம் பொருந்திய வாறுபோற்
சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தது
ஓவியம் போல உணர்ந்தறி வாளர்க்கு
நாவி யணைந்த நடுதறி யாமே. (திரும-௧௪௫௯).

பேணிற் பிறவா வுலகருள் செய்திடும்
காணிற் றனது கலவியு ளேநிற்கும்
நாணில் நரக நெறிக்கே வழிசெய்யும்
ஊனிற் சுடுமங்கி உத்தமன் றானே. (திரும-௧௪௯௩).

ஆதார சோதனை யானாடி சுத்திகள்
மேதாதி யீரெண் கலந்தது விண்ணொளி
போதா லயத்துட் புலன்கர ணம்புந்தி
சாதா ரணங்கெட லாஞ்சக மார்க்கமே. (திருமந்-௧௪௯௨).

திருச்சிற்றம்பலம்.

உடம்பெனு மனையகத்து உள்ளமே தகழியாக
மடம்படு முணர்நெய்யட்டி யுயிரெனுந் திரிமயக்கி
யிடம்படு ஞானத்தீயா லெரிகொள விருந்து நோக்கில்
கடம்பமர் காளைதாதை கழலடி காணலாமே.

மெய்ம்மையா முழவுசெய்து விருப்பெனும் வித்தைவித்திப்
பொய்ம்மையாங் களையைவாங்கிப் பொறையெனு நீரைப்பாய்ச்சித்
தம்மையு நோக்கிக்கண்டு தகவெனும் வேலியிட்டுச்
செம்மையுள் நிற்பீராகில் சிவகதி விளையுமன்றே.

திருச்சிற்றம்பலம்.

ஞானநெறியாவது:—சமஸ்த சாஸ்திரங்களையும் ஆராய்ந்துணர்ந்து, பசு பாச ஞானங்களை நீக்கிச் சிவத்துடன் சேரத்தக்க உண்மைச் சிவஞானத்தைப் பெற்றிருப்பதாம். இது சன்மார்க்கம் எனப் பெயர் பெறும். ஞானசாத்திரங்களைக் கற்றும், கேட்டும், சிந்தித்தும் தெளிய நிட்டைகூடும்.

ஞானத்தின் மிக்க வறநெறி நாட்டில்லை
ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று
ஞானத்தின் மிக்கவை நன்முத்தி நல்காவாம்
ஞானத்தின் மிக்கார் நரரின்மிக் காரே. (கசசூ௭)

ஞானம் விளைந்தெழு கின்ற சிந்தையுள்
ஏனம் விளைந்தெதி ரேகாண் வழிதோறும்
கூனன் மதிமண்ட லத்தெதிர் நீருண்டு
ஊன மறுத்துநின் றொண்சுட ராகுமே. (கசஎஉ)

தானவ னாகித் தானைந்தா மலஞ்செற்று
மோனம தாமொழி யான்முத்த ராவது
ஈனமில் ஞானனு பூதியில் இன்பமும்
தானவ னாயுற லானசன் மார்க்கமே. (கசஅக).

திருச்சிற்றம்பலம்.

ஞானத் தாற்றொழு வார்சில ஞானிகள்
ஞானத் தாற்றொழு வேனுனை நானலேன்
ஞானத் தாற்றொழு வார்க டொழக்கண்டு
ஞானத் தாயுனை நானுந் தொழுவனே. (தேவா).

திருச்சிற்றம்பலம்.

இந்த நான்குமார்க்கங்களும் படிமுறையானே அநுஷ்டிக்கற்பாலன. முதலில் ஞானம் வந்துவிட்டது என்று வாயினால் மட்டும் ஜாலப்பண்ணுவது கூடாது! சிலர், காவியுடுத்தும் நீறுபூசியும் வஞ்சிக்கின்றார்கள். இவர்கள் தப்பாது நரகத்தையடைவார்கள்.

விரும்புஞ் சரியைமுதல் மெய்ஞ்ஞான நான்கும்
அரும்பு-மலர்-காய்-கனி போலன்றோ பராபரமே.

நாலேணி விண்ணோற நாற்கும் பருத்திவைப்பார்
போலே கருவிநன்றாற் போதம் பராபரமே.

திருச்சிற்றம்பலம்.

பேணியநற் பிறைதவழ் செஞ்சடையி னானைப்
பித்தரா மடியார்க்கு முத்தி காட்டும்
ஏணியை இடர்க்கடலுட் சுழிக்கப் பட்டிங்கு
இளைக்கின் றேற்கு அக்கரைக்கே யேறவாங்குந்
தோணியைத் தொண்டனேன் றூயசோதிச்
சுலாவெண் குழையானைச் சுடர் பொற்காசின்
ஆணியை யாவடுதண் டுறையுண் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந்தேனே.

திருச்சிற்றம்பலம்.

இப்பாசுரத்தில் இறைவனை "முத்திகாட்டும் ஏணி" என்பதும் நோக்குக.

ஆணவமலவுபாதி சரியைத் தொண்டினால் காற்பங்கும், கிரியை வழிபாட்டினால் அரைவாசியும், யோக நிலையால் முக்காற்பாகமும், நீங்கும். ஞானநெறி நிறைவுறப் பெறின் அஞ்ஞானம் முழுதும் அகன்றுவிடும.

"சரியையி லாணவங் கால் சரிந்திடும்
கிரியையி லரைமலங் கெடுதி யுற்றிடும்
மருவுயோ கத்தில முக்கான் மடிந்திடும்
விரிசிவ ஞானத்தின் முற்றும் வீயுமே."

## மனிதர்கள் மடமை.

மனிதர்கள், தேகபெலமும், அழகும், பொருளும், ஆளடிமை முதலியனவும் குறைவறப் பெற்றிருந்தால், கடவுளைக் கருதவும் மாட்டார்கள். இவர்கள் மடமை இருந்தவாறென்னை? மகான்கள்

மகாதேவராகிய இறைவரை வழிபடவேண்டும் என்று கட்டளை யிட்டார்கள். அவர்களும் யோகசமாதி நிலைபூண்ட பெரியோர் களே! "செல்வம் வந்துற்றகாலைத் தெய்வமுஞ் சிறிது பேணாத" குணமுடைய மனிதர்கள் அந்தியகாலத்து என்செய்வார்கள்? அந்தோ! பாவம்! பாவம்!! என்று எத்தனையோபேர் இரங்குகின் றார்கள்! நாம் இவைகளைச் சற்று நிதானித்துப் பார்க்கவேண்டும். அனுபவத்திலே பெண்டாட்டி, பிள்ளைகள் செய்யக்கூடிய சகா யங்களை கவனித்து, ஒருவர் மனசில் உறுதியான வைராக்கியம் உதிக்குமானால், அவர் மடமை நீங்கிப் பெருஞானவொளி வீசும் பரிசுத்த நிலையை யடைவர்.

மனிதர் மனம் மாறும் நெறி.

மனம்

| மயக்கம் | வெகுளி | காமம் |
|---|---|---|
| மாற | மாற | மாற |
| அறிவு உண்டாகும் | அடக்கம் உண்டாகும் | அன்பு (சிவம்) ஆகிவிடும் |

முக்குற்றங்களையுங் களைய ஆன்மா சிவமாகும்.

காமம் வெகுளி மயக்க மிவைகடிந்(து)
ஏமம் பிடித்திருந் தேனுக் கெரிமணி
ஓமெனு மோசையி னுள்ளே யுறைவதோர்
தாம மதனைத் தலைப்பட்ட வாறே. (திருமூலர்.)

அறிவு மடக்கமு மன்பு முடனே
பிறியா நகர்மன்னும் பேரரு ளாளன்
குறியுங் குணமுங் குரைகழ னீங்கா
நெறியறி வார்க்கிது நீர்த்தோணி யாமே. (திருமூலர்.)

நீர்த்தொணி = சந்திரமண்டலத் தமிர்த பானஞ்செய்தார் கண்டுவக்கும் பிரணவநாதம். பரமுத்திகூட மேலோர் கொண்ட யோகசாதனத்தில் வளரும் உண்மை குறித்தவாறறிக.

வாளா பொழுது கழிக்கின்றார் மானுடவர்
கேளார் கொலந்தோ! கிறிபட்டார்—கீளாடை
அண்ணாற கணுக்கராய்க் காளத்தி யுண்ணின்ற
கண்ணப்ப ராவார் கதை. (நக்கீரர்)

பெரியார் இப்படியே திருத்தொண்டர்களைப் போற்றுகின்றார்கள். சில அவைதிகப் பிராமணர்கள்கூட அடியாரையும், தேவார திருவாசகங்களையும் நிந்திக்கின்றார்கள். இவர்களை ஆசுர ஆன்மத்துவமுடைய நடைப்பிண வேடர் என்று மட்டுமே சொல்லலாம். சங்கராசாரிய சுவாமிகளைக் குருவென்று கொள்ளும் இப்பிராமணர்கள், சுவாமிகள் சிவானந்தலகரியில் "மார்க்காவர்த்தித பாதுகா பசுபதே ரங்கஸ்ய கூர்ச்சாயதே" என்று தொடங்கிக் கண்ணப்பதேவரை ஸ்துதி செய்தமையை ஏன் பார்த்து அடங்கக்கூடாது? அகங்காரப் பாழ்ங்கிணற்றுட்டிளைப்புறவே கண்ணும் மனமுற்றது போலும்! நிந்தையையும் பலர் பெறாது காலம் போக்குகின்றார்கள். நிந்தையே மோக்ஷந்தரும் என்பது வேதபாஷியமாக விளங்குகின்ற ஆகமங்களின் துணிபு

## மனிதர் வழிபாடு மகிமையுற வழி

தேவர்கள் தத்தம் பயன்கருதியே வழிபாடு செய்வார். மனிதர்களும் ஒன்றையாவது குறியாது வழிபாடு செய்வதில்லை. நிஷ்காமியவழிபாடு சிறந்தது. அதனையே மணிவாசகப்பெருமான் ஒரு திருப்பாசுரத்தால் விளக்கியருளினார். தலையன்பைத்தான் நாம் அடையவேண்டும்.

வாழ்த்துவதும் வானவர்கடாம் வாழ்வான் மனநின்பால்
தாழ்த்துவதுந் தாமுயர்ந்து தம்மையெல்லாந் தொழவேண்டிச்
சூழ்த்தமது கரமுரலுந் தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானுமுன்னைப் பரவுவனே.

தலையன்புதான் நிலைபேறான பேரானந்தந்தரும். இதனைச் சேக்கிழார்சுவாமிகள், "கேடு மாக்கமுங் கெட்ட திருவினார்; ஓடுஞ்

செம்பொனு மொக்கவே நோக்குவார், கூடு மன்பினிற் கும்பிடலே யன்றி, வீடும் வேண்டா விறலின் விளங்கினார்" என்று கூறித்தமை யுங் காண்க. அன்பை வளர்த்து அறிவினிறைந்த பரம்பொருளை இவ்வாறு சென்றடைதலே செம்மையுடைத்தாம். நாம் நினைத்த காரியங்களுக்கெல்லாம் கடவுளை வேண்டித் தொழுவது மகிமை யன்று. தேகம் நீத்துச் செம்பொருள் சேரவே உத்தம சரீரம் கிடைத்தது.

## மனிதர்கள் தலையன்புநெறிகூட வுபாயம்.

சிவதீக்ஷை பெற்றுச் சந்தியாவந்தனஞ்செய்தல், * விபூதி ருத்திராக்ஷதாரணம், சிவாலயத்தையும் சிவனடியாரையும் சிவபெருமானாகப் பாவித்து வழிபடுதல், அநாசாரங்களை நீக்கியொழுகல் முதலியன அன்புவிருத்திக்கு வழிகளாம். இன்னும் கொல்லாமை, வாய்மை, களவெடாமை, பிறர்மனைவியரைச் சேராமை, பொதுமகளிராகிய தாசிகளைச் சேராமை, ஆண்டகைமை, வஞ்சனை இல்லாமை, இரக்கமுடைமை, பொறையுடைமை, மனத்திடமுடைமை, அற்ப ஆகாரமுடைமை, சுசியுடைமை, முதலிய இயமங்களையும்; தவம், மனநிறைவு, கடவுள் ஒருவர் இருக்கின்றார் என்னும் விசுவாசம், பாவநெறி கூடாமற் சம்பாதித்த திரவியத்தைச் சற்பாத்திரமாயுள்ள சிவதொண்டர்களுக்குக் கொடுத்துதவுதல், பிதா மாதா குரு உபாத்தியாயர் தன்னின் மூத்தவனைப் பெரியோர் ஆகியயாவரையும வழிபடுதல், உயிருக்கு உறுதியயக்கும் உண்மைநூல்களைக் கேட்டல், குலம் செல்வம் அதிகாரம் என்னும் இவைகளினாலே கெறுவம் இன்றி அடங்கி நடத்தல், தக்கனவும் தகாதனவும் பகுத்துணர்ந்து தகாதனவற்றை விடுதல், ஜபம், விரதம் முதலிய நியமங்களையும்; மனிதசரீரம் மறைய முன்னே கைக்கொண்டு ஒழுகுவோமேயானால், தலையன்பு உண்டாகும். அதனாலே ஆன்ம ஈடேற்றமடையலாம். சிலர், உயிர்க்கொலை, நம்பிக்கைமோசம், சிவநிந்தை, சிவசாஸ்திரநிந்தை, கோயிற் பொருள் கொள்ளையடித்தல், முதலியவற்றை அஞ்சாது செய்து கெடுகின்றார்கள். "அரசன் அன்று ஒறுப்பான்; தெய்வம் நின்று அறுக்கும்" என்பதை இம்மூடர்கள் சிந்திக்கக்கடவர்கள்.

---

* விபூதி ருத்திராக்ஷப்பெருமை பின் காட்டுவோம். விபூதி - "புழுதி" என்னும் சொல்லு விகாரப்பட்டதென்பர் சிலர். இது பொருந்ாது. வி - மேன்மை; பூதி - ஐஸ்வரியம். வடமொழிப்பதம். நீறு தமிழ்ச்சொல்லு.

"தாயைக் கொல்லி மொட்டையனுக்கும் ஊரிலே பேர்பாதி" என்றபடி மதிப்புமாத்திரையாலே வாழ விரும்புவதை மட்டும் இவர்கள் விடக்கடவர்கள்.

கொல்லான் பொய்கூறான் களவிலா னெண்குணன்
நல்லா னடக்க முடையா னடுச்செய்ய
வல்லான் பகுத்துண்பான் மாசிலான் கட்காமம்
இல்லான் இயமத் திடையினின் றானே. (திருமந்.)

தூய்மையருளூண் சுருக்கம் பொறை செம்மை
வாய்மை நிலைமை வரைதலே மற்றிவை
காமங் களவு கொலையெனக் காண்பவை
நேமியீரைந்து நியமத்த னாமே.

தவஞ்செபஞ் சந்தோட மாத்திகந் தானம்
மவன்றன் விரதமே சித்தாந்தக் கேள்வி
மகஞ்சிவ பூசையொண் மதிசொல்லீ ரைந்து
நிவம்பல செய்யின் நியமத்த னாமே.

## ஒரு பெரிய அதிசயம்.

இந்த மனிததேகமோ நவத்துவாரங்களையும் சிறிய அநேக ஆயிரந் துளைகளையுமுடையது. ஒரு உடைவுள்ள பானையிலே தண்ணீர் விட்டால் கீழே ஒழுகிவிடுமன்றோ! ஆவியானது (உயிர்) துவாரங்களோடு கூடிய சரீரத்தில் நீங்காது ஒரு காலவெல்லையளவும் நிற்கும்படி செய்த இறைவனது சக்தி எவ்வளவு மகிமையுடையது? இவ்வாறு நிற்றல் பெரிய அதிசயமல்லவா? இந்த ஆச்சரியத்திற்கு மேலான வேறு புதிய ஆச்சரியத்தைநாம் காணமுடியாது.

## நன்னெறி.

வருந்து முயிரொன்பான் வாயி லுடம்பிற்
பொருந்துத றானே புதுமை—திருந்திழாய்!
சீதநீர் பொள்ளற் சிறுகுடத்து நில்லாது
வீதலோ நிற்றல் வியப்பு!.

## தேகநிலையாமை.

இவ்வாறே பற்பல நூல்களையும், அனுபவங்களையும் காட்டி மனிததேகமகிமையை நீள எழுதலாம். ஆனால், தேகம் நீரில் குமிழி போன்று அழிவைப்பெறும். இதனைக் கருதி நல்லனவற்றைச் சரீரபெலமுள்ளபொழுதே செய்யவேண்டும். நல்லனசெய முடியாதவர் தீமையைமட்டும் விடக்கடவர்.

நீரிற்குமிழி யிளமை நிறைச்செல்வம்
நீரிற் சுருட்டு நெடுந்திரைகள்—நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்காள்! என்னே?
வழுத்தாத(து) எம்பிரான் மன்று. (நீதிநெறிவி).

இறந்தாரைக் குறித்து இருந்தார் அழுகின்றனரே! தமது நிலையை நோக்கி அழாதது என்னே! என்று மூதுணர்ந்தோர் மொழிகின்றனர்.

பாளையாந்தன்மைசெத்தும், பாலனாந்தன்மைசெத்தும்,
காளையாம்பருவஞ்செத்தும், காமுறுமிளமைசெத்தும்,
மீளுமிவ்வயதுமினமே, மேல்வருமூப்புமாகி
நாளுநாட்சாகின்றுமால், நமக்குநாமழாததென்னே?

பேதைமை யென்னும் வித்திற் பிறந்துபின் வினைகளென்னும்
வேதனைமரங்க ளுறி வேட்கைவேர் வீழ்ந்துமுற்றிக்
காதலுங் களிப்பு மென்னுங் கவடுவிட் டவலம்பூத்து
மாதுய ரிடும்பை காய்த்து மரணமே கனியுமென்றான்.
(சிந்தா).

தேகநிலையாமையைக்குறித்து ஆராயின், நேற்று இன்புடன் இறுமாப்புக் காட்டியவர், இன்று யாவருந் துன்புறச் சாவப்பெற்றார் என்ற ஒரு பெருமையே எஞ்சிநிற்கும்!

நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு. (திருக்குறள்.)

காகமோடுகழு கலகை நாய்நரிகள்
சுற்று சோறிடு துருத்தியைக்,
காலி ரண்டுநவ வாசல் பெற்றுவளர்
காமவேணடன சாலையை;

மோக வாசை முறியிட்ட பெட்டியைமு
மலமிருக்கொழுகு கேணியை
மொய்த்து வெங்கிருமி தத்து கும்பியை,
முடங்கலார்கிடை சரக்கினை,
மாகவிந்திர தனுமின்னை யொத்திலக
வேதமோதிய குலாலனார்
வனைய, வெய்யதடி காரனையமன்,
வந்தடிக்குமொரு மட்கலத்
தேக மானபொயை மெய்யெனக் கருதி
ஐய வையமிசை வாடவோ?
தெரிவதற் கரிய பிரமமே! யமல
சிற்சு கோதய விலாசமே! (தாயுமான.)

தாயாருஞ் சுற்றமும் பெண்டிருங் கைவிட்டுத் தாழ்ந்திடுநாள்
நீயாரு நானு மெனப்பகர் வாரந்த நேரத்திலே
நோயாரும் வந்துகுடிகொள்வரே! கொண்ட நோயுமொரு
பாயாகு நீயுமல் லாற்பின்னை யேது? நட் பாமுடலே!
காடோ! செடியோ! கடற்புற மோ!கன மேமிகுந்த
நாடோ! நகரோ! நகர்நடு வோ!நல மேமிகுந்த
வீடோ! புறந்திண்ணை யோ!தமி யேனுடல் வீழுமிடம்;
நீடோய் கழுக்குன்றி லீசா! வுயிர்த்துணை நின்பதமே.

தாயுமானசுவாமிகள், பட்டினத்தடிகள், ராமகிருஷ்ணபரமஹம்சர், விவேகானந்தர் முதலிய மகான்களின் சாந்தமோபதேசங்களையுஞ் சிந்திக்க நன்னெறிபுகலாம்.

## முத்தியின்பமே முதன்மையுடையது.

மானுட ஜந்மாவைப்பெற்றதன் பயன் முத்தியின் மேனி இன்பமடைதலேயாம். அம் முத்தி பரமுத்தியும் அபரமுத்தியும் என்று இருதிறப்படும். பரமுத்தியே சிறந்தது. அபுத்திபூர்வகமாகவும், புத்திபூர்வகமாகவும், செய்த நல்வினை தீவினைகளும், பதிபுண்ணிய பசுபுண்ணியங்களும் பலவாய் விரிந்து செல்லும். எவ்வினையுந் தன்வினையென்னாது இறையருளென்றுணர்ந்தவர், தூயமனமுடையார்; ஞானவொளி வீசுதலான் மிக்க அதிதீவிரதர பக்தர். அன்னவர்கள், ஈசுவரனைத் துதிக்குங்காலத்து இறைவனருளிய தன்மையையும் புகழ்வார்கள்.

திருச்சிற்றம்பலம்.

"அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே யாயசிவபத மளித்த செல்வமே
சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப்பிடித்தேன்
எங்கெழுந்தருளுவதினியே."

திருச்சிற்றம்பலம்.

[illegible]

"பரமாத்துமா ஆனந்தமுடையர்" அவர் சிவனுக்கும் ஆனந்தத்தை விளைப்பவராவர்.

"அளவிலா வானந்த மளித்தென்னை யாண்டானை" என்பது திருவாசகம்.

தொண்டர்மனம் பிரியாத திருப்படியைத் தொழுதிறைஞ்சி
மண்டுபெருங் காதலினால் நோக்கிமுக மலர்ந்தெழுவார்
அண்டமெலா நிறைந்தெழுந்த வானந்தத் துள்ளலைந்து
கண்டபே ரின்பத்தின் கரையில்லா நிலையணைந்தார்.
(பெரியபுரா.)

அநுபூதியால் அடியார் அருளிய முத்தியின்ப நலத்தை நாமும் பெற்றின்புற முயல்வோமாக. சுபமஸ்து.

## முருகனின் முத்தப்பெருமை.

கத்துந் தரங்க மெடுத்தெறியக்
கடுஞ்சூ லுளைந்து வலம்புரிகள்
கரையிற் றவழ்ந்து வாலுகத்திற்
கான்ற மணிக்கு விலையுண்டு

தத்துங் கரட விகடதட
தந்திப் பிறைக்கூன் மருப்பில்விளை
தரளந் தனக்கு விலையுண்டு
தழைத்துக் கழுத்து வளர்ந்தமணிக்

கொத்துஞ் சுமந்த பசுஞ்சாலிக்
குளிர்முத் திலுக்கு விலையுண்டு
கொண்டல் தருநித் திலந்தனக்குக்
கூறுந் தரமுண் டுன்கனிவாய்
முத்தந் தனக்கு விலையில்லை
முருகா! முத்தந் தருகவே
முத்தஞ் சொரியுங் கடலலைவாய்
முதல்வா! முத்தந் தருகவே.

## திருப்புகழ்.

வருபவர்கள் ஓலை கொண்டு நமனுடைய தூதரென்று
மடிபிடிய தாக நின்று தொடர்போது,
மயலது பொலாத வம்பன் விரகுடைய னென்று
வசைகளுடனே தொடர்ந்து அடைவார்கள்;
கருவிய தலெறிந்து சதைகள் தனை யெரிந்து
கரியபுன லேசொரிந்து விடவேதான்
கழுமுனையி லேயி ரென்று விடுமெனும வேளை கண்டு
கடுகி வர வேணு மெந்தன் முனமேதான்
பரகிரி யுலாவு செந்தி மலையினுட னேயி டும்பன்
பழனிதனி லேயி ருந்த குமரேசா!
பதிகள்பல வாயி ரங்கள் மலைகள்வெகு கோடி நின்ற
பதமடியர் காணவந்த கதிர்காமா!
அரவுபிறை பூளை தும்பை விலுவமொடு தார்வை கொன்றை
அணிவர்சடை யாளர் தந்த முருகோனே!
அரகரசி வாய சம்பு குருபர! குமார! நம்பும்
அடியர்தமை யாள வந்த பெருமாளே.

# ௬. சிவபூஜை என்றுஞ் சீரிய இன்பமே!

:o*o:

[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]

[illegible]
[illegible]

சைவத்திருநெறியில் மெய்வகையொழுகும் அன்பீர்!

இப்பூமுகத்தின்கண்ணே வாழும் பல்வகைச் சீவராசிகளினும் நல்லறிவுடையவர்கள் மாநுடர்களே! மேலே மாநுடப்பிறவியின் மகிமையுரைத்தாம். இங்கே சிவபரம்பொருளைப் பூஜை செய்ய வேண்டியது ஆவசியகம் என்பதைச் சிறிது காட்டுவாம்.

அருந்தப முதிர்ச்சியானே பெருந்தகை மாநுடப் பெட்புறுப் பேற்றுத் திருந்திய அறிவுடையேமாகிய அடியேங்களே, அப்பாச முயக்கறுத்து உயர்கதியீந்து உம்பருந்தொழ வைக்க வேண்டும் என்ற அருட்டிருவுளத்தானன்றோ! பரமகருணாநிதியாகிய பரம சிவம், சிதாகாச நிரதிசயானந்த வடிவை விடுத்து உருமேனி கொண்டு, பரவுவார் பக்தி கண்டு எதிரருள் புரிந்து காக்கின்றார்.

மந்திர சரீரியாய அப்பரம்பொருள், இங்ஙனமாய்ச் சாந்நித்திய நிலையில் விளங்குதலை நாங்கள் நன்கு சிந்தித்து முன்னுள்ள வினைகள் எங்களைவிட்டு நீங்கும்படி முற்கூறியவாறே மனத்தினாலே நினைத்தும், வாக்கினாலே துதித்தும், காயத்தினாலே சாஷ்டாங்கமாக வணங்கியும், உடல் பொருள் ஆவியாகிய மூன்றனையும் அப்பெருமானுக்கே அர்ப்பணஞ் செய்து வழிபடுதல் அவசியமல்லவா? வழிபடக் காலம் இன்னும் இருக்கிறது இதுபொழுது நாம் இளையோம் என்றால் மரணமோ நமது தலைப்புறமாகப் பிடித்திழுக்கின்றது. மரணகாலந்தான் வரும் எல்லையும் யாமறியோமே!

பன்னாட் பயின்ற பழக்கமே இறக்குநான்றும் வரும். அதனாலே முன்னர்த் தொடங்கிச் சிவவழிபாடு செய்து மனநிலையடைந்திருக்க வேண்டுமென்றோ! இதனாலே குஹசிவவிஷ்ணு தொண்டர்கள் சதா "சிவ" "குஹ" "நாராயண" என்று கூறுவார்கள். அக்ஷரபதியான இறைவன் வாசக வாச்சியப் பொருளாய்க் கிருபை செய்கின்றார். "மரிக்கும்போதுன்னும் வடிவினை யாவி—பரிக்கும் வினைவு பரித்து." "வேர் மரத்துக் காதாரம்; வேர்க்கு மரமன்று. அமலன் ஆருயிர்க்காதாரம்; உயிரன்று."

ஜாஸ்தியாகப் பணந் தேடவேண்டும், மனோபீஷ்டப்படி மற்றைய வஸ்துக்களையும் பெறுதல்வேண்டும் என்ற இன்னோரன்ன எண்ணங்களால் ஆன்மாவுக்கு யாதும் பிரயோசனமின்று! எங்களுடைய சரீரம் மின்னெனமிளிர்தல் பிரத்தியக்ஷமல்லவா? நம்மையொழிந்த ஏனைச் சங்கமப் பொருள்கள் தங்களுட் பெரிதும் வேற்றுமையுடையனவே! எங்களுக்குப்போல மற்றைப்பிராணிகளுக்குச் சரீர உறுப்பமைப்புத்தானும் வாய்ந்திருக்கவில்லையே! நாரை கரிக்குரிவியும் முத்திபுக்கனவே!

ஆதலின், ஆறாதாரத் தானங்களும், தத்துவக் கூட்டங்களும் பாதாதிகேசம்வரையும் பிறங்கிய அற்புதமான இவ்வுயர்ந்த சரீரத்தைப் பெறலருந்தன்மைத்தென்று ஓராது காலத்தை வியர்த்தமாக்கல் என்ன அறியாமை? சரீரம் சாவப்பெற்றால் எங்களது முயற்சி சபலமாகுமா? மூச்சும் பேச்சும் போய்விடுமன்றோ! ஆன்மலாபம் இம்மானுடப்பிறப்பினன்றி மறுபிறவிகளிற் சித்தியடையுமா? இச்சரீரமுள்ள பொழுதன்றோ ஆன்மசுகத்தைத் தேடிக்கொள்ளல் வேண்டும்! நோயனார் வந்து முட்டிப் பாயஞ்ரைச் சேரச்செய்தவுடன் பற்பல ஆலோசனைகள் உண்டாகின்றன. ஒருபோது வினைத்திறமொத்துச் சரீரம் நீங்கிவிடுமேயானால் ஆன்மாவின்கதி யாதாய் முடியும்? ஆன்மா அறிவில் பொருளாகவும், அறிவுள்ள தேகத்தைப் பெற்றது வினைத்திறனொழித்து வீடுபேற்றையடையும் பொருட்டன்றோ! அங்ஙனம், வீடுபேறடைதற்காய வழிபாடு கிஞ்சித்துமின்றி உலக வடனைகளை நாடி மயங்கித் தருக்குறின் ஆன்மாசுகமுறாது அரிய அன்பர்காள்! சிந்தியுங்கள்!! சிந்தியுங்கள்!!!

குடம்பை தனித்தொழியப் புட்பறந்தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு. (குறள். ௩௪-அதி-௮)

மேலோர் திருவாக்குக்கள் பொதுளிய நூல்களைக் கற்றோ அன்றிக் கற்றார்வாய்க் கேட்டோ இக்கினமை காங்கினினும் முன்

னதாக வைத்து, யாவரும், எப்பொழுதும், எங்கும், செந்நெறியில் மனசைச் செலுத்துதல் முக்கிய கடமையேயாம். ஞானம், யோகம் என்று கண்மூடி ஜாலம் புரியவேண்டாம். சரியை கிரியை என்ற முதற்படிகளில் நின்றே, அவற்றிற்கியைந்த திருத்தொண்டுகளையும், இறைவத்தியானத்தையும், எத்தினமும், பக்திமீக்கூர இடையறாது பற்றி ஒழுகுவோமானால், இறைவனது நிறையருட்டிளைப்பு எங்களுக்கு நிச்சயமாகக்கிடைக்கும். இஃது சத்தியம்! சத்தியம்!! முக்காலுஞ்சத்தியம்!!!

இவ்வண்ணமாக எங்களை உடைமைப்பொருளும் அடிமைப்பொருளுமாக ஆண்டருள் செய்வான் வேண்டிய அரனை வழிபட்டால், நாங்கள் சிவத்துவ நிலையைத்தப்பாது அடைதற்கு அருகராவோம். புறத்தே பூஜை செய்வது அரன்றிருவருளடைய ஏதுவாகும். முன்னர் அகப்பூசை (அந்தரியாகம்) செய்து புறப்பூஜை தொடங்கல் வேண்டும்.

> "உள்ளேவல் செய்வாளைக் காந்தன் மிகவுவப்பன்
> உள்ளேசெய் பூசை யுவந்து." என்பதுங்காண்க.

இன்னும், தமிழ்வேதத்தாரும்,

> "காயமே கோயிலாகக் கடிமன மடிமையாக
> வாய்மையே தூய்மையாக மனமணி லிங்கமாக
> நேயமே நெய்யும் பாலா நிறையநீ ரமையவாட்டிப்
> பூசனை யீசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே."

என்று அருளிச்செய்தனர்.

அகப்பூஜைசெய்து வருநான்றே அஞ்ஞானமும் அருகிவிடும். ஞானம் வளரும் ஞானக்கண்ணால் இறைவனது ஞானத்திருமேனியைத் தரிசித்துச் சுகம் பெறலாம். பாசக்கண்ணாற் பகவானைக் காண்பது அருமையேயாம்.

> "ஊனக்கண் பாசமுணரா துயிர்க்குயிரை
> ஞானக்கண் ணாலுள் நாடு." என்பதறிக.

இனிப் புறப்பூஜையாவது:—பூதசுத்தி, ஆன்மசுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி, இலிங்கசுத்தி என்னும் ஐந்து வகையான சமஸ்காரங்களோடும், தத்தஞ்சத்திக்கேற்றவாறு சங்கற்பித்து,

நீர், பூ, சந்தனம், அக்ஷதை மணி, தூபம், தீபம், கர்ப்பூராராத்திரிகம் என்றத் தொடக்கத்த திரவியங்களைக் கொண்டு, ஆதார சக்தி பூஜை முதலாக அந்தக்கரண சுத்தியோடு சிவபரம்பொருளை உருவத்தில் ஆவாகனஞ் செய்து,

"சிவோதாதா சிவோ போக்தா சிவஸ்ஸர்வமிதம் ஜகது"

என்பதை மறவாதபடி, "யாவத்பூஜாவதானகம் தாவத்தம் பிரீதி பாவேன லிங்கேஸ்மின் சந்நிதிங்குரு" என்று பிரார்த்தித்துச் செய்யப்படுவதாம். புறக்கரணவழிபாடு அகந்தூய்மையாதற்கு வேண்டப்படுவதொன்று என்பது ஞானநெறிபுக்கார்க்கும் கருத்தாம். உபசாரங்கள் பதினாறுவகைப்படும். அவை ஆப்பியோபசாரம், வாய்வியோபசாரம், பார்த்திவோபசாரம் முதலிய பலதிறமுடையன.

"யாவர்க்குமாமிறைவர்க்கொருபச்சிலை" என்றும், பத்ரம் புஷ்பம் பலந் தோயம், என்றும் வருவன தெளிக.

சிலர், புஷ்பங்கொண்டு பூசை செய்வது புறவேடம் என்பர். இவர்கள்,

பூசையிலாதானுண்டி புழுப் பிணம் புலையன் கட்டம்
மாசுளபாவ மொக்கும் வானினிற் றீயில் வீழ்ந்து
நாசமாவதுவே நன்று நற்குலம் பிறந்தானேனுந்
தேசுளா ரவனைத் தீண்டிற் றெரிசிக்கி னினைக்கிற் பாவம்.

"ஆக்கையினு ளான்மாவிங் குறைவளவும்
பூசையினையாற்றியல்லால்—ஏக்கறவலருந்த
வொண்ணாது" * * * *

அலரினைச் சூட்டாதமலன் தாளில்; அருந்தன்னம்
மலமாம் பிணமுமாம் மாசு. (சைவசமயநெறி-உருக).

பொன்னை நினைந்து வெகுவாகத் தேடுவர் பூவையன்னாள்
தன்னை நினைந்து வெகுவாயுருகுவர் தாரணியில்
உன்னை நினைந்து இங்குனைப் பூசியாத வுலுத்தரெல்லாம்
என்னை? யிருந்து கண்டாய்இறைவா கச்சியேகம்பனே!
(பட்டினத்தடிகள்).

பஞ்சசுத்தி செய்துநின்னைப் பாவித்துப் பூசைசெய்தால்
விஞ்சிய ஞானம் விளங்கும் பராபரமே. (தாயுமானவர்.)

பெறு மானிடப் பிறப்பு வாய்த்துநல்
லெடவிழ் மலரினு லிறையைப் பூசியார்
பாடமை நாளெலாம் பாழ்க் கிறைப்பவர்
மூடரை யெண்ணுங்கால் முந்தி நிற்பரே.
(பிரபுலிங்கலீலை).

பதும வாழ்க்கையான் படைக்கு மாற்றலும்
மதுவை வீட்டினு னளிப்பும் வான்மிசை
யதுல ஞதியோ ராசை யாட்சியும்
பொதுந டிப்பவன் பூசைப் பேறரோ. (காஞ்சிபுரா.)

இந்த வழிபாடுகளைத், தேவர்கள் மற்றைமூவர்கள் இருஷிகள், கணுதிபர்கள், பிற்றைக்கால மூவரசர்கள் மனிதர்கள் யாவருஞ் செய்து இன்பமடைந்திருக்கின்றார்கள். பிராம்மண ஜந்மமெடுத்தும் மூடமதியால் பிராம்மணர் பலர் பூசை செய்வதுமில்லை. விபூதி ருத்திராக்ஷந்தரிப்பதுமில்லை. ஆனால், 'வைதிகம்' என்கிறார்கள். கருதது யாதென்று புலப்படவில்லை. வேதம் ஆகமம் முதலியவற்றை ஆராய்வார் சிவதீக்ஷை சிவபூசைஇவைகளை இயன்றவரையில் அநுஷ்டிக்க வேண்டும். வேதத்தை சப்தார்த்தமாக மட்டும் ஓதக்கூடாது. பதார்த்த முறையுங் கவனிக்க வேண்டும். தற்கால வைதிகர்களாகிய வேதியர் பலர் சுசீலத்தை விற்றுப் பணத்தில் மட்டுமே கண்ணுங் கருத்துமாக நெட்டுருப்பண்ணிச் சொல்லி விடுகின்றார்கள். வேதங்கற்ற வேதியரிடமிருக்கவேண்டிய ஞானம், கருணை ஆதியன அனுவளவுமில்லாதவிடத்துக் குலம் என்ன செய்யும்?

ஸாங்கஶைவம் ஜந்ம க்ஷத்ரம் நதேயம் நவ்ருகாஸயேத்।
தீக்ஷிதஸ்ய க்ஷமீஸஸ்ய ஶிவஹஸ்தே வஶஸ்யச।
ஶ்ராவணீயம் நவாந்யேத்ர க்ஷயநம் ஹி வ்ரஸ்யதே॥

வயஸா வேதஶிவாஸமயோஜேந்தம் நவஸ்ராஜ:। வேதோ
விஶிவாஸஜ:॥

வேதமொ டாகம மெய்யா மிறைவனூல்
ஓதும் பொதுவுஞ் சிறப்புமென் றுன்னுக
நாத னுரையிவை நாடி லிரண்டந்தம்
பேதம தென்னிற் பெரியோர்க் கபேதமே. (திருமந்).

சிவவழிபாட்டால் மேன்மையடைந்தவர்களை வகுத்துக்காட்ட முடியாது. சைவசமயமே மெய்ச்சமயமென்று நினைந்து சிவபெருமானாகிய முழுமுதற்கடவுளை அகம் புறம் பரிசுத்தமாகத் தியானஞ்செய்தார் சிலருடைய நாமங்கள் வருமாறு:—

ததாகஸ்தியாதி முநயோர்த் துர்வாசா நந்திகேஶ்வர:।
மஹாகாளோ ததீசிச்ச பாணிநிச்ச கணாதய:।
ஆபோஹரிஸ் ஸஹஸ்ராக்ஷோ பாணசுரதசா நநௌ
வசிட்டருரு வால்மீகி பரத்வாஜாச்ச கௌதம:।
ஏதை: பரமசைவாச்ச பஜந்தி பரயாமுதா॥ என்பதும்,

"விண்ணவ ரிந்திரன் முதலோர் நாரதாதி
விளங்கு சப்தரிஷிகள் கனவீணை வல்லோர்
எண்ணரிய சித்தர் மனுவாதி வேந்தர்
இருக்காதி மறைமுனிவ ரெல்லா மிந்தக்
கண்ணகன் ஞாலம் மதிக்கத் தானே யுள்ளங்
கையினெல்லிக் கனிபோலக் காக்ஷியாகத்
திண்ணியநல் லறிவாலிச் சமயத் தன்றோ
செப்பரிய சித்தி முத்தி சேர்ந்தா ரென்றும்."

என்பதும் முறையே எடுத்துக் காட்டுக்களாம்.

இன்னும், உபமந்நியு மகாமுனிவர் கிருஷ்ணனுக்குத் திருவடி தீக்ஷைசெய்த ஸமயத்தில், "துவரைக்கு இறையே! யான் கூறுவதைச் செவி மடுக்குதி!" என்று உத்தமஉபதேசம் புரிந்தருளினர். கிருஷ்ணன் முன்பு தீக்ஷையின்றிப் பூசைசெய்தும் பலமின்றாய்ப், பின் தீக்ஷைபெற்றுப் பரம்பொருளைப் பூஜித்து வந்ததாகத் தெரியவருகிறது. உபமந்நியு மகாமுனிவர் கிருஷ்ணனைப்பார்த்து அருளிச்செய்ததாவது:—"மாதவ! தேவாதிதேவருடைய வடிவமே இச்சராசரமாகும். இவ்வுண்மையைப் பாசமிகுதியினாலே ஆன்மாக்கள் அறிகின்றில; விஸ்வகாரணராகிய சிவபெருமானை நீ பூஜிப்

பாயாக. அப்பூஜையானது விருக்ஷத்தின் அடியிலே வார்த்த நீரினாலே அம்மரம் முழுதும் (சாகைகள் யாவும்) தளிர்த்துப் புஷ்பித்துச் செழிப்படைந்து நிற்குமாறுபோல, அப்பெருமானுக்குச் செய்யப்படும் பூஜாவிசேஷத்தாலே, அவரது திருமேனியாகவுள்ள உலகம் முழுவதுமே செழிப்படையும்" என்று அருளிச்செய்து, கிருஷ்ணனைச் சிவபூஜா துரந்தரனுக்கினார். சிவபூஜையினாலே சர்வ பயங்களும் நீங்கிச் சர்வாபீஷ்டசித்திகளும், உயர்கதியும் எய்துதல் வெளிதாகும். பாரதத்திலும் சிவபக்தி மீக்கூற்றனை கொன்றை மாலையைக் கண்டவுடன் சிவவடிவ உணர்ச்சி தலைப்பட்டு, அம்மாலையைக் கடவாது ஒருவன் வாளாநின்றது மறிக.

விக்ரஹந் தேவதேவஸ்ய விஸ்வ மேதச் சராசரம்।
ஏதமர்த்தம் நஜாநந்தி பசவ: பாச கௌரவாத்॥

விருக்ஷஸ்ய மூலஸேகேந சாகா: புஷ்யந்தி வையதா।
சிவஸ்ய பூஜயா தத்துவத் புஷ்யத்யஸ்ய வபுர்ஜகது॥

ஸர்வோப காரண கரணம் ஸர்வாநுக்ரஹணந்ததா।
ஸர்வபயப்ரதாநஞ்ச சிவஸ்யாராதநம் விது:॥

(வாயுசம்மிதை: ௬, க. முதல்பார்க்க.)

வேரினிற் றெண்ணீர் வார்த்திடத் தருவின் கொம்புகள்
மிகத்தழைப்பதுபோல்
தாரணி கோன்றை யண்ணலைப் பூசை செய்திடில்
உலகெலாந் தழைக்கும்
ஏர்பெற வாதலால் மணிவண்ணா! இறைவனைப்
பூசி; என்றுரைத்தான்
பாரொடு விசும்பும் புகழ்ந்தெடுத் தேத்திப்
பணியுபமந் நியுவென்பான்.

(தமிழ் வாயுசம்: பஞ்சமூர்த்த, அ.)

இன்னும் பல கூறுவதிற் பயனென்னை? சுருக்கிக்காட்டிய விஷயங்களே விமலன் வியாபகத்தையும் அருட்டிறத்தையும் நன்கு புகட்டும். இந்திராதி தேவர்களும், சிவபூஜாபலத்தினாலே பேருஞ்சீருமடைந்தனர். சிவநிந்தகனாகிய தக்ஷப்பிரஜாபதி என்பவனும்

வேதோக்த மந்திர உச்சாரணத்துடன் சிவார்ச்சனை செய்தே, இறுதியில், ஆட்டுமுகமும், எல்லையில்லாத பல்வகைச் சிறப்புக்களும் பெற்றான்.

சிவபூஜை இத்துணை மகத்துவமுடையதென்று அடியோமாற் கூற முடியுமா? பல்லூழிகாலங் கழியினும், அவ்விறைவன் திருவருட்டிறம் இத்தன்மைத்தென்று சாற்றவோ ஆற்றலில்லேம். அவனருள் கைவரப்பெறின் யாவும இலகுவாகச் சித்தியுறும். எமது வல்லபம் இறைவனை நிமிர நிற்குமா? இயக்ஷவடிவந்தாங்கி வந்து இறைவரிட்ட திரணத்தை அசைக்கமுடியாது தேவர்கள் எய்த்த கதையுங் கேட்க.

சிவபூஜை ஆன்மார்த்தம் பரார்த்தம் என்னும் இரு பிரிவுடைத்து. ஆன்மார்த்தபூஜையைக் குறித்தே இங்கு சிறிது விளக்கப்பெற்றது. இது, பார்த்திபலிங்கபூஜை என்றுஞ் சொல்லப்படும். புற்றுமண், அக்ஷதை, புஷ்பம், வெண்ணெய், கூர்ச்சம் முதலிய பன்னிரு பொருள்கள் க்ஷணிகலிங்கபூஜைக்குரியதாகக் கொள்ளப்படும். இவைகளைச் சைவசமய நெறியுரை, ஆகமம் முதலியவற்றுட் பரக்கக் காண்க.

யாம், இதுகாறும் எழுதிப்போந்த இச்சுருக்க சூசனத்தால், எவ்வகைச் சீவர்களுக்கும், அவ்வவர் மனோரதம் பற்றிச் செவ்விய திருவருட்செல்வம் அளிக்கும், நவ்விசேர் கரத்து நம்பனே, அடியேங்களால் நம்பி வழிபடப்படும் பதித்துவமுடையார் என்பதூஉம், பெறுதற்கரிய மாநுடதேகத்தைப் பெற்றயாம், அப்பெருமானை அகத்தும் புறத்தும் பூஜித்துப் பிறவியாகிய அல்லலைக் களைந்து, அவரது அருண்முகிழ்ப்பாகிய சாகரத்தினாழ்ந்து, சொல்லரும் மோக்ஷசுகானந்தத்தைப்பெற முன்னி முயன்று வருதல் வேண்டும் என்பதூஉம், பிறவுமாம். இங்ஙனம் உணர்த்தப்பட்டமை யோர்ந்து; சிவநிந்தகர்களாகாது, சதாசிவ சிந்தித வந்தன கர்ம விசிஷ்டர்களாய் எல்லோரும் வாழ்வோமாக.

ஓம் தத்சத். ததா அஸ்து. சுபமஸ்து.

## திருப்புகழ்.

நாத விந்துக லாதீ நமோநம,
வேத மந்திரசொ ரூபா நமோநம,
ஞான பண்டித சாமீ நமோநம, வெகுகோடி
நாம சம்புகு மாரா நமோநம
போக அந்தரி பாலா நமோநம
நாக பந்தம யூரா நமோநம பரசூரர்
சேத தண்டவி நோதா நமோநம,
கீத கிண்கிணி பாதா நமோநம
தீர சம்பிரம வீரா நமோநம கிரிராஜ!
தீபமங்கள ஜோதீ நமோநம
தூய அம்பல லீலா நமோநம
தேவ குஞ்சரி பாகா நமோநம அருள்தாராய்;
ஈத லும்பல கோலால பூஜையும்
ஓத லுங்குண ஆசார நீதியும்
ஈர முங்குரு சீர்பாத சேவையு மறவாத,
ஏழ்த லம்புகழ் காவேரி யால்விளை
சோழ மண்டல மீதே மனோகர!
ராஜ கெம்பிர நாடாளு நாயக! வயலூரா!
ஆத ரம்பயில் ஆரூரர் தோழமை
சேர்தல் கொண்டவ ரோடேமு னாளினில்
ஆடல்வெம்பரி மீதேறி மாகயி லையிலேகி
ஆதி யந்தவு லாவாசு பாடிய
சேரர் கொங்கு வைகாவூர்ந னாடதில்
ஆவினன்குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே!

ஆறிரு தடந்தோள் வாழ்க, அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க; குக்குடம் வாழ்கச், செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க; யானைதன் னணங்கும் வாழ்க;
மாறிலா வள்ளி வாழ்க; வாழ்க சீரடியா ரெல்லாம்.

மெய்கண்டதேவர் திருவடி வாழ்க.

குமரகுருபரன் குரைகழல் சரணம்.

பிரசங்க ரத்தின தீபம் முதற்பாகம்
சம்பூரணம்

# திருநந்திதேவர் சிவபிரானிடம் வேண்டிக்கொண்ட பதினாறு பேறு.

இந்தக் காலத்தில் பொது நோக்காக நடக்கவேண்டும் என்று கூறுஞ் சைவசமயிகளுஞ் சிலருளர். அவர்கள் ஒரேமனநிலைமையைப் பெற இப் பதினாறு பேறுகள் உதவியாக இருக்கும் என்பது கருதி இங்கே அவற்றைக் குறிப்பிட்டாம்.

(க) மறைகள் நிந்தனை சைவநிந்தனைபொரு மனமும்,
தறுகண் ஐம்புலன் களுக்கேவல் செய்யுறாச் சதுரும்,
பிறவி தீதெனும் பேதையர் தம்மொடு பிணக்கும்,
உறுதி நல்லறம் செய்பவர் தங்களோ டுறவும்;

(உ) யாது நல்லன்பர் கேட்பினும் உதவுறும் இயல்பும்,
மாதவத் தினோர் ஒறுப்பினும் வணங்கிடு மகிழ்வும்,
ஓதும் நல்லுப தேசமெய் உறுதியும், அன்பர்,
தீது செய்யினும் சிவச்செயல் எனக்கொளும் தெளிவும்;

(ங) மனமும் வாக்கும்நின் அன்பர்பால் ஒருப்படு செயலும்,
கனவிலும் உனதன்பருக்(கு) அடிமையாங் கருத்தும்,
நினைவில் வேறொரு கடவுளை வழிபடா நிலையும்,
புனித! நின்புகழ் நாடொறும் உரைத்திடும் பொலிவும்;

(ச) தீமையாம்புறச் சமயங்கள் ஒழிந்திடு திறனும்,
வாய்மை யாகவே பிறர்பொருள் விழைவுறா வளனும்,
ஏழுறும் பரதாரம்நச் சிடாதநல் நோன்பும்
தூய்மை நெஞ்சில் யான் எனதெனுஞ் செருக்குறாத் துறவும்;

(ரு) துறக்கமீ துறையினும் நரகிற் றோயினும்
இறக்கினும் பிறக்கினும் இன்பந் துய்க்கினும்
பிறைக்கொழுந் தணிசடைப் பெரும! இவ்வாம்
மறத்திடா(து) எனக்குநீ வழங்கல் வேண்டுமால்.

இப் பரமசாதனங்களை யாமும் பிரார்த்தித்துப் பெற்று இன்படைவோமாக. சுபமஸ்து.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். | சேர்த்தல். | தவிர்த்தல். |
|---|---|---|---|---|---|
| க | சு | மனோநிலை | மனநிலை | | |
| உ | ௰ச | பாதமொமது | பாதமலர் | | |
| ச | ௧௰ | அச | அக | | |
| ரு | உஎ | பாலதாகாது. | பாலதாகா. | | |
| ரு | ௧௫ | வசனமாக | வசனீயமாக | | |
| சு | ச | தன்னொரு | தம்மொரு | | |
| [illegible] | உசு | போகம் | யோகம் | | |
| கூ | உஎ | போயண்மி | போயண்மி | இச்செய்யுளில் உ-ம் அடியில் யதிதவாழ்வில் என்பதும், ஐந்தெழுத்தும் என்பதன்பின் திருநீறுங் கண்டிகையும் என்பதுஞ் சேர்க்க. | |
| ...எ | ச | என்பதாதிய | என்பனவாதி | | |
| ...அ | உரு | வ்ஜந்தி | வ்ருஜந்தி | | |
| உ௰ | ௧௫ | கூறுபாடுளதாம். | கூறுபாடுள. | | |
| உக | கக | இறைவனாற்றல | இறைவனாற்றல் | | |
| உஉ | சு | | | | புராணம் |
| „ | ௨க | | | | வாசபேயம் |
| உரு | உ | சாக்கி | சாக்கினி | | |
| உசு | உ௰ | இவர்களை | இவைகளை | | |
| „ | உஉ | கொன்றொன்றை | கொன்றொடொன்றை | | |

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். | சேர்த்தல். | தவிர்த்தல். |
|---|---|---|---|---|---|
| உகூ | ௰அ | யிதா்வாதூாவா | யிதா்ஙாதூா | | |
| உஎ | உஎ | அானுக்கே | அானுக்கே | | |
| உஅ | உஉ | டென்னகை | டெண்வகை | | |
| ௩க | ௰௩ | பெயர்ப்பு | பெயர்ப்பு | | |
| ௩உ | உ | புறப்பினு | பிறப்பினு | | |
| சக | கூ | பெற்றிதாக | பெற்றித்தாக | | |
| ,, | ௩௰ | பர்க்கராக | பற்கராக | | |
| ௫௰ | கக | நோகி | நோக்கி | | |
| ,, | ௩௰ | | | | "யானேதும்பிறப்பஞ் சேன், இறப்பதனுக் கென்கடவேன்" என் பதைச் சிந்திக்கவே ண்டும். முழுதும் நீக் குக. |
| ௫௫ | உகூ | | | தத்துவாத்துவா என் பதன் பின் மந்திராத் துவா சேர்க்க. | |
| ௫௫ | உகூ | பிராரத்துவம் | பிராரத்தம் | | |
| ௫கூ | ௩ | பிராரத்துவம் | பிராரத்தம் | | |
| ,, | ௩ | ஆதிதெய்வீகம் | ஆதிதெய்விகம் | | |
| ,, | ச | ஆதிபௌாவதிகம் | ஆதிபௌதிகம் | | |
| ,, | ௫ | ஆதியான்மீகம் | ஆத்தியான்மிகம் | | |
| ௫அ | உச | குறைமர்ஜை | குறமாதை | | |